# மனித உரிமைக் கல்வி

தொடர் - III



# பாகுபாடு

(சாதி, சமய, இன, மொழி, பால், பிறப்பிடம்)

அய்க்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள்

1995 - 2004

அ.கி. வேங்கடசுப்பிரமணியன் இ.ஆ.ப. (ஓய்வு)
முன்னாள் செயலர்
மத்திய நுகர்வோர் அமைச்சகம்,
சென்னை-600 090

## வாழ்த்துரை

மனித உரிமைக் கல்வி நிறுவனம் மாணவர்களுக்கு மனித உரிமையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக ஏற்கெனவே ''மனித உரிமைக் கல்வி, ஓர் அறிமுகம்'', ''குழந்தை உரிமைகள்'' என இரு பாடநூல்களை வெளியிட்டுள்ளது. இவை ஆறு, ஏழு வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கு பயன்படுத்தப்பட்டன. தற்பொழுது எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் மனித உரிமையைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக ''பாகுபாடு'' என்ற தலைப்பில் மூன்றாவது புத்தகத்தை நிறுவனம் வெளிக் கொண்டுள்ளது.

''பாகுபாடு'' என்ற சொல் முக்கியமானது. அது 'வேறுபாடு'' என்ற சொல்லில் இருந்து வேறுபட்டுள்ளது. வேறுபாடு என்பது இயற்கையானது. எல்லா உயிரினங்களிலுமே வேறுபாடு உள்ளது. ஒரே நிலத்தில், ஒரே நீரைப் பருகி, ஒரு காற்றை சுவாசித்து, ஒரே சூரிய ஒளியில் இருக்கும் மரம் செடி கொடிகளில் எவ்வளவு வேறுபாடு, இதே போல் பறவைகளில், விலங்குகளில் மீன்களில் எவ்வளவு வேறுபாடு. ஒரு பறவையினம் அல்லது விலங்கினம் என்று எடுத்தால் கூட அதிலும் வேறுபாடு இருக்கும். இந்த வேறுபாடுகள் இல்லாமல் இருந்தால் உலகம் நமக்கு பிடிக்காமல் கூடப் போகலாம்.

இயற்கையில் உள்ள வேறுபாட்டில் மேலானது. கீழானது, உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பாகுபாடு கிடையாது. பாகுபாடு மனிதன் செயற்கையாக உருவாக்கியது. அதிலும் மனித இனத்திற்குள்ளேயே சாதி, சமய, இன, மொழி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் உயர்வு தாழ்வுப் பாகுபாடு மனிதனால் உருவாக்கப்பட்டது. ஒரு காலத்திற்கு பிறகு இந்தப் பாகுபாடுகளே இயற்கையானது, இது பெரிய தவறில்லை என்ற மனப்பாங்கும் உருவாகி விடுகிறது. இந்த மனப்பாங்கே ஆண்டான், அடிமை, மேலோர், கீழோர், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பிரிவுகளை ஏற்படுத்தி விடுகிறது.


இத்தகைய பாகுபாடுகள் உருவாகும் பொழுது, உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. எனவே, மனிதன் செயற்கையாக உருவாக்கிய பாகுபாடுகள் ஏற்படுத்தும் பிரச்சினைகளை இளம் வயதிலேயே மாணவர்கள் தெரிந்து கொள்ளவும், பாகுபாடற்ற, மனித உரிமை மதிக்கப்படும். ஒரு சமுதாயத்தை எதிர்காலத்திலே உருவாக்கவும், இந்தப் புத்தகம் நிச்சயம் பயன்படும் என்று நம்புகிறேன். புத்தகத்தில் எளிய நடையில் உயரிய கருத்துக்கள் மாணவர்கள் விரைவில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கப்பட்டுள்ளன. இறுதியில் சமத்துவ சமுதாயத்திற்கான மாணவர் சாசனம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த முயற்சி.

இந்த முயற்சி தொடர்ந்து வெற்றி பெற என் உளமார்ந்து வாழ்த்துக்களை மனித உரிமைக் கல்வி நிறுவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*அ.கி. வேங்கட சுப்ரமணியன்*

*23/9/2004*

# 1. பாகுபாடு



# 1. பாகுபாடு

**பாட நோக்கம்**

பாகுபாடு என்றால் என்ன என்பதனை மாணவர்களுக்குப் புரிய வைத்தல். ஆசிரியர் தன் சொந்த அனுபவங்களையும் மாணவர் தம் அனுபவங்களையும் பயன்படுத்தி விளங்க வைத்தல்.

**ஆசிரியர் நடவடிக்கை**

**ம**னித உரிமைக் கல்வி மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்லவும். மாணவர்களை மனித உரிமை தொடர்பான பாடல்களைப் பாடச் சொல்லி, மனித உரிமை பற்றிய நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ள வைத்து, ஒரு மகிழ்வான சூழலை உருவாக்கவும்.

**மாணவ, மாணவியரே!**

இரண்டாண்டுகள் மனித உரிமைக் கல்வி பயின்ற நீங்கள் மீண்டும் கற்றதை நினைவுபடுத்திப் பாருங்கள்.



**மனித உரிமைகளின் பண்புகள் எவை?**

ஆசிரியர் சொல்ல மாணவர்கள் திரும்பச் சொல்ல வேண்டும்.

அ. மனித உரிமைகள் மனிதர்க்கு **உரியன.**

ஆ. உரிமைகள் எல்லோர்க்கும் **பொதுவானவை; சமத்துவமானவை.**

இ. இவ்வுரிமைகள் மனிதரிடமிருந்து **பிரிக்க முடியாதவை.**

ஈ. இவ்வுரிமைகள் மக்களுக்கு **இயற்கையாய்** இருப்பன.

உ. அனைத்து உரிமைகளும் **அனைவர்க்கும் உரியன.**

ஊ. *இவ்வுரிமைகள் ஒன்றோடொன்று தொடர்புடையன.*

மீண்டும் மாணவர்களிடம் உரக்க சொல்லச் சொல்லுங்கள்.

மாணவர்கள் சொன்ன பின்பு கீழ்க்கண்ட கேள்விகளை அவர்களிடமே கேளுங்கள்.

அ. மனித உரிமைகள் அனைத்து மனிதர்களுக்கும் **பொதுவானவை** என்று நம்புகின்றீர்களா?

**ஆம்** **இல்லை**

ஆ. பொதுவான இவ்வுரிமைகளை அனைவரும் **சமமாக** அனுபவிக்கின்றனரா?

**ஆம்** **இல்லை**

இ. சிலர் அனுபவிக்கின்றனர்; பலர் அனுபவிக்கவில்லையே ஏன்?

**ஆம்** **இல்லை**

**பாகுபாடு**

**பாகுபாடு, இந்தியச் சமூக அமைப்பில் எழுதப்படா ஒரு சட்டம். சாதியப் பாகுபாடு, பாலியல் பாகுபாடு இரண்டும் நியாயப்படுத்தப்பட்ட சமூக ஒழுங்காகவே கருதப்படுகின்றன. நமது சமூகத்திலும் தொழில் பிரிவுகள் சாதிய, பாலியல் அடிப்படையில் படிநிலை அமைப்பிலேயே அமைந்துள்ளன.**

*தி இந்து 11.07.2002*

ஈ. **மனிதர்கள் சமவுரிமை உடையவர்கள்,**

**சமமாண்புடையவர்கள்,**

**சமமரியாதையுடையவர்கள்** என்று சொல்கிறோமே

அப்படியானால், சமமான இவ்வுரிமைகள், ஏன் ஒரு **சிலருக்கு மட்டும் மறுக்கப்படுகின்றன?**

எடுத்துக்காட்டாக

- செல்வந்தர்களுக்குரிய உரிமைகள் ஏன் ஏழைகளுக்கு இல்லை?
- உயர்சாதியினர்க்குரிய உரிமைகள் ஏன் தாழ்த்தப்பட்ட சாதியினர்க்கு இல்லை?
- ஆண்களுக்கு இருக்கும் உரிமைகள் ஏன் பெண்களுக்கு இல்லை?
- ஒரு மதத்தினர்க்கு உரிய உரிமைகள் ஏன் இன்னொரு மதத்தைச் சேர்ந்தவர்க்கு இல்லை?

உ. ஒரு சிலர்க்கு எல்லா உரிமைகளும் உள்ளன. பலர்க்கு இவ்வுரிமைகளே மறுக்கப்படுகின்றன.

**மனிதர்களுக்குள்ளே இவர்க்கு உரிமைகள் உண்டு.**

**மனிதர்களுக்குள்ளே இவர்க்கு உரிமைகள் இல்லை.**

**இதைத் தான் பாகுபாடு என்கிறோம்.**

சம உரிமைகளும் மாண்பும் மரியாதையும் உடைய மனிதர்களை எவற்றின் அடிப்படையிலெல்லாம் பாகுபடுத்துகிறோம்.

ஒரு சிலரை **சாதி**

ஒரு சிலரை **இனம்**

ஒரு சிலரை **மொழி**

ஒரு சிலரை **பால்**

ஒரு சிலரை **பிறப்பிடம்**

ஒரு சிலரை **பொருள்**

சமமாக நடத்த வேண்டிய மனிதர்களைப் பாகுபடுத்துவது ஒரு வன்முறை என்று ஏற்றுக் கொள்கிறீர்களா?

**இது ஒரு வன்முறை என்றால்**

**இது ஒரு மனித உரிமை மீறல் தானே?**

மாணவ, மாணவியரே !

- ♦ **சமத்துவத்தை** ♦ **மாண்பை**
- ♦ **சுதந்திரத்தை** ♦ **மரியாதையை**

மறுக்கும்

பாகுபாடு பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

ஒரு சனநாயக நாட்டில் சமத்துவம் மறுக்கப்பட்டு,

**பாகுபாடும்**
**ஒதுக்கலும்**
**ஒடுக்கலும்**
**அன்னியமாதலும்**
**சுரண்டலும்**

**உருவாக நாம் அனுமதிக்கலாமா?**

மாணவர்கள் : ***அனுமதிக்க மாட்டோம்.***

ஆசிரியர் : ***இப்பாகுபாடு சமூகத்தில் நிலவும் முறையை சில கதைகள் மூலம் பார்ப்போமா?***

**(மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவினரும் ஒரு கதையைப் படிக்கக் கூறவும். ஒவ்வொரு கதையின் கீழும் கொடுக்கப்பட்டிருக்கும் சிந்தனைக்கான கேள்வியை வாசித்து விடை தயார் செய்து வகுப்பில் பகிர்ந்து கொள்ளச் சொல்லவும்.)**

**கதை 1**

## என்ன விலை?



**வெ**ளிநாடு ஒன்றில் அதிக அளவில் அடிமை வியாபாரம் நடந்த காலம் அது. அந்நாட்டு மன்னன் அடிமைகளை வாங்குவதும், விற்பதுமான வியாபாரத்தை லாபகரமாக நடத்தி வந்தான்.

ஒரு நாள் வியாபாரிகள் மன்னனிடம் அடிமைகளை விற்பதற்காக வந்தனர். அப்பொழுது அவனுடைய மனதில் ஒரு திடீர் எண்ணம் தோன்றியது.

சபையில் இருந்தவர்களைப் பார்த்து, "சபையோரே ! அடிமைகளுக்கு ஒரு விலை இருக்கிறது. அதைப் போல ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மதிப்பு உள்ளது. அப்படிப் பார்த்தால் எனக்கு என்ன மதிப்பு இருக்கும்? என்பதைச் சரியாகச் சொல்பவர்களுக்கு லட்சம் ரூபாய் வெகுமதி தரப்படும்" என்று அறிவித்தான்.

வெகுமதியைப் பெற எல்லாருமே ஆசைப்பட்டு ஏதேதோ கூறினார்கள். மன்னர்க்கு அவர்கள் கூறிய பதில்கள் திருப்தி அளிக்கவில்லை. அப்பொழுது கிழிசல் உடைகளுடன் காணப்பட்ட ஒரு ஏழை எழுந்து, "அரசே, நான் உங்கள் மதிப்பைச் சரியாகச் சொல்கிறேன். என் உயிருக்கு உத்திரவாதம் தாருங்கள்!" என்றான்.

மன்னன் புன்னகையுடன் "சொல்!" என்றான். "அடிமைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ***ஒரு அடிமை யின் விலை ஆயிரம் ரூபாய். ஆனால், உங்களின் மதிப்பு சற்று கூடுதல். அதனால் உங்களுக்கு ஆயிரத்து ஒரு ரூபாய்"*** என்றான்.

"இவ்வளவுதானா என் மதிப்பு? நான் இந்நாட்டுக்கு அரசன். ஒரு அடிமையின் விலையைவிட என் மதிப்பு, கேவலம் ஒரு ரூபாய்தான் அதிகமா?" என்று வியப்புடன் கேட்டான் மன்னன்.

"மன்னா ! உடலை வருத்தி வாழ்பவன் அடிமை. அவனுடைய கஷ்டத்திற்கு எவ்வளவு விலை தந்தாலும் போதாது. நீங்களோ உழைக்காமல் வாழ்பவர். அதனால் மதிப்பு இல்லை. என்றாலும், உங்கள் உடல் மீது காணப்படும் விலை உயர்ந்த துணிகள், ஆபரணங்களுக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புப் போடலாம். மனிதப் பிறவியாகப் பிறந்த காரணத்துக்காக உங்களுக்கு ஒரு ரூபாய் போடலாம்."

"ஆண்டவர் படைக்கும் போது யாரையும் அடிமையாகப் படைக்கவில்லை. 'பணக்காரர் களுக்குப் பத்துக் கண்கள், ஏழைக்கு இரண்டு கண்கள்' என்று படைக்கவில்லை.

"நீங்கள் அரசராக இருந்து கொண்டு மனிதர்களை விற்பனை செய்வது தவறான காரியம். தவறு செய்யும் உங்கள் மதிப்பு ஒரு ரூபாயைவிட அதிகம் இருக்க முடியாது" என்று கூறினான் அந்த ஏழை.

மன்னன் சிந்தித்தான். ஒரு லட்சம் ரூபாயை அந்த ஏழைக்குப் பரிசாக அளித்து, " நான் இனி அடிமைகளை வாங்கவோ, விற்கவோ மாட்டேன். இனி என் நாட்டில் அடிமை வியாபாரம் அடியோடு ஒழிக்கப்படும்!" என்று உறுதியாகக் கூறினான்.

**தினமலர்-சிறுவர்மலர், மே 28, 2004**

சிந்தனைக்கு

1. இக்கதை மனிதர்கள் அதிகாரத்தில் இருந்தாலும், செல்வச் செழிப்பில் இருந்தாலும் அடிப்படையில் சமமானவர்கள் என்பதை எப்படி விளக்குகிறது.

2. ஒரு மனிதன் பிற மனிதரைவிட உயர்வானவன் என்று கர்வம் கொள்ள காரணங்கள் என்ன?

   எ.டு – செல்வம்
   - பதவி
   - அழகு


   வேறு எவையெல்லாம்?

3. இக்கர்வம் இன்னொரு மனிதனை எப்படியெல்லாம் பாகுபடுத்த வைக்கிறது.

கதை 2

## செல்ல நாய்க்குட்டியும் ஏழை பணிப்பெண்ணும்

**அ**வர்கள் வீட்டு நாய் ஜிம்மிக்கு உடம்பு சரியில்லை. வீட்டம்மா பிரேமா கவலையோடு, கணவர் அலுவலகம் செல்வாரே என்ற அவசரமோ, கவலையோ இல்லாமல், அன்புள்ள நாய் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள். அன்று பார்த்து வேலைக்காரியும் வரவில்லை.



வாசலில் வேலைக்காரி செல்லம்மாவின் கணவன், "அம்மா" என்று குரல் கொடுத்துக் கொண்டே தலையைச் சொரிந்து கொண்டு நின்றான். "என்ன கேடு வந்துச்சு ஒம் பொஞ்சாதிக்கு? வேலைக்கு இன்னும் வர்ரலியே. ஏன் என்ன காரணம்?" என்று எரிந்து விழுந்தாள்.

"அம்மா ராத்திரி என் பொண்ணுக்கு ஒடம்பு சரியில்லாமப் போயிடுச்சிம்மா. அடுத்த மாசந்தான் பிரசவம். அந்தப் பெண்ணை

ஆஸ்பத்திரியில் சேர்க்க சொல்லிட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு உடனே ரத்தம் ஏத்தினா தான் கொழந்தையே பொறக்கும்னு சொல்லிட்டாங்க." என்று அழ மாட்டாத குறையாகச் சொன்னான்.

"ஏன் உன் ரத்தத்தைக் கொடுக்கிறது தானே?" என்று கேட்டாள் பிரேமா.

"உடம்புல சத்து இல்லையென்று என் ரத்தத்தை எடுக்கவே கூடாதுனு சொல்லிட்டாங்க" என்றான்.

"ஏன் ஒம்பொஞ்சாதிய கொடுக்கச் சொல்றதுதானே" என்றாள் எகத்தாளமாக.

"ஐயோ அது வவுத்துக்கு இல்லாம வத்திப் போய் கெடக்குதும்மா. அதுகிட்ட ஏதும்மா ரத்தம்" என்றான் அவன்.

"நான் ஒரு வழி சொல்றேன் கேக்கறியா?" என்றாள் பிரேமா.

"சொல்லுங்கம்மா கேக்கறேன்" என்றான் மலர்ந்த முகத்தோடு.

"நீயும் ஒன்னக் கட்டிக்கிட்ட பாவத்துக்கு ஒம் பொஞ்சாதியும், உங்க ரெண்டு பேருக்கும் பொறந்த பாவத்துக்காக ஒம் பெண்ணும் மூணு பேரும் ஒரே நேரத்துல செத்து ஒழிஞ்சிடுங்க. பிரச்சினையெல்லாம் முடிஞ்சிடும்" என்றாள் பிரேமா கோபத்தின் எல்லைக்கே போய்.

அவளின் கோபத்தைப் பொருட்படுத்தாதவாறு, "அம்மா, ஒரு நூறு ரூபாயாவது செல்லம்மா வாங்கினு வர சொல்லிச்சும்மா" என்றான்.

"நானே ஜிம்மி ஒடம்புக்கு எவ்வளவு செலவாகுமோன்னு கவலைப்பட்டுக்கிட்டு ஒட்கார்ந் திருக்கேன். உனக்குத் தர எங்கிட்ட ஒரு பைசாகூட கிடையாது" என்று முகத்திலடித்தவாறு கூறிவிட்டு,

"ஆனந்த் சீக்கிரம் போயி ஒரு ஆட்டோ கொண்டு வா. சீக்கிரம் ஜிம்மியைக் கூட்டிட்டு ஆஸ்பத்திரிக்குப் போகணும் வா சீக்கிரம்" என்று கூறிவிட்டுக் கிளம்பத் தயாரானாள் பிரேமா.

**அரும்பு, ஜூலை 2001**

**சிந்தனைக்கு**

1. **மனிதர்களை**

| | | |
|---|---|---|
| **பணக்காரன்** | - | **ஏழை** |
| **ஆண்** | - | **பெண்** |
| **உயர்சாதி** | - | **தாழ்ந்த சாதி** |

என்று பாகுபடுத்துகிறோம்.

அ. இக்கதையில் பாகுபடுத்தப்படுவோர் யார்?

ஆ. யாருக்காக யார் பாகுபடுத்தப்பட்டனர்?

2. **உங்களூரில் இம்மாதிரி நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறீர்களா?**

அ. இம்மாதிரி நிகழ்வுகளைக் கண்டு கவலையுற்றிருக்கிறீர்களா?

ஆ. வீட்டம்மா பிரேமாவின் இவ்வளவு கர்வத்திற்கு என்ன காரணம் என்று யோசியுங்கள்.

கதை 3

## இன்னொரு உலகம்



அகிலாவின் பெற்றோர் பெரிய பணக்காரர்கள். அகிலா கேட்டதெல்லாம் அவள் பெற்றோர் மறுப்பதில்லை. அன்று அகிலாவின் பிறந்த நாள். வீடு முழுக்க விருந்தினர்கள் கூட்டம் அகிலாவுக்கு ஏராளமான பரிசுப் பொருட்கள் கிடைத்தன. அகிலா தன் அறைக்குச் சென்று பெற்றோர் வாங்கித் தந்த நவரத்தின மாலையை அணிந்து கொண்டு கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென ஒரு சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்க ஏழ்மைக் கோலத்தில் ஒரு சிறுமி நின்றிருந்தாள்.

"ஏய் . . . யார் நீ !"

என் பேரு கண்ணம்மா . . . . வழி தவறி இங்கே வந்துட்டேன்."

"திருட வந்துட்டுப் பொய் சொல்றியா?" முகம் சுழித்தவாறே அவளை மிரட்டினாள் அகிலா. கண்ணம்மாவின் கண்களிலிருந்து பொல பொலவென்று நீர் கொட்டியது.

"நான் அப்படியெல்லாம் இல்ல! எங்கப்பா உங்க தோட்டத்தில் வேலை செய்றாரு. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அப்பாவுக்குச் சாப்பாடு கொண்டு வந்தேன்." அழுதபடியே அச்சிறுமி வெளியேறினாள்.

மகிழ்ச்சியைக் கெடுத்து விட்டாளே என்று ஏற்கனவே எரிச்சலடைந்திருந்த அகிலா அறைக்குள் திரும்பிய போது அதிர்ச்சியடைந்தாள். அவளின் நவரத்தின மாலையைச் சிட்டுக் குருவியொன்று வாயில் வைத்துக் கொண்டு பறந்து சென்று கொண்டிருந்தது. குருவியின் பின்னே தலைதெறிக்க ஓடினாள். நீண்ட தொலைவு கடந்த பிறகு குருவி ஓர் ஓட்டு வீட்டின் மேல் மாலையைப் போட்டு விட்டுப் பறந்து விட்டது. அகிலா அந்த வீட்டினுள் நுழைந்தாள். வீட்டின் மூலையில் ஓர் அம்மா நார்க்கட்டிலில் படுத்திருந்தாள். ஒரு சிறுமி ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் எழுந்து சென்று அடுப்படியில் ஏதோ செய்தாள். பிறகு ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள். அகிலா அவள் முகத்தை உற்றுப் பார்த்தாள். அது கண்ணம்மா !

"நாளைக்குப் பரீட்சையா கண்ணு? பாவம்மா நீ . .. . . . என்னால் உனக்குக் கஷ்டம் . .. ." அம்மா இருமிக் கொண்டே சொல்ல கண்ணம்மா அருகில் சென்று தாயைத் தட்டிக் கொடுத்தாள்.

"ஒண்ணுமில்லம்மா . . . உனக்கு உதவி செய்றது எனக்குச் சந்தோஷம்தாம்மா, நா எப்படியும் படிச்சிடுவேன்." அம்மாவுக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு மீண்டும் படிக்க ஆரம்பித்தாள்.

அகிலா தனது நிலையையும் கண்ணம்மாவின் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். கண்களில் நீர் கசிந்தது. நான் ஏன் இவர்களைப் பற்றியெல்லாம் நினைத்துப் பார்க்கவில்லை. குருவி வடிவில் எனக்குக் கிடைத்த செய்தியென்ன?

**(தினமணி, சிறுவர்மணி 2.8.2003)**

---

**மாணவர்களே ! கதையைப் படித்தீர்களா? நீங்கள் மனசுக்குள் என்ன நினைக்கிறீர்கள்? இவைகள் வெறும் கதைகளா? நம்மவூர்ல எல்லா இடத்துலேயும் பார்க்கிற உண்மை நிகழ்வுகளா? இல்லையா?**

---

சிந்தனைக்கு

1. **உங்களூரில் அகிலா போன்ற பணக்காரச் சிறுமிகள் இருக்கின்றனரா?**

   – அகிலா போன்ற பணக்காரச் சிறுமிகள் என்னென்ன வசதிகள் அனுபவிக்கின்றனர் என்பதை எழுது.

   - எ.டு. **கார், பெரிய வீடு, நல்ல உடை** முதலியன

2. **கண்ணம்மா போன்ற சிறுமிகள் இருக்கின்றனரா?**

   – கண்ணம்மா போன்ற சிறுமிகளின் குடும்ப நிலை எப்படியிருக்கிறது?

   – அப்பா கூலி வேலை செய்கிறாரா?

   – யார் வீட்டில் வேலை செய்கிறார்.

   – அம்மாவும் கூலிவேலை செய்கிறாரா?

   – வீடு குடிசை வீடா?

   – கண்ணம்மா போன்ற குடும்பத்துக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனரா?

   – பள்ளிக்குச் சென்றால் எம்மாதிரிப் பள்ளி?

   – ஆங்கிலப் பள்ளியா? தமிழ் வழிப் பள்ளியா? தனியாார்ப் பள்ளியா? அரசுப் பள்ளியா?

   – கண்ணம்மா போன்ற குழந்தைகள் அணிந்திருக்கும் ஆடைகள்

   ஒரே ஆடை, மிகப் பழைய ஆடை, ஒட்டுப் போட்ட ஆடை.


3. **அனைவர்க்கும் உரிமைகள் சமம் என்று ஏற்கனவே படித்துள்ளீர்கள். பின் ஏன் அகிலாவும் கண்ணம்மாவும் சமமாக இல்லை.**

| | |
|---|---|
| ✪ அகிலாவுக்கு அழகான உடை, | ✪ கண்ணம்மாவுக்கு அழுக்கடைந்த கிழிந்த உடை, |
| ✪ சத்துள்ள உணவு, | ✪ சத்தற்ற வெறுங்கஞ்சி தான் உணவு |
| ✪ வசதியான வீடு | ✪ தங்குவதற்கு குடிசை வீடு |

ஏனிந்தப் பாகுபாடு !

கதை 4

## ப்ளீஸ் கருணை காட்டுங்க



**மு**த்து ஒரு உப்பு வியாபாரி. தினமும் இரண்டு மூட்டை உப்பினை கழுதையின் முதுகில் ஏற்றிச் சென்று விற்பனை செய்து வந்தான். வியாபாரம் நன்றாக நடந்ததால், இன்னும் லாபம் வேண்டி, மூன்று மூட்டை உப்பினைக் கழுதையின் மீது ஏற்றினான். வழக்கத்துக்கு மாறாக, அதிக உப்பு முதுகில் ஏற்றப்பட்டதால் கழுதைக்கு முதுகு வலித்தது. கழுதையால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. முத்து கோபப்பட்டுக் கடுமையாகக் கழுதையை அடித்தான். கழுதை வலியோடு மூட்டையைத் தூக்கிச் சென்றது. முத்துவுக்கு நல்ல லாபம். கழுதைக்கு முதுகு ஒடிவது போல வலி. ஏன் கழுதையாகப் பிறந்தோம் என்று தனக்குள் புலம்பியது. மறுநாளும் முதல் நாளைப் போன்று மூன்று மூட்டைகளை ஏற்றினான். கழுதையால் நடக்கவே முடியவில்லை. முத்து கம்பால் ஓங்கி அடித்தான். கழுதை கத்தியது. முத்து கண்டு கொள்ளவில்லை.

உப்பு வியாபாரத்துக்குச் செல்ல வேண்டுமென்றால் வழியில் ஒரு ஆற்றைக் கடந்து தான் செல்ல வேண்டும். இனிமேல் நடக்க முடியாது என்ற நிலையில் கழுதை ஆற்றுத் தண்ணீரில் உட்கார்ந்து விடவே, முத்து கழுதையை அடித்துப் பார்த்தான். கழுதை எந்திரிக்கவே இல்லை. தண்ணீரில் உப்பு கரையவே, எடை குறைந்தது. கழுதை எழுந்து நடந்தது. முத்துவுக்கு ஏகப்பட்ட நஷ்டம். மறுநாளும் முத்து உப்பு மூட்டை ஏற்றினான். முதல் நாள் போலவே ஆற்றில் படுத்து விட்டது. உப்பும் கரைந்தது.

கழுதையின் மீது முத்துவுக்குப் பயங்கர கோபம். கழுதைக்குப் பாடம் புகட்ட விரும்பினான். உப்புக்குப் பதிலாக பஞ்சு மூட்டைகளை கழுதையின் முதுகில் ஏற்ற, கழுதை தண்ணீரில் முழுகினால் பஞ்சு மூட்டை இன்னும் கனக்கும். கழுதை அதற்குப் பிறகு தண்ணீரில் முழுகாது என்று பலர் யோசனை சொல்ல, அவ்வாறே செய்தான். இப்போது கழுதை எளிதாகச் சுமந்து சென்றது. கழுதை ஆற்றில் உட்காரவே இல்லை.

இரண்டு மூட்டைக்கு மேல் ஏற்றும்போது தானே கழுதை முழுகியது. இரண்டு மூட்டை ஏற்றும் போது கழுதை தாங்கிக் கொண்டதை எண்ணிப் பார்த்தான். இனி இரண்டு மூட்டைக்கு மேல் கழுதையின் முதுகில் ஏற்றக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான்.

அரும்பு, மார்ச் 1998

சிந்தனைக்கு

- ⇨ கழுதையின் மீது அளவுக்கு மீறி உப்புமூட்டை சுமத்தப்பட்டது ஒரு இரக்கமற்ற செயல் என்பதனை ஏற்றுக் கொள்கிறாயா?
- ⇨ கழுதை மனிதர்க்கு வேலை செய்யத் தானே படைக்கப்பட்டிருக்கிறது? ஆகவே கழுதை துன்பப்பட்டது சரிதான் என்கிறாயா? இல்லை என்றால் ஏன்?
- ⇨ வாயில்லா கழுதை ஆற்றின் நடுவில் உட்கார்ந்தது எதிர்ப்பைக் காட்டியது சரியா? தவறா?
- ⇨ உங்களூரில் முத்துப் போன்ற மனிதர்கள் உள்ளனரா?
- ⇨ முத்துப் போன்ற மனிதர்களும் கழுதை போன்று வேலை செய்பவர்களும் இருக்கிறார்களா?

– *கழுதையை நமதூரிலுள்ள*

**ஒரு பண்ணையாளோடு,**

**விவசாயக் கூலியாளோடு,**

**கொத்தடிமையோடு**

**குழந்தைத் தொழிலாளியோடு**

*ஒப்பிட்டுப் பார்!*

**பாகுபாட்டின் பொருள் தெரியும்!**

**வீட்டுப்பயிற்சி**


அ. பாகுபாடு ஒரு வன்முறை

பாகுபாடு ஒரு மனித உரிமை மீறல்

என்ற தலைப்பில் கட்டுரையொன்று தயார் செய்து, வகுப்பில் வாசிக்கவும்.

ஆ. பாகுபாட்டிற்கெதிரான சில முழக்கங்களைத் தயார் செய்து, வகுப்பறையின் கரும்பலகையில் எழுதவும்.

# ௨. பாலியல் பாகுபாடு




# 2. பாலியல் பாகுபாடு

## பாகுபடுத்தப்பெறும் பெண்கள்

### பாட நோக்கம்

- மக்கள் எண்ணிக்கையில் சரிபாதியானப் பெண்கள் பாகுபடுத்தப் பெறல் மனித உரிமை மீறல் என்பதனை எடுத்துக் காட்டல்.

- பெண்கள் தம் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் எப்படியெல்லாம் பாகுபடுத்தப் பெறுகின்றனர் என்பதனைப் படம் பிடித்தல்.

- ஆண், பெண் சமத்துவமற்ற சமூகம் ஒரு முழுமையான சனநாயக சமூகமாக இருக்க முடியாது என்ற கருத்தை விளக்கல்.


**''பெண்ணடிமை தீருமட்டும்**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே**

என்பதனால்

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்தி ....**
**ஆண்களோடு பெண்களும்**
**சரிநிகர் சமானமாக''**

வாழ மாணவப் பருவத்திலேயே விழிப்புணர்வை உருவாக்கல்.

## பொம்மையா பெண் ?



*இன்று பெண்கள் வேலை என்ன? ஆணின் நலத்திற்குப் பயன்படுவதற்கும், ஆணின் திருப்திக்கும், ஆணின் பெருமைக்கும் ஒரு கருவி என்பதல்லாமல் வேறு என்ன என்று சிந்தித்துப் பாருங்கள். ஆணுக்கு ஒரு* **சமையல்காரி**, *ஒரு ஆணின் வீட்டுக்கு ஒரு* **காவல்காரி**, *ஒரு ஆணின் குடும்பப் பெருக்கிற்கு ஒரு பிள்ளை விளைக்கும்* **பண்ணை;** *ஒரு ஆணின் கண் அழகிற்கும் மனப் புளங்காங்கிதத்திற்கும் ஒரு அழகிய* **அலங்கரிக்கப்பட்ட பொம்மை,** *என்பதல்லாமல் பெண்கள் எதற்குப் பயன்படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!*

*இது என்ன நியாயம்? மனித சமுதாயம் தவிர மற்றபடி மிருகம், பட்சி, பூச்சி, ஐந்து முதலியவைகளில் வேறு எந்த ஜீவனாவது* **ஆண்களுக்காகவே இருக்கிறோம்** *என்ற கருத்துடன், நடத்தையுடன் இருக்கிறதா என்று பாருங்கள் ! இந்த இழிநிலை பெண்களுக்கு அவமானமாய்த் தோன்றவில்லை என்பதனாலேயே ஆண்கள், பெண்களை இவ்வளவு அட்டூழியமாக நடத்தலாமா என்று கேட்கிறேன்.*

**- தந்தை பெரியார்**

பெண்கள் மீது காட்டப்படுகின்ற பாகுபாடு, ஆணோடு பெண்ணிற்கான சமத்துவத்தை மறுப்பது என்பதால், இது அநீதியானது; பெண்ணின் மாண்புக்கு எதிரானது. *- பிரிவு 1*

ஏற்கனவே இருக்கின்ற சட்டங்கள், பழக்க வழக்கங்கள், ஒழுங்குகள் பெண்கள் மீது காட்டப்படும் வன்முறைகளுக்குத் துணைபோகுமானால் அச்சட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும். சமநீதியோட கூடிய உரிமை சாசனங்கள் அல்லது சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

*- பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை, பிரிவு 2*

**ஆசிரியர் நடவடிக்கை**

– பாகுபாட்டின் பொருளை மீண்டும் மாணவர்க்கு நினைவுபடுத்துக.

– பெண்கள் மீது காட்டப் பெறும் பாகுபாட்டை மையப் பொருளாகக் கொண்டு பெண்ணுரிமை தினம் கொண்டாட்டம் போல பாடம் அமையும் வகையில் பாடத்தை நடத்துக.

## பெண்ணுரிமை தினம்

மதுரை தமுக்கம் மைதானத்தில் மார்ச் எட்டாம் நாளன்று **பெண்ணுரிமைகள் தினம்** கொண்டாடப்பட்டது. இம்மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்தும் அகில இந்திய அளவிலிருந்தும் பெண்ணுரிமை இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவர்களோடு மனித உரிமைக் கல்வி ஆசிரியர்களும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர். மாநாட்டிற்கு மதுரை மாவட்ட ஆட்சியர் திருமதி. லட்சுமி, இ.ஆ.ப. தலைமை ஏற்றார்.

### தோழிகளே, தோழர்களே !

மக்களில் பாதிப்பேராம் பெண்களை உடல்ரீதியாக வேறுபட்டவர் என்பதால், எப்படியெல்லாம் பாலியல் ரீதியாக பாகுபடுத்துகிறோம் என்பதைப் பார்க்கப் போகிறோம். பெண்கள் பாகுபாட்டிற்குள்ளாகும் ஒவ்வொரு கட்டத்தையும் விரிவாக ஆராயவிருக்கிறோம்.


பாகுபாட்டின் முதற்கட்டத்தைப் பற்றிப் பேச திருமதி. செல்வியை அழைக்கிறேன்.

### 1. கனவு நிலையில்

பெண்கள் மீது பாகுபாடு காட்டப்படுகிறது. கருவறையிலிருந்து கல்லறை வரை பாகுபடுத்தப்படு கின்றனர். உண்மை! பெண், தாய் வயிற்றில் **கருவாகு முன்னே பாகுபடுத்தப்படுகிறாள்** என்பது உங்களுக்குத் தெரியுமா?

*எந்தவொரு மனிதரின் வாழ்வுரிமையும் பறிக்கப் பெறல் கூடாது.*

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 21



ஒரு திருமணம் நடக்கிறது. தம்பதியர் மகிழ்ச்சியோடு திருமண வாழ்வின் இன்பத்தை அனுபவிக்கின்றனர். திருமணம் முடிந்து சில மாதங்களோ அல்லது ஒரு வருடமோ ஆனவுடன் குழந்தை வேண்டும் என்று ஆசைப்படுவது இயற்கை தானே! இது நியாயமான ஆசை தானே!

திருவள்ளுவரே குழந்தையைப் பெற்றுக் கொள்வதுதான் மணவாழ்க்கையின் அணிகலன் என்று சொல்லவில்லையா. குழந்தைப் பேற்றில் தான் மணவாழ்க்கையின் நிறைவு இருக்கிறது. உண்மைதான். நம் ஊரில் குழந்தை வேண்டும் என்று ***ஆசைப்படுகிற தம்பதியர், எந்தக் குழந்தையானாலும் சரி என்று ஏற்றுக் கொள்கின்றனரா? அல்லது ஆண் குழந்தைதான் வேண்டும் என்று ஆசைப் படுகின்றனரா? வயிற்றில் குழந்தை கருவாகும் முன்னே, கனவில்கூட பெண் குழந்தையை விரும்புவதில்லையே !***

**எனக்கொரு மகன் பிறப்பான் என்று கனவு காணும் தம்பதியர் எங்காவது தம் முதல் குழந்தையை எனக்கொரு 'மகள்' பிறப்பாள் என்று கனவு காண்கின்றனரா?**

ஏன் கனவிலும் பாகுபாடு ! கனவிலும் வளர்க்கப்படும் இப்பாகுபாட்டிற்கு என்ன காரணம்? இங்கு திரளாக வந்திருக்கின்ற மாணவர்களைக் கேட்கிறேன். உங்கள் பெற்றோரிடம் கேளுங்கள். அவர்கள் திருமணம் முடிந்த நிலையில் குழந்தை பற்றிய கனவு பொதுவாக குழந்தை பற்றியதா? ஆனால், ஆண் குழந்தை தான் வேண்டும் என்பது பற்றியதா?

**மாணவி** : நாங்கள் வீட்ல போய்க் கட்டாயம் கேட்போம்.

**கூட்டத்தில்** : சிரிப்பு

**சிந்தனைக்கு**

அ. கனவில் கூட ஏன் பெண் குழந்தை வேண்டாமென்று எண்ணுகின்றனர்?


ஆ. கனவில்கூட ஏன் ஆண் குழந்தை தான் வேண்டுமென்று எண்ணுகின்றனர்?

**நம் சமுகம் ஆண் குழந்தை பற்றியும், பெண் குழந்தை பற்றியும் கொண்டிருக்கும் கருத்துக்களை எண்ணிப்பார்.**

**உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொரு மனிதரின் உள்ளார்ந்த உணர்விலிருந்து எழுகிறது. இந்த உரிமை சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டும். எவருக்கும் இது தன்னிச்சையாக மறுக்கப்படக் கூடாது.**

***அகில உலக சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்பாடு, 1966, பிரிவு 6.1.***

## 2. கருநிலையில்



**தலைவர் :** பாகுபாடு கனவுநிலையிலே தொடங்கி விடுகிற அவலம் கண்டோம். மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் மருத்துவர் கலா அவர்கள் கருநிலையில் பெண் எவ்வாறு பாகுபடுத்தப் படுகிறாள் என்பது பற்றி உங்கள் முன் பேசுவார்.

***கலா :*** ஆண் குழந்தை வேண்டும் என கனவு காண்கிறோம். கனவு தோற்றுப் போனால் என்ன செய்வது? அதற்குத் தான் கருவை ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்க வேறுவழி இருக்கிறதே! கருவிலே கண்டு அழித்துவிட வேண்டியது தானே!

**பங்கேற்பாளர் கேள்வி** : பெண் கரு உருவாவதற்குப் பெண்தான் காரணமா? ஆண் காரணமா?

**கட்டம்** **பெண்கள் மீதான வன்முறை வடிவங்கள்**

| | | | |
|---|---|---|---|
|  | **பிறக்குமுன்** | - | கருக்கலைப்பு, கருவுற்ற நிலையில் அடித்தல், பாலியல் பலாத்காரம் |
|  | **குழந்தை** | - | சிசுக்கொலை, திட்டுதல், உணவு, மருத்துவத்தில் காட்டப்படும் பாகுபாடு. |
|  | **பெண் குழந்தை** | - | குழந்தைத் திருமணம், அந்நியராலும், குடும்பத் தாராலும் பாலியல் பலாத்காரம், குழந்தை விபசாரம். |
|  | **இளம்பெண்** | - | காதலிப்பதாகச் சொல்லி ஏமாற்றல் -பொருளாதார ரீதியாகச் சுரண்டல். பணியிடங்களில் வன்முறை, பாலியல் பலாத்காரம், கட்டாய விபசாரம், கடத்தல். |
|  | **மனைவி** | - | நெருக்கமான ஆண்களால் ஏமாற்றப்படல், பலாத்காரம், வரதட்சணை, கொலை, உளரீதியான வன்முறை, பணியிடங்களில் பாலியல் வன்முறை, உடல் ஊனமுற்றோர் மீது காட்டப்படும் பாலியல் வன்முறை. |
|  | **முதுமை** | - | விதவைகள் மீது காட்டப்பெறும் அவதூறு மற்றும் பாகுபாடு. |

***ஹியூமன் ஸ்கேப் – ஜூலை 16, 2003.***

**கலா :** பெண் கரு உருவாவதற்குக் காரணம் பெண்தான் என்ற தவறான கருத்து சமூகத்திலே நிலவி வருகிறது. பெண்தான் காரணம் என தவறாகக் கருதுவதால் கணவனும் கணவன் வீட்டாரும் அவளை இளக்காரமாகப் பேசுகிறார்கள். கரு ஆணா, பெண்ணா என்று நிர்ணயிப்பது ஆண்களிடமுள்ள குரோமோசோம்தான். இது அறிவியல் உண்மை. ஆணா பெண்ணா என்று இயற்கை ரீதியில் நிர்ணயிப்பது பெண் அல்ல, ஆண்தான். இது தெரியாமல் நாம் பெண் குழந்தை பிறப்பதற்குப் பெண்களைக் காரணமாக்குகிறோம்.


கருவுக்கு உயிருள்ளது; இந்த உயிர் வாழ்வதற்கான உரிமையுடையது; கரு நிலையில் ஆண்–பெண் வேறுபாடு காட்டுவது, உயிரைப் பறிப்பது; வாழ்வுரிமையைப் பறிப்பது; அதுவும் பெண் கரு என்று கண்டறிந்து சிதைக்கப்படுகின்றபோது, பாகுபாடு காட்டப்படுகிறது. **கருக்கலைப்பு மூலம் சிதைக்கப்படுவது, ஓர் உயிர் மட்டுமல்ல, இவ்வுயிரைத் தர கருவியாக இருந்த தாய் தந்தையரின் மாண்பும்; உரிமையும் கூட.**

ஆக இங்கு இருவகை மீறல்கள் நிகழ்கின்றன : (அ) கருக்கலைப்பு – முதல் மீறல் (ஆ) பெண் கரு எனக் கண்டறிந்து பாகுபாடு காட்டப்பட்டு கலைத்தல் இரண்டாவது மீறல். **உருவாகும் உயிரை, அதன் அனுமதியின்றி, விசாரணையின்றி, தண்டிக்கும் உரிமை யாருக்கும் இல்லை.**

## 3. மழலை நிலையில்

“தாயே . ... .!
அரசு ஆணைக்குப் பயந்து . . .
ஊருக்குள் தவறி வந்த
கொடிய விலங்குகளைக்கூட
உயிருக்கு ஊறின்றி
வனத்துறையிடம்
ஒப்படைக்கிறார்கள்.
பெண் சிசு
நாங்களென்ன
அவைகளைவிட கொடியவர்களா?
கள்ளிப்பாலால்
கல்லறைக்கு அனுப்புகிறீர்களே !’’

- சாந்தி நடராஜன், போத்தனூர்



*ஒவ்வொருவரும் தாங்கள் உயிர் வாழ்வதற்கும், தங்களது சுதந்திரத்திற்கும் மற்றும் பாதுகாப்பிற்கும் உரிமையுள்ளவர்கள்.*

**அகில உலக மனித உரிமைப் பிரகடனம் 1948, பிரிவு 3**

**தலைவர் :** மழலை ஆண்பாலா? பெண் பாலா?

மழலை என்றால் ஆண், பெண் என்ற இரு பாலையும் தானே குறிக்கும். ஆனால், ஆண் எனும் மழலைக்குக் கொடுக்கும் மதிப்பைப் பெண் மழலைக்குக் கொடுக்கிறோமா? மழலையுள் பெண் மழலையை மட்டும் ஏன் பாகுபடுத்துகிறோம்?

இம்மாநாட்டிற்கு வந்திருக்கும் இவர்கள் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்களேன்.

**நபர் 1**

"இன்னிக்குப் பொம்பள புள்ளைகளைக் கட்டிக் கொடுக்கிறது மலை முழுங்குகிற விஷயமாக இருக்குங்க. அன்றாட பொழப்பையே நடத்துறதுக்கு வழி இல்லாம தவிக்கிற நாங்க எப்படி வரதட்சணை கொடுத்துப் புள்ளைகளைக் கரையேத்த முடியும்? ஆகவே சிசுவைக் கொன்னுடுறோம்."



**நபர் 2**



"புள்ளைகளை எப்படியோ வாயைக்கட்டி வயித்தக் கட்டிக் கரையேத்திடலாம், கல்யாணத்துக்குப் பின்னா லேயும் 'அத வாங்கிட்டு வா, இத வாங்கிட்டு வா'ன்னு புருஷங்காரன் பொண்டாட்டிய அடிச்சு விரட்டுறான், கொடுமைப் படுத்துறான். அதாங்க கல்யாணமாகி வாழ்நாளு பூரா எங்க பொண்ணுக கஷ்டப்படுறதவிடச் சாகிறதே மேலுன்னு கொன்னுப்புடுறோம். நாங்க பெத்த குழந்தைகளை நாங்களே கொல்லுறதுக்கு எங்களுக்கு மட்டும் மனசு கேக்கு தாக்கும்? வேற வழியில்லாம இப்படிச் செய்றோமுங்க."

**நபர் 3**

"சாமி, நானும் கொஞ்சம் வசதியா வாழ்ந்தவன்தான். ரெண்டு பொம்பளப் புள்ளைக எனக்கு. மொத பொம்பளப் புள்ளையைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க என்னோட நிலத்தை வித்தேன். ரெண்டாவது புள்ளைக்காக என்னோட வீட்டையும் வித்திட்டேன். இப்ப நாங்க இருக்கிறது குடிசைதானுங்க. இந்த லட்சணத்துல எப்படிங்க நாங்க பொம்பளப் புள்ளைகளைப் பெத்துக்கிட முடியும்?"



சிந்தனைக்கு


அ. பெற்ற தாய் தான் பெற்ற குழந்தையைக் கொல்லும் போது எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள் என்று யோசித்துப் பார்.

ஆ. பெற்ற குழந்தையைத் தாயே கொல்ல வைத்த குற்றத்தைச் செய்தது யார்?

## 4. குழந்தை நிலையில்

**தலைவர் :** பெண் மழலையர் எவ்வாறு பாகுபடுத்தப்படுகின்றனர் என்பதனைக் கண்டோம். மழலைப் பருவம் தாண்டிய பெண் குழந்தைகள் கொஞ்சம் விபரமுடையவர்களாகத் தானே இருக்க முடியும். அவர்களாவது தப்புகின்றனரா? பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவங்களை கூறலாம்.


### அனுபவப் பகிர்வு I



என் பெயர் சரசு, வயது 15, எட்டாம் வகுப்போடு என் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டனர். அண்ணன் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கிறான். தம்பி 12 வகுப்பு முடித்துவிட்டுக் கல்லூரிக்குச் செல்லவிருக்கிறான். எனக்குப் படிப்பதற்கு ஆர்வம் இருக்கிறது. '**பொட்டச்சிக்கு எதுக்குப் படிப்பு**' என்று சொல்லி படிப்பை நிறுத்தி விட்டனர்.

### அனுபவப் பகிர்வு II

நான் வனிதா, வயது 15, அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிற நான் பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தவுடன் தோழிகளோடு விளையாட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்; வீட்டில் அனுமதிப்பதில்லை. தம்பியோ பள்ளி முடிந்தவுடன் விளையாடச் செல்கிறான். எனக்கு மட்டும் ஏன் விளையாட அனுமதியில்லை?



சிந்தனைக்கு

பெண்குழந்தைகள் கல்வியிலும், விளையாட்டிலும் மட்டுந்தான் பாகுபடுத்தப் படுகின்றனரா? வேறு எவற்றிலெல்லாம்? பட்டியலிடுக.

## 5. இளமை நிலையில்

**தலைவர் :**

இந்த அமர்வுக்குப் பத்திரிக்கையாளர்கள் வந்திருக்கின்றனர். அவர்களிடம் பாதிக்கப்பட்ட பெண்கள் தம் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

***சுமதி:*** **'நான் பெரிய பிள்ளை ஆயிட்டனாம்' 'சமைஞ்ச பிள்ள மாதிரி இலட்சணமாய் இரு, முன்னால மாதிரி வெளியே போய் விளையாடாதே, எல்லோர் கிட்டயும் பேசாதே. தனியாய்ப் போகாதே, சத்தமாய்ப் பேசாதே, சிரிக்காதே, அடக்கமாக மெல்ல நட, அதிர்ற மாதிரி நடக்காதே'**



என்று இயற்கையான இயல்பையே மறக்கடிக்கும் அளவுக்கு நிறைய கட்டுப்பாடு போடுறாங்க. என் சுதந்திரத்தையே முடக்கிட் டாங்களே! ஏன்?

*மாலதி:* எங்க ஊரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைப் பகிர்ந்து கொள்கிறேன்.

லட்சுமிப்பிரியா ஒரு கல்லூரி மாணவி. இவள் ஒவ்வொரு ஞாயிறு மாலையும் கோவிலுக்குச் செல்கின்ற போது, ஒரு இளைஞர் கூட்டம் அவளைக் கிண்டல் செய்தபடியே பின் தொடர்ந்து வருவது வழக்கம். அன்றும் அப்படியே, அவளை வழிமறித்து நின்றனர். அவர்களை எச்சரித்து வீடு வந்து சேர்ந்தவுடன், சம்பவங்களைப் பெற்றோரிடம் தெரிவித்தாள்.

மறுநாள் விடிந்தது. ஏற்கனவே கல்லூரிக்கு வரும்போது பிரியா பயத்துடனே கல்லூரிக்குச் சென்றாள். வழியில் அந்தக் கும்பல் திடீரென குறுக்கிட்டது.

**பெண்ணிற்குத் திருமணம் வயது 18, ஆணிற்கு 21, இத்திருமணச் சட்டத்தை மீறுபவர்கள் தண்டனை குரியவர்கள். இச்சட்டம் நடைமுறையில் இருந்தாலும் குழந்தைத் திருமணம் நாளும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கிறது.**

***குழந்தைச் திருமண தடைச் சட்டம் 1929***

கேலி கிண்டல் அளவு மீறிப்போகப் பிரியாவைப் பிடித்துத்தள்ளினர்; அவமானப் படுத்தினர். வீடு திரும்பிய பிரியா யாரிடமும் பேச்சுக் கொடுக்கவில்லை.

### கேள்விகள்

அ. இளம்பெண் ஏன் கேலி செய்யப் படுகிறாள்?

ஆ. கேலியின் உள்ளடக்கம் அவமானமா ? அழகுக்கான மரியாதையா?

இ. நாம் யாரைக் கேலி செய்கிறோம்? யாரைக் கேலி செய்வதில்லை?

ஈ. கேலியைப் பாகுபாடு என்று கருதலாமா?

## பத்துப் பெண் பெற்ற பாக்கியசாலி !

**'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்'**

– இது பழமொழி.

**பத்துப் பெண் பெற்றால்?!**



இந்த மதுரைத் தம்பதியர்க்குப் பத்துப் பெண் பிள்ளைகள்.

முதல் குழந்தை பெண்ணாகப் பிறந்தால் முகத்தை சுழித்தும், இரண்டாவதும் பெண் என்றால், இடியே விழுந்தது போலவும் நினைக்கும் சில பெற்றோர்களுக்கு மத்தியில் பத்துப் பெண் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தவர்கள்.

**"நான் ஒருநாள்கூட 'ஆம்புளப் புள்ள இல்லையே'னு வருத்தப் பட்டதே கிடையாது."**

" நாங்க ரொம்ப வசதியான குடும்பமும் இல்ல. கஷ்டப்பட்டுத்தான் புள்ளைங்கள வளர்த்தோம். சோர்ந்துடாம நம்பிக்கையோட வளர்த்தோம். அந்தக் காலத்துல நெல்லக் கொடுத்து புள்ளயக் கொல்ற கொடுமையெல்லாம் தான் இருந்துச்சு. ஆனா, அதப்பத்தி நாங்க மனசாலகூட நெனச்சுப் பார்த்தது இல்ல. இவ்வளவு ஏன்?

எங்களுக்கு அஞ்சாவது ரெட்டக் குழந்தைங்க பொறந்தப்போ, சிலபேர் ஒரு புள்ளய மட்டும் தத்தெடுக்கக் கேட்டாங்க. நாங்க கொடுக்கல.

எல்லாருமே கொறஞ்சது ப்ளஸ் டூ முடிய படிச்சிருக்காங்க. இதோ . . இப்போ ஆறு புள்ளைங்களுக்குக் கல்யாணம் முடிச்சுட்டோம். கடைசி மூணு புள்ளைங்க மேல்படிப்பு படிச்சுக்கிட்டும் வேலைக்குப் போய்க்கிட்டும் இருக்காங்க. ரெண்டாவது பொண்ணு மட்டும், 'கல்யாணமே வேண்டாமன்னு பிடிவாதமா இருந்துட்டா'.

"எந்தப் பெண்ணுக்கும் வரதட்சணை கொடுத்ததில்லை. கல்யாணத்துக்கு அப்புறம் ஒரு பொண்ணுகூட கண்ணக் கசக்கிட்டு வந்து நின்னதில்ல."

**பிள்ளைங்களுக்குள்ள நாங்க பாகுபாடு காட்டுறதே இல்லை.** அவுங்களுக்கும் அந்த எண்ணம் வந்துடக் கூடாதுன்னு ட்ரெஸ், ரிப்பன், பேக், செருப்புனு எது வாங்குனாலும் எல்லாருக்கும் ஒரே மாதிரி தான் வாங்குவோம். கிறிஸ்துமஸூக்கு ட்ரெஸ் எடுக்குறப்பகூட ஒரே துணியில நாப்பது மீட்டர் எடுத்து வெட்டி எல்லாருக்கும் ஒரே மாதிரி தச்சுப் போட்டு விடுவோம். யூனிஃபார்ம் மாதிரி இருந்தாலும் அதுவும் நல்லாத்தான் இருக்கும். ஞாயிற்றுக்கிழமையானா நாங்க சர்ச் போற நேரத்துக்கு தெருவே காத்திருக்கும். நாங்க பிள்ளைங்களக் கூட்டிட்டுப் போறத வேடிக்கைப் பார்க்க!"

"சொன்னா நம்ப மாட்டீங்க. எங்க புள்ளைங்கள நானோ, என் கணவரோ இதுவரை ஒருதடவகூட அடிச்சது கிடையாது ! நாங்க சாதாரண காரணத்துக்காக அடிச்சாகூட, 'பொண்ணுங்கிறதால அப்பா, அம்மா நம்மள வெறுக்குறாங்களோ?'னு அதுங்க யோசிச்சிடகூடாது பாருங்க. அந்த அக்கறதான். . ..

அதே மாதிரி, எம் பொண்ணுங்களுக்குத் தேவையில்லாத எந்தக் கட்டுப்பாடும் விதிச்சது இல்ல. எந்தச் சூழ்நிலையிலும் பிறரை எதிர்பார்க்காம அவுங்களே ஒருத்தருக்கு ஒருத்தர் உதவிக்கிற மாதிரி தைரியம் கொடுத்து வளர்த்திருக்கோம். நாங்க அவங்களுக்குக் கொடுத்த சுதந்திரத்தையும், அவுங்க மேலே வெச்ச நம்பிக்கையையும் நல்லபடியா பயன்படுத்திக்கிட்டாங்க.


பொண்ணுங்களப் பெத்தவுங்களுக்கெல்லாம் என்னோட வேண்டுகோள் இதுதான். . . '**பொண்ணாப் போச்சே'னு வருத்தப்பட்டீங்கன்னா, அது உங்க குழந்தைக்கு நீங்க செய்ற துரோகம். மனசாலகூட ஒருநாளும் அந்த துரோகத்த நெனச்சுப் பார்க்காதீங்க**" அக்கறையுடன் முடித்தார்.

அவர்கள் மகள்களிடம் பேசினோம். "இப்படி ஒரு அம்மா, அப்பா கெடச்சது நாங்க செஞ்ச புண்ணியம்தான்."

நாங்க கல்யாணம் பண்ணிப் போறப்ப எங்க அப்பா, அம்மா எங்களுக்குச் சொல்ற புத்திமதி என்ன தெரியுமா? 'யாரும் கண்டிப்பா 'ஸ்கேன்' பார்க்கக் கூடாது. **ஆம்பளப்புள்ள பொறந்தா சந்தோஷப்படுங்க. பொம்பளப்புள்ள பொறந்தா அதைவிட சந்தோஷப்படுங்க**. எங்களுக்கு நீங்க கொடுத்த சந்தோஷத்தை உங்க பிள்ளைங்க உங்களுக்குக் கண்டிப்பாகக் கொடுப்பாங்கன்னு சொல்வாங்க ..." – உற்சாகம் குறையாமல் சொல்லி முடித்தனர். *- அவள்விகடன் 2004*

(இவ்வுண்மை நிகழ்வை பெற்றோர், உறவினரிடம் பகிர்ந்து கொள்க)

## ஈவ் டீசிங் சட்டம், தண்டனை



**த**மிழக அரசின் 1998 ஆம் வருட ஈவ்டீசிங் தடுப்புச் சட்டத்தின்படி கீழ்க்கண்ட செய்கைகள் ஈவ்டீசிங்காகக் கருதப்படும். ஒரு ஆணின் செய்கை, நடத்தை, வசைமொழி, அல்லது பலப்பிரயோகம் ஒரு பெண்ணுக்கு மிரட்டல், பயமுறுத்தல், அவமானம், சங்கடம் அல்லது காயத்தை உண்டாக்கினால் அது ஈவ் டீசிங்காகக் கருதப்படும். இதற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூபாய் 10,0000 வரை அபராதம் விதிக்கலாம் அல்லது இரண்டும் என்கிற மூன்றுவித தண்டனைகளை இந்தச் சட்டம் பரிந்துரை செய்கிறது. .

*- இந்தியா டுடே 31.3.1999*

## 6. மண நிலையில்

**தலைவர்:** ஒரு இளம்பெண் திருமணத்திற்குத் தயாராக இருக்கும் நிலையில் எப்படியெல்லாம் பாகுபடுத்தப்படுகிறாள் என்பதனைக் கீழ்க்கண்ட கவிதைகள் மூலம் பார்ப்போம்.

**1.** *வல்லமை பேசியுன் வீட்டில் -* **பெண்**
**வாங்கவே** *வந்திடுவார்கள் சில பேர்கள்;*
*நல்ல* **விலை** *பேசுவார் - உன்னை*
*நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்,*
**கல்லென** *உன்னை மதிப்பார் - கண்ணில்*
*கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் கண்டோர்?*

**- பாரதிதாசன்**





**2. எங்கள் சந்தைகள்**


***ச***ந்தைக்குப் போன மாடுகள்
**ப**ல்பிடித்து **சுழி** சுத்தம் பார்த்துப்
பணம் நிர்ணயிக்கப்படும் !

இந்தச் சந்தையில்
எங்கள் **நடை** பார்த்து
**சடை** பார்த்து விலை
நிர்பந்திக்கப்படும் !

எப்பொருள் யார் யார் கேட்டாலும்
அப்பொருள் விலையும்
அவரே தருதல் நியதி .......

### வரதட்சணைச் சாவுகள்

- வரதட்சணை பாக்கித் தொல்லையால் தற்கொலை செய்தவர்கள் - 4,769
- வரதட்சணை பாக்கிக்காகச் சேலையில் தீப்பிடித்து இறந்தவர்கள் - 6,414
- சமையல் செய்யும்போது ஸ்டவ் வெடித்து இறந்தவர்கள் - 2,143
- வரதட்சணை பாக்கிக்காகக் கணவன் மாமியார், மாமனாரது கொடுமையால் சித்திரவதை செய்யப்பட்டவர்கள் - 2,514
- மொத்தக் கொடுமைகள், சாவுகள் - 15,840



***- தினமலர், 26.11.1987***

**எங்கள் சந்தையிலோ**
**எல்லாமே ஏறுமாறு !**

*விலைகள் ..... தொகையாக*
*பணமாக இல்லாமல்*
***கார்கள் ..... கல் நகைகள்***
***பங்களாக்கள்*** *.... என்ற*
*பண்டமாற்று நடப்பதுண்டு !*

*இவை எங்கள் சந்தையில்*
*சரித்திரம் தொட்டுவரும்*
*சம்பிரதாயங்கள் ....*

*சம்பிரதாயங்களைத் தகர்த்தெறிய*
*இங்கே எவருக்கும் சக்தியில்லை !*

***காசு பணம் மட்டும்***
***கழுதைகளும் தர முடிந்தால் .......***

***அவற்றுக்கும் கண் நிறைந்த***
***கணவன்மார் கிடைக்கக்கூடும்!***

**- இரா. வேலுச்சாமி**

## விடை சொல்லுங்கள்

- ⇨ கவிதைகளை மாணவர்கள் புரியும் வண்ணம் ஆசிரியர் வாசித்துப் பொருள் சொல்லவும்.
- ⇨ இக்கவிதைகளில் பெண்ணடிமைத்தனத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகள் யாவை?
- ⇨ சந்தையில் நடக்கும் வியாபாரத்திற்கும் திருமணச் சந்தையில் நடக்கும் வியாபாரத்திற்கும் என்ன வேறுபாடு?
- ⇨ இக்கவிதைகள் மூலம் திருமணச் சந்தையில் பெண் எவ்வாறு பாகுபடுத்தப்படுகிறாள் என்ற உண்மை புரிகிறதா? எப்படி?

## இப்படிக் கேட்டுப் பார்ப்போமா?

கணவனோடு வாழாப் பெண் 'வாழாவெட்டி' மனைவியோடு வாழா கணவனுக்கு என்ன பெயர்?

கணவனை இழந்த பெண் 'விதவை'யாகிறாள்? மனைவியை இழந்த கணவன் யாராகிறான்?

'விபசாரி' பெண்ணைக் குறிப்பது. இதே தவறினைச் செய்யும் ஆணுக்கு என்ன பெயர்?

## 7. மனைவி நிலையில்

**தலைவர் :** கனவில், கருவில், மழலையில், இளமையில், மணநிலை தாண்டி தப்பி மனைவியாகிறாள் ஒரு பெண். மனைவியாகும் பெண் ஒருவனின் சரி பாதி(Half)யாகிறாளா? பாகுபடுத்தப்படுகிறாளா? அவள் அவளாக இருக்கிறாளா? ஆணின் வெறும் துணையாக அல்லது அடிமையாக அல்லது சமத்துவ அந்தஸ்தோடு இருக்கிறாளா? பத்திரிக்கையில் வெளிவந்த சில உண்மை நிகழ்வுகள் இங்கு வாசிக்கப்படுகின்றன.

### 1) அஞ்சனாவின் கதை



என் பெயர் அஞ்சனா, எனக்கு வயது 30. ஒரிசாவில் படித்த மேட்டுக்குடி குடும்பத்தில் 4 குழந்தைகளில் ஒருத்தியாகப் பிறந்தேன். மிகவும் கட்டுப்பாடான குடும்பத்தில் பிறந்த நான் ஆங்கில இலக்கியத்தில் ஒரிசா மாநிலத்திலேயே முதலிடத்தில் தேர்வு பெற்றேன்.

பள்ளி நாட்களிலே மிகத் தீவிரமாக வரதட்சணையை எதிர்த்துப் பேசிய நான், இலட்சக் கணக்கில் வரதட்சணை கொடுக்கப்பட்டு சுபாஷ் என்ற வனத்துறை அதிகாரிக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டேன்.


முதல்நாளன்றே, சித்திரவதை துவங்கியது. மேலும், அதிக வரதட்சணை கேட்டு சிகரெட் சூடு வைத்தும், சித்திரவதை செய்யப்பட்டேன். அன்றிரவே என் கணவர் போதை மருந்துகளுக்கும் அடிமையானவர் என்பதையும் தெரிந்து கொண்டேன். கணவரின் தவறுகள் எனக்குத் தெரிய வரவே, கணவரால் துன்புறுத்தப்பட்டேன்.

எனது மாமனார், மாமியார் மற்றும் குடும்பத்தினர் அனைவருமே சேர்ந்து அடிப்பது, உதைப்பது சில நேரங்களில் கயிற்றையும், பூச்சி மருந்தையும் சுட்டிக் காண்பித்து, வெட்கமாக இல்லை, இன்னுமா சாகாமல் இருக்கிறாய்? என்று உளவியல் ரீதியாக என்னைத் தற்கொலைக்குத் தூண்டினார்கள்.

இத்தகைய சித்ரவதைகளுக்கு முன்னாலும் வாழ்ந்து காட்டவேண்டும் என்று உறுதி பிறந்தது. அவரை நிரந்தரமாகத் தலைமுழுகி விடுவதற்கு வசதியாக விவாகரத்து செய்து விடுவதற்குச் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டினர். என்னை மனநோயாளியாகச் சித்தரித்து ஆரோக்கியமான எனக்கு முற்றிய மனநோயாளிகளுக்குப் போடும் ஊசிகளைப் பலவந்தமாகப் போட்டனர். இதற்கிடையில் எனக்கு ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு குழந்தைகள் பிறந்தன.

இதன் உச்சகட்டமாக, 1995 ஆண்டு ஏப்ரல் 4–ஆம் தேதி அன்று என்னை அரைமயக்க நிலையிலேயே கூட்டிச் சென்று ஒரு மனநோய் மருத்துவ மனையில் சேர்த்தனர். நாட்கள், வாரங்கள், மாதங்கள் பல ஆகியும் யாருமே பார்க்க வரவேயில்லை.

## 2) மாதவியின் இயந்திர வாழ்வு



நான் தினமும் பரபரக்க எந்திரிச்சு காலை டிபன் செய்து, மத்தியானத்துக்கும் சாப்பாடு செய்து புள்ளய குளிப்பாட்டச் செய்து பள்ளிகூடத்துக்கு அனுப்பிவிட்டு, வீட்டுக்காரருக்கும் சாப்பாடு கட்டி கொடுத்து விட்டு, குளிச்சிட்டுப் பாதிய வாயில, மீதிய டப்பாவில் போட்டுக் கொண்டு, ஒடி, அடித்துப் புடித்து இடித்து ஏறி பேருந்தில் இடம் பிடித்து, அலுவலகத்திற்குச் சென்று நாள் முழுவதும் வேலை செய்து வீட்டுக்குப் போக, மீண்டும் பேருந்து நிலையத்தில் காத்துக்கிடந்து கூட்ட நெரிசலில் சிக்கி, விடுதலை பெற்று... அக்கடான்னு வீட்டில் காலாற உட்கார லாம்னா... முடியுதா? மீண்டும் வேலை! ஒரே வேலைதான்!

## 3) போதையில் அடிபட்ட காந்திமதி



எனது திருமணம் முடிந்து நான்கு மாதத்திற்குப் பின்புதான் கணவருடைய சுயஉருவம் எனக்குத் தெரிய வந்தது. திருமணத்திற்கு முன்பே இவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் பின்புதான் தெரிய வந்தது. போதைப்பொருள் உபயோகிப்போரோடு நெருங்கியத் தொடர்புள்ளவ ரென்பதைத் தெரிந்து கொண்டேன்.

ஆனால் இதையே காரணம் காட்டி என்னை மூர்க்கத்தனமாக அடித்துத் துன்புறுத்துவார். இனி மேலும், அங்கிருந்தால் எனக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை உறுதியாக உணர்ந்த பின் அவர் வீட்டில் இல்லாதபோது நான் என் பெற்றோரிடம் செல்கிறேன் என எழுதிவைத்து விட்டு என் தாய்வீடு வந்து விட்டேன்.

## 4) வரதட்சணைக் கல்யாணி

எனக்கு 10 பவுன் நகையும், ரூ10,000 /– ரொக்கமும் வரதட்சணையாகக் கொடுத்து, கல்யாணம் நடத்தி வைத்தனர். திருமணம் முடிந்து 25 நாட்கள் மட்டுமே என் கணவர் என்னுடன் வாழ்ந்தார். அதன் பின்பு அடிக்கடி சாராயம் குடித்தவிட்டுக் காரணம் இல்லாமல் அடிப்பார். இரண்டாம் மறுவீட்டுக்கு எனது தாயார் வீட்டிற்கு வந்தவள் தான், பலமுறை மனம் இறங்கி கடிதம் எழுதினேன். இதுவரை எந்த பதிலும் இல்லை. என் தகப்பனார் இறந்து 3 வருடங்கள் ஆகின்றன. எந்தவித ஆதரவும் இல்லாமல் தனிமையில் வாழ்ந்து வருகிறேன்.

## 5) கட்டப்பஞ்சாயத்தில் அவமானப்படுத்தப்பட்ட அழகம்மாள்



ஊட்டச்சத்து பணியாளராகப் பணி புரிந்த அழகம்மாளின் கணவர் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் செய்த பிறகும் முதல் மனைவி அழகம்மாளோடு வாழ்வதற்கு அழகம்மாளின் தந்தை பெயரில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்தை எழுதித் தரும்படி கேட்டார். கிராம அம்பலக்காரரும், அழகம்மாள் சொத்துக்களைக் கணவன் பெயரில் எழுதி வைக்கும்படி கூறினார். ஆனால், அழகம்மாள் இதனை ஏற்க மறுத்து நீதிமன்றத்திற்குச் சென்று சட்டப்படி விவாகரத்து பெற்றார். கிராம அம்பலக்காரரின் பேச்சை மீறி, அழகம்மாள் நீதிமன்றம் சென்றதால் அழகம்மாளை ஊரை விட்டுத் தள்ளி வைத்தனர்.

இந்த நிலையில் அழகம்மாள் தனது தந்தையின் பெயரில் இருந்த ஒரு ஏக்கர் நிலத்தை ஒரு டிராக்டர் வைத்து உழுதார். வயலில் உழுது கொண்டிருக்கும் போது கிராம அம்பலக்காரர் உழவிடாமல் தடுத்தார்.

இது தொடர்பாக நடந்த கட்டப்பஞ்சாயத்தில் அழகம்மாளுக்கு ரூ.51 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது !

பஞ்சாயத்தில் கும்பிட்டு விழுந்தால் அபராதத் தொகையைக் குறைப்போம் என்றும் கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் கூறினர். அழகம்மாள் 47 முறை நெடுஞ்சாண் கிடையாகக் கும்பிட்டு விழுந்தார். அதனையடுத்து அபராத தொகை 4 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது.

**தீக்கதிர் - 05.08.2003**



அவர்களை
போதைப் பொருளாகவும்,
போகப் பொருளாகவும்
புரிந்து கொண்ட தல்லாமல்
வேதப் பொருளாக்கி மேன்மை
தர யாருமில்லை !
அடிமை ஒப்பந்தத்தின்
அடையாளமாகத்தான்
கழுத்தில் தாலியைக் கட்டி வைத்தனர்.
அது –
கனத்தது, வலித்தது கண்களை
நனைத்தது !

அவர்கள்
கணவனை இழந்து விட்டால்
விதவைகள்
கருகமணிகளைக் கழற்றி வைத்து விட்ட
கண்ணீர்ச் செடிகள்
புலம்பத் தெரிந்த புஷ்பங்கள் !

இந்த
அக்கினிப் பிரவேசங்களை
அகற்றுவது எப்போது?


**- மு. மேத்தா**

சிந்தனைக்கு

- ☞ மனைவியைத் தமிழ்நாட்டில் '**இல்லாள்**', '**வாழ்க்கைத் துணைவி**', '**தலைவி**' என்றெல்லாம் அழைக்கிறோம். இந்தச் சொற்கள் தரும் பொருளுக்கேற்ப மனைவி நடத்தப் பெறுகிறாளா?
- ☞ மனைவி எனும் பெண் ஏன் உரிமைகளோடு வாழ இயலவில்லை?
- ☞ மனைவியைச் சமத்துவமாக நடத்தும் குடும்பம் ஒன்றினை நீ அறிந்திருக்கலாம். அக்குடும்பம் பற்றி வகுப்பில் பகிர்ந்து கொள்ளலாம்.

## வரதட்சணைத் தடுப்புச் சட்டம் 1961

### வரதட்சணை ஒழிப்புச் சட்டப்படி பிரிவு 3 & 4



1 வரதட்சணை கொடுப்பது குற்றம்
2 வரதட்சணை வழங்குவது குற்றம்
3 வரதட்சணை கொடுக்கவோ, வாங்கவோ உதவி செய்வது குற்றம்.
4 வரதட்சணை கேட்பதும் குற்றம்.
5 ஒருவர் தனக்கோ, தமது மகனுக்கோ அல்லது உறவினரின் திருமணத்திலோ வரதட்சிணை பெறுவது குற்றமாகும்.
6 வரதட்சணை கொடுப்பவரும் குற்றவாளிதான், அவரும் தண்டனைக்குள்ளாவார்.

### வரதட்சணை கொடுப்பதற்கும் பெறுவதற்கும் உள்ள தண்டனை (பிரிவு 3(1) )

1 ஐந்து வருடம் வரை சிறைவாசம்
2 ரூபாய் 15,000 வரை அபராதம்
3 வரதட்சணை தொகையானது ரூ.15,000 க்கு அதிகமாக இருந்தால் அதைக் கொடுப்பவரும் பெறுபவரும் அதைப் போன்ற தொகையை (தண்டனைத் தொகை) செலுத்த வேண்டும். வரதட்சணையை முடிவு செய்யும் தரகர்களும், உறவினர்களும் சட்டத்தின் பார்வையில் குற்றவாளிகள் ஆவார். பிரிவு 3 (1)– பிரிவு 406 6 (1)

### வரதட்சணை கேட்பவர்களுக்கு என்ன தண்டனை?

1 குறைந்த பட்சம் 6 மாத சிறை தண்டனை
2 அதிக பட்சம் 5 ஆண்டு தண்டனை
3 ரூ 15,000 வரை அபாராதம்

- வரதட்சணை ஒழிப்புச் சட்டம் பிரிவு 7 & 4

## 8. மருமகள் நிலையில்



**தலைவர்:** திருமணமான ஒரு பெண் இல்லத் தலைவி எனவும், மனைவி எனவும் அழைக்கப்படுகிறாள். அதேவேளை அவளுக்கு **மருமகள்** என்ற பெயரும் உண்டு. ஆணின் மனைவி, கணவனின் பெற்றோர்க்கு மருமகள். மனைவி மருமகளாகின்ற போது, இவள் அந்தஸ்து உயர்ந்ததா? மகனுக்கு மனைவி என்பதால் போற்றப் படுகிறாளா? பாகுபடுத்தப்படுகிறாளா? ஒரே நேரத்தில், இதுவரை பெற்றோர்க்கு மகளாய், சகோதரர்க்கு சகோதரியாய் வாழ்ந்த வந்த இப்பெண் இப்புதிய அந்தஸ்தில் இல்வாழ்க்கைத் துணைவியாய், மனைவியாய், மாறுகிறாள். **தம் பெற்றோர்க்கு மகளாய் இருந்தவள், இன்னொரு பெற்றோர்க்கு மருமகளாகிறாள். ஒரு மருமகளின் அனுபவத்தைக் கேளுங்கள்.**

**கோமதி :**

ஒரு செடி மண்ணில் முளைக்கிறது. இந்தச் செடியைப் பிடுங்கி, இன்னொரு இடத்தில் நட விரும்புகிறோம். பக்குவமாய்ச் செடிக்கு எந்தவித பாதகமும் வராமல் பிடுங்கி, நாம் விரும்பும் இடத்தில் நடுகிறோம். நட்ட செடிக்கு மண்ணணைத்து, நீரூற்றி, முள் வேலியிட்டு ஏன் பாது காக்கிறோம்? பிடுங்கி நட்ட செடி. வேர்விட நாள் வேண்டாமா? தினமும் கவனிக்கிறோம்; பொறுமை யாகக் கவனிக்கிறோம். முளைத்த இடத்திலிருந்து பிடுங்கப்பட்ட செடி இன்னொரு இடத்தில் நடுகின்றபோது துளிர்விட கொடுக்கின்ற வாய்ப்பைக் கூட இருபது ஆண்டுகளுக்கு மேலாக, பிறந்த வீட்டில் வாழ்ந்து, புதியசூழலில் புகுந்த மருமகளுக்குக் கொடுக்கின்றோமா?

**இடம் புதிது,**

**ஆட்கள் புதிது**

**சூழல் புதிது**

**பழக்கவழக்கம் வித்தியாசமானது**



சமையல் சுவைகூட வித்தியாச மாக இருக்கலாம். இவையனைத்தும் புரிவது வரை பொறுமை காக்க வேண் டாமா? ‘இவளுக்கு ஒன்றும் தெரிய வில்லை. சமைக்கத் தெரியவில்லை. சமயோசிதம் தெரியவில்லை.’ என்று சொல்கின்றனர்.

கணவரோ எதையும் கண்டுக் காதே, ஒத்துப்போ என்று அறிவுரை.

குழந்தை பெறுவதும் இவள் விருப்பமல்ல.

குழந்தைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு இவளுக்கல்ல.

சத்தமாகப் பேசக் கூடாது. உணர்வுகளை வெளியே காட்டக் கூடாது. கணவன் சொல்வதை அப்படியே கேட்க வேண்டும். நிறைய சீர் கொண்டு வர வேண்டும். முணு முணுக்காமல் வேலை செய்ய வேண்டும். தாய் வீட்டின் பெருமை பற்றிப் பேசக் கூடாது. கணவன் சம்பாதிக்கலாம். கணவனுக்கு மனைவி சம்பாதித்துக் கொடுக்கலாம். ஆனால் செலவு செய்கின்ற உரிமை மனைவிக்கில்லை.

வீட்டிலிருக்கின்ற மருமகள் மட்டுமல்ல. வெளியே சென்று வேலை செய்யும் பெண்ணாக இருந்தால், இன்னும் மோசம், இரட்டிப்பு வேலை. கணவன் வெளி வேலை மட்டுந்தான், மருமகளுக்கோ இரட்டைச் சுமை.

தொழிலாளர்க்கு எட்டுமணி நேர வேலை தான். மனைவியாகும் மருமகளுக்கோ இவ்வளவு நேரம் தான் வேலையென்றில்லை, மனைவியான மருமகள்கள் வெறும் சோளக்காட்டுப் பொம்மைகளாகத் தான் உள்ளனர். ஒன்றிற்கு மேற்பட்ட மருமகளிருந்தால் அதிக வரதட்சணை கொண்டு வந்த மருமகளுக்கு அதிக மதிப்பு. ஒவ்வொரு நாளும் நடுங்கியே வாழ வேண்டியுள்ளது.

**தலைவர்**

மருமகள் யார்? மனைவி தான் மருமகளாகின்றாள்?

மனைவியோ மருமகளோ இவர்களை நாம் ஓர் ஆள் (person) என்று நடத்துகிறோமா?

குடும்ப நிர்வாகத்தில் இவள் பங்கு என்ன?

குழந்தை பெறுவதில் வளர்ப்பில் பங்கு என்ன?

குழந்தை வளர்ந்த நிலையில் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் பொறுப்பு என்ன?

பெண் எனும் அடையாளத்தைக் காக்கும் உரிமையுள்ளதா என்றும் கேட்டாக வேண்டும்.

## *9. தாய் நிலையில்*

**தலைவர்** : இளம்பெண், மணமகளாகி, மனைவியாகி, மருமகளானதோடு, இல்லறத்தில் பயனாம் தாய்மைப் பேறும் அடைகிறாள். தாய்மை ஒரு 'பேறு' – இப்பேற்றினைப் பெற்றதால் தாயிற் சிறந்த கோவிலும் இல்லை என்று தாயைக் **கோவிலாகவும்;** அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று தாயைத் **தெய்வமாகவும்;** இயற்கையைத் தாயோடும் ஒப்பிட்டு மதிக்கின்றோம். இந்த

### ஆணா ? பெண்ணா?



பிறந்த குழந்தை ஆணா, பெண்ணா, என்பதைக் குறிப்பிட டாக்டர்கள் சங்கேத பாஷைகளையே உபயோகிக்கின்றனர். 'நீல வானம், உங்கள் குழந்தை கால்பந்து விளையாடும்' என்று கூறுவது ஆண் குழந்தைகளையும், "குழந்தை ஆரோக்கியமாக உள்ளது, கொழு கொழு பொம்மையாக உள்ளது" என்று கூறினால் அது பெண் குழந்தையையும் குறிக்கும்.

**Source : India Today, 10 November 2003**

இயற்கை நிகழ்வை, இயற்கையின் கட்டாய நிகழ்வை நம் சமூகம் கொண்டாடி மகிழ்கிறது. ஒரு பெண் இங்குதான் முழுமையடைகிறாள் என்கிறோம். எனினும், இன்றைய உலகியல் மதிப்பீடுகள் தாய்மையை அப்படிப் பார்க்கின்றனவா? தாய்மை பெண்ணின் உரிமை எனப் போற்றுகின்றனவா? தாய்மையைக்கூட நிர்ணயிக்கும் காரணிகள் எவை?



தாய்மை நிலையைக் கூட மனித உரிமைக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய காலக் கட்டத்தில் இருப்பதுதான் இன்றைய அவலம். இக்கலந்தாய்வரங்கில் மூன்று பேர் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர்.

**சுமதி** : ஒரு பெண், குழந்தையைப் பெற்றெடுக்கும் போது தானே திருமண வாழ்வு முழுமை பெறுகிறது. என் வயிற்றில் கரு உண்டானது முதல் நான் மிகவும் எச்சரிக்கையாக இருந்தேன். ஏழாவது மாதத்தில் என் தாய் வீட்டுக்குச் சென் றேன். அனைவரும் என்னைக் கவனித்துக் கொண்டார்கள். அழகான குழந்தையைப் பெற்றெடுத்தென். நான் மிக்க மகிழ் வடைந்தேன். ஆனால், குழந்தையோ பெண் குழந்தை. என் கணவர் வீட்டிலிருந்து மூன்று மாதம் வரை யாரும் எங்களைப் பார்க்க வரவில்லை. இது பிள்ளையைப் பெற்றெடுத்த வேதனை யைக் காட்டிலும் அதிக வேதனையைத் தந்தது.

**வனிதா** : ஏன்? ஒரு பெண், குழந்தையே பெறாவிட்டால் '**மலடி**' என்கின்றனர். குழந்தை பிறவாமைக்கு ஆண் காரணம் என்று யாரும் சொல்வதில்லையே ஏன்? பெண் மட்டுமே மலடியாகின்ற போது, கணவன் '**மலடன்**' ஆவதில்லையே ஏன்?

**ராஜி** : குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் நியாயமானது; இயற்கையானது; குழந்தை இல்லாதிருந்தால் *'பேர் சொல்ல'* ஆளில்லாமல் போய் விடும். *'கொள்ளி வைக்க'* ஆளில்லாமல் போய் விடும். *'சொத்துக்கு வாரிசு'* இல்லாது போய் விடும் என்று கூறி, கட்டிய மனைவி பக்கத்திலிருக்கும் போது இன்னொரு மனைவியைக் கட்டிக் கொள்கின்றனர். இது நியாயமா?

**மனைவி அல்லது கணவன் உயிரோடிக்கும் போது மீண்டும் திருமணம் செய்துகொள்ளுதல், கணவன் அல்லது மனைவி உயிரோடு இருக்கும் போது, யாரேனும் மறுமணம் செய்து கொண்டால், அந்த மறுமணம், கணவன் அல்லது மனைவி உயிரோட இருக்கையில் செய்யப்படுவதால் (செல்லாது) அந்த நபருக்கு ஏழு ஆண்டுகள் வரையில் சிறைக்காவலுடன் அபாராதமும் சேர்த்துக் தண்டனையாக விதிக்கப்படும்.**

*பலதார மணம் - இந்தியத் தண்டனைச் சட்டம் - 494*

**தலைவர்** : தாய்மை பெண்மையின் முழுமை என்கின்றனர். அந்த முழுமையை அனுபவிக்க பெண்களுக்கு உரிமையுண்டு. குழந்தை இல்லையென்றால், மனைவிதான் காரணமாகக் காட்டப்படு கின்றாளே தவிர, ஆணிடம் உடல்ரீதியாகப் பிரச்சினை இருக்கும் என்பதை வெளியே சொல்வதே இல்லை. **ஏன்? ஏன்?**

**சிந்தனைக்கு**

1. தாய்மை பற்றிச் சமூகம் கூறும் பழமொழிகள், கவிதைகளைத் தொகுத்து வரவும்.
2. உன் தாய் காலை முதல் இரவு வரை செய்கின்ற வேலைகளைப் பட்டியலிடுக.
3. உன் அப்பாவின் வேலைக்குக் கூலியுண்டு; சம்பளம் உண்டு. நாள் முழுவதும் வீட்டில் வேலை செய்யும் அம்மாவுக்கு ஏன் சம்பளம் இல்லை. அம்மா செய்வதும் வேலை தானே! வீட்டைக் கவனிக்கும் அம்மாவை சும்மா இருப்பதாகக் கூறுகிறோமே ஏன்?

## 10. விதவை நிலையில்




**தலைவர்:** விதவை நிலை எல்லாப் பெண்களுக்கும் உரியது அல்ல ; ஒரு சிலருக்கே ஆயினும் ஒரு பெண் விதவை நிலையில் எவ்வாறெல்லாம் சிதைக்கப் படுகிறாள் என்பதைக் காண்போம்.

**பேட்டி - 1**

***பிரபா:*** என் பெயர் பிரபா. 1990 ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் நடந்தது. 1999ம் ஆண்டு திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பால் என் கணவர் இறந்தார். எனக்கு ஏழு வயதில் ஒரே ஒரு குழந்தை இருக்கிறது.

நான் என் பெற்றோர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என் அப்பா ஏற்கனவே இறந்திருந்ததால் என் அம்மா மட்டும் தனியாக ஊரில் இருந்தார்கள். ஒரு நாள் நான் தண்ணீர் எடுக்கக் குடத்தை எடுத்தேன். உடனே என் தாய் கூறினார். "இன்றும் சிறிது நேரம் கழித்துச் செல். காலை நேரமாக இருப்பதால் இப்போது ஊரார் எல்லோரும் குளத்திற்கு வருவர். நம்மைப் பார்த்தால் **அபசகுனம்** எனக் கூறுவர் ; நான் சொல்வதைக் கேளம்மா" என்றாள்.

**பேட்டி - 2**

***கமலா:*** விதவைக்குத் தனி அடையாளம் வேண்டும் என்று ஏன் சமூகம் விதித்துள்ளது. வெள்ளையுடை உடுக்க வேண்டும். பொட்டு வைக்கக் கூடாது, பூ வைத்தல் தடை, சுதந்திரமாக நடமாடக்கூடாது, மங்கல நிகழ்ச்சிகளில் கலந்துக்க கூடாது, மறுமணம் செய்யக் கூடாது இவையெல்லாம் பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு இல்லையா?



**தலைவர் :** யாராவது ஒரு விதவை மறுமணம் செய்தால் அவளுக்கு பெண் என்ற மரியாதை காட்டப்படுவதில்லை. இரக்கத்தின் அடிப்படையில் எவனோ கிடைப்பவனுக்குக் கொடுத்து விடுகிறார்கள். அவள் புகுந்த வீட்டில், உரிய மரியாதை கொடுப்பதில்லை. ஏளனமாக நடத்துவது, இரக்கத்தோடு நடத்துவது பெண்களின் மாண்பையும், உரிமையையும் மறுப்பதாகும். அதுவும் விதவைக்கும் மறுமணத்துக்கு சிலவேளை ஏற்றுக் கொள்ளும் சமூகம் அவளுக்குக் குழந்தை இருந்தாலோ தீண்டுவதே இல்லை.

சிந்தனைக்கு

**கீழ்க்காணும் கவிதையை வாசித்து விதவை நிலையின் கொடுமையை உணரவும்.**

**வெ**ள்ளைப் புடவையில் வீட்டுக்குள்
வதங்கிக் கிடக்கிறாயே !
வண்ணப் புடவையில் வானத்தில் நீ
வட்டமிட வேண்டாமா?
அந்நியமாய் வந்தவன்
அய்யோ எனப் போய் விட்டான்
அதற்காக
ஏன் அழிக்கிறாய் உன் பொட்டை?



ஏன் துறக்கிறாய் உன் பூவை?
ஏன் இழக்கிறாய் உன் சுதந்திரத்தை?
நேற்று வந்தவனால்
உன் நெற்றிப் பொட்டையே
இழக்கிறாய் நீ
தப்பித்தவறியும் – உன்
தன்மானத்தை, ஆளுமையை – ஏன்
உன்னையே இழந்து விடாதே!


**எம். வெங்கடேஷ்வரி**

## *11.* முதுமை நிலையில்



**தலைவர்:** பெண் முதிய நிலையிலாவது சமத்துவமாக நடத்தப்படுகிறாளா என்று பார்ப்போம். முதியோர் சிலரையே கேட்போமே?

**1) பட்டம்மாள் :** வயது 70. எனக்கு ஒரே மகன். நன்றாகப் படிக்க வைத்தோம். அவன் இன்று ரயில்வே அதிகாரியாகப் பணியாற்று கிறான். மருமகள் ஆசிரியை. நானும் எனது கணவரும் தனியாக எங்கள் கிராமத்திலேயே வாழ்கிறோம். என் மகனோடு வாழ வேண்டுமென்ற ஆசை எங்கள் இருவருக்கும் உண்டு. நாங்கள் படுகின்ற கஷ்டங்களையெல்லாம் பார்த்தும் இதுவரை ஒருநாள்கூட எங்கள் வீட்டில் நிரந்தரமாகத் தங்குங்கள் என்று அழைத்ததில்லை. மாதம், மாதம் எங்கள் இருவரின் செலவுக்குப் பணம் தருவான். போதுமான அளவு தருவான். அதில் எந்தக் குறையுமில்லை. பணமிருந்தால் போதுமா? சொந்தம், உறவு, சேர்ந்து வாழ்தல் உண்ணுதல் போன்றவையெல்லாம் தேவையில்லையா?



**2) இப்படியும் ஒரு கொடுமை :** கிரகதாய், வயது 70, இம்மூதாட்டியின் சொத்தை அபகரிக்க, இவரின் உறவினர்கள் 6 ஆண்டுகள் இவரை தனி அறையில் அடைத்துச் சித்திரவதை செய்தனர். மீட்கப்பட்ட கிரகதாய் அழுக்குச் சேலையுடன் தலையில் எண்ணெய் தேய்த்தே பல ஆண்டுகள் ஆன நிலையில் இருந்தாள். அவரது கோடிக்கணக் கான சொத்தை அனுபவித்தவர்கள் ஒரு சோப் கூட அவருக்கு வாங்கித்தர வில்லை. தொடர்ந்து 6 ஆண்டுகள் ஒரே அறையில் சிறை வைத்தனர். தலைக்கு தேய்ப்பதற்கு எண்ணெய் இல்லாததால், ஒரு பாட்டிலில் சிறுநீரை பிடித்து அதை எடுத்து தலையில் தேய்த்துக் கொண்டிருந்துள்ளார். அதனால் அவர் உடல் முழுவதும் ஒரே சிறுநீர் வாடை தான்.

**தினமலர், 7.8.2004**

முதியவர்கள் நம்மைப் போன்ற மனிதர்கள். அவர்களுக்கும் ஆசைகள், உணர்வுகள் இருக்கின்றன. அவர்களும் குடும்பத்தோடு இணைந்து வாழ உரிமையுடையவர்கள். குழந்தைகளுடைய அன்பையும், பாசத்தையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ உரிமையுடையவர்கள். அவர்களுக்கு அவர்களது கருத்தையும், எண்ணத்தையும் வெளிப்படுத்த உரிமையுடையவர். அவர்களை வேண்டாம் என்று ஒதுக்குவது உரிமை மீறல். அவர்கள் இல்லாமல் நாமில்லை. அவர்களது அறிவும், ஞானமும், போதனையும், கண்டிப்பும் இல்லாமல் நாம் இவ்வளவு நலமுடன் இருக்க முடியுமா? அவர்களின் உரிமைகளைக் காப்பது நம் கடமையில்லையா?

## பெண்ணால் முடியும்



உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த கமலா தேவியின் வயது 55. இவருக்கு 10வயதிலேயே திருமணமாகிவிட்டது. இவர் பள்ளிக்கே சென்றதில்லை. இரண்டு மகன், நான்கு மகள்களுக்குத் தாயானபின் இவரது கணவர் இறந்துவிட்டார். கணவர் செய்துவந்த ஓட்டல் தொழிலைத் தொடர்ந்தார். அதில் நஷ்டமே ஏற்பட்டது. டில்லி சென்று பெண்களுக்கான அழகு நிலையத்தில் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றினார். மூன்று பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். ஏழ்மையின் காரணமாக அவர்களின் வாழ்வும் கஷ்டமாகவே இருந்தது. கமலாதேவிக்கு இந்த அனுபவம் ஒரு படிப்பினையைத் தந்தது. நான்காவது குழந்தையை நன்றாகப் படிக்க வைத்து நல்ல வேலைக்கு அனுப்பிய பின்புதான் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். அதற்காக இரவும் பகலும் கஷ்டப்பட்டு உழைத்தார். இப்போது அவரது இரண்டாவது குழந்தை டெல்லிப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ படித்துக் கொண்டிருக்கிறார்.

**Source: Women's Link, July-September, 2002**

சிந்தனைக்கு

1. உன் வீட்டில் தாத்தா, பாட்டி இருக்கின்றனரா? உன் அம்மா, அப்பா அவர்களை மதிக்கின்றனரா? மதித்தால் எப்படியென்றும், மதிக்கவில்லையென்றால் எப்படியென்றும் நினைத்துப் பார்.

2. முதியோர் பலரைச் சாலைகளில், பொதுவிடங்களில், தனித்து விடப்பட்ட நிலைகளில் பார்த்திருப்பீர்கள். அவர்களின் வாழ்வுரிமைகள் கேள்விக்குள்ளானமை குறித்து வருந்தியுள்ளீர்களா?

## வித்தியாசமான பெற்றோர் : ஓர் உண்மைக் கதை

பெற்றோர்களை முதுமைக் காலத்தில் கைவிடும் பிள்ளைகளையும் முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு ஒதுங்கிக் கொள்ளும் பிள்ளைகளையும் பார்த்திருக்கிறோம்.



தவறான மருத்துவம் காரணமாக மனவளர்ச்சி குன்றிப்போன 38 மற்றும் 41 வயது நிரம்பிய ஆண் பிள்ளைகளைப் பராமரிப்பதையே வாழ்க்கையில் முழுநேர வேலையாக்கிக் கொண்டு விட்ட பெற்றோர்களை அறிந்திருக்கிறோமா ?

ஆனையப்பன் - கோதைத் தம்பதியினர்தான் அவர்கள் !

வலிப்பு நோயின் போது மருத்துவரின் தவறான ஊசியினால் மனவளர்ச்சி குன்றிப் போனான் ஒரு மகன். அம்மைநோய், பிரைமரி காம்ப்ளக்ஸ், கக்குவான் ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்ட தவறான சிகிச்சையால் மற்றவனும் அப்படியே மனவளர்ச்சியற்றுப் போனான். மூன்றாமவனோ முறையற்ற வைத்திய சிகிச்சையால் முடங்கிப் போய் மரணத்தைத் தழுவிக் கொண்டான்.

இரண்டு பேரையும் வீட்டிலேயே வைத்துப் பராமரித்து வருகின்றனர் பெற்றோர். தமது ஓய்வூதியம், சொத்து அனைத்தையும் இந்தப் பிள்ளைகளுக்காகவே செலவழித்து முடித்து விட்டனர்.

'ஒரு பிள்ளையை ஹோம்லே சேர்த்தா சிரமம் குறையுமே' என்று கேட்டால் 'நாங்கள் சாகிறவரைக்கும் பசங்க எங்க பார்வையில தான் இருக்கனும். இந்த உயிர் உள்ளவரைக்கும் நாங்க அவங்களை நல்லா பாத்துக்குவோம்' என்கிறார் தாயார் கோதை.

ஓரிரு நாட்களுக்கு உடம்பு சரியில்லை என்று படுத்தாலே குடும்பத்தினர் முகம் சுளித்துக் கொள்கிற இக்காலத்தில் மனவளர்ச்சி குன்றிய 41 வயது மகனையும், 38 வயது மகனையும் குழந்தைகளாக அரவணைத்து, மனம் சலிக்காமல் பொறுமையோடு பராமரித்துக் கொண்டிருக்கும் ஆனையப்பன் - கோதை தம்பதியினர் இந்த உலகிற்குச் சொல்லும் செய்தி மகத்தானது!

**- தகவல் : குமுதம் 26.04.2004**



## 12. குடிமகளாம் பெண்

**வகுப்பறை:** பெண்ணுரிமை தினத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், மனித உரிமைக் கல்வி வகுப்பில் மனித உரிமைக் கல்வி ஆசிரியர் வந்தவுடன் ஒரு முக்கிய கேள்வியைக் கேட்க வேண்டும் என துடிப்போடு காத்திருக்கின்றனர்.

ஆசிரியர் வருகின்றார். மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று தங்களுக் கொரு பெரிய சந்தேகம் உள்ளது, தீர்க்க வேண்டும் என்கின்றனர்.

***ஆசிரியர் :*** எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? யாராவது ஒருவர் சொல்லலாம்.

- அரசியல் மற்றும் பொது வாழ்வில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக, தம் பங்கேற்பை செலுத்தும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவேண்டும்.
- தேர்தலில் பெண்கள் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.
- அரசின் திட்டங்களில், திட்டங்களை நடைமுறைப்படுத்தலிலும், பொது வாழ்வில் சமமாகப் பங்கேற்கவும் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- அரசு சாரா அமைப்புகளிலும், அரசியல் சார்ந்த நடவடிக்கைகளிலும், ஆண்களுக்கு நிகராகச் சம பங்கேற்பு பெற உத்தரவாதம் அளித்திட வேண்டும்.

***– பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டு ஒழிப்பு உடன்படிக்கை, பிரிவு 5***

***ஒரு மாணவர் :*** நாங்களெல்லாம் பெண்கள் தினத்தையொட்டி நடந்த மாநாட்டிற்குச் சென்றிருந்தோம். அங்கே, பெண்கள் எப்படியெல்லாம் பாகுபடுத்துகிறார்கள் என்று கேட்டு வருந்தினோம். எங்களுக்கும் சகோதரிகள் உண்டு. எங்க அம்மாவும் ஒரு பெண். பெண்கள் பாகுபாட்டிலிருந்து மீள வாய்ப்பே இல்லையா? வழி சொல்லுங்களேன்.

ஒரு பெண்ணை ஒருவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து, அப்பெண்ணின் மூலம் வேண்டிய அளவு சொத்தையும் சுரண்டலாம் என்று பையனின் பெற்றோர்கள் திட்டமிடுவது மனிதத் தன்மையற்ற செய்கையாகும்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் செக்கு மாடுகளாக இருக்க வேண்டாம் ! பந்தயக் குதிரைகளாக மாற வேண்டும்."



- பெரியார்

**ஆசிரியர்** : மாணவர்களே! உங்கள் அக்கறைக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்க முதல் வருடம் மனித உரிமைக் கல்வி படிக்கின்ற போது படித்த பாடம் ஒன்றை நினைவுக்கு கொண்டு வாருங்கள். மக்களாட்சியும், மன்னராட்சியும் என்ற தலைப்பில் படித்த பாடம் நினைவில் இருக்கிறதா?

**மாணவன்** : ஞாபகமிருக்கு அய்யா!

**ஆசிரியர்** : மாணவர் யாராவது ஒருவர் அப்பாடத்தில் வருகிற ஒரு கருத்தைச் சொல்லு பார்ப்போம்!

**மாணவர் 1** : மக்களாட்சியில் ஏற்றத் தாழ்வு கிடையாது. மக்களாட்சியில் எல்லோரும் சமம்.

**மாணவர் 2** : இன்னொரு கருத்து சார். மக்களாட்சியில் எல்லோரும் உரிமை பெற்ற குடிமக்கள்.

**ஆசிரியர்** : அபாரம் ! எல்லோரும் கைதட்டுங்கள்

**மீண்டும் ஆசிரியர் :**

குடிமக்கள் சமத்துவ உரிமை உடையவர்கள் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா?

- **குடிமக்களில் ஆண், பெண் வித்தியாசம் கிடையாது**
- **உயர்சாதி, தாழ்ந்த சாதி வேறுபாடு கிடையாது.**
- **எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் சமமாக உண்டு.**
- **சட்டத்தின் முன் அனைவரும் சமம்.**
- **குடிமக்களை இனம், பால், சாதி, இடம், சமய அடிப்படையில் பாகுபடுத்தக் கூடாது.**

**மாணவன்** : பெண்கள் மீதான பாகுபாட்டை எப்படி சார் போக்குவது என்று கேட்டால், வேறு என்னவோ சொல்றீங்களே!

**ஆசிரியர்** : பொறுப்பா! வர்றேன்!

ஒரு பெண் வீட்ல பெற்றோர்க்கு மகளாக இருக்கலாம், கணவனுக்கு மனைவியாக இருக்கலாம், குழந்தைக்கு தாயாக இருக்கலாம், பேரப்பிள்ளை களுக்குப் பாட்டியாக இருக்கலாம்.

**முதுமை நிலை**

45% முதியவர்கள், தீரா நோயினால் துன்பப்படுகின்றனர்; 70 முதியவர்கள், தம் அன்றாட வாழ்விற்குப் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களுக்குள்ளும் 80% முதிய பெண்கள் பொருளாதார ரீதியாகப் பிறரைச் சார்ந்து வாழ வேண்டியவர்கள்.


**Ecoomic and Political Weekly, June 2, 2001**

குடிமைச் சட்டங்களில் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்பதால் குடும்ப சொத்துக்களைப் பெறவும், நிர்வகிக்கவும், அனுபவிக்கவும் உரிமை உண்டு.

*பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை 1967, பிரிவு 6 (அ)*

இப்படி ஒரு பெண்ணுக்கு உறவுமுறையில் பல பெயரிருக்கலாம். அவர்கள் பங்கும் பணியும் வேறு, வேறாக இருக்கலாம். நாட்டுல, சனநாயக நாட்டுல ஒரே ஒரு பெயர் தான். அப்பெயர்தான் '**குடிமகள்**'.

இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பார்ப்போம். உங்க அம்மா ஓட்டுப் போட போனாங்களா?



**மாணவர்** : ஆமாம்

**ஆசிரியர்** : உங்க அப்பா!

**மாணவர்** : ஆமாம்

**ஆசிரியர்** : ஆளுக்கு ஒரு வோட்டு தானே!

**மாணவர்** : அம்மாவுக்கு ஒன்று, அப்பாவுக்கு ஒன்று

**ஆசிரியர்** : இப்ப பார்த்தீங்களா! வோட்டுல இரண்டு பேருக்கும் சமத்துவம் இருக்கா! ஏன் அப்படி? இருவரும் குடிமக்கள் என்பதனாலதான் இப்படி.

**மாணவர்** : ஓட்டுல மட்டும் இருந்தா போதுமா சார்!

## இந்தியாவில் பெண்களின் கல்வி நிலை 2001

2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியப் பெண்களின் கல்வியறிவு தேசிய அளவில் சராசரியாக 56.28 சதவீதமே. ஆனால், சில மாநிலங்களில் இதையும் விடக் குறைவாகவே உள்ளது. அவை,



| | | | |
|---|---|---|---|
| பீகார் | 33.57 % | ஜார்கண்ட் | 39.38 % |
| ஜம்மு–காஷ்மீர் | 41.82 % | உத்தரப்பிரதேசம் | 42.98 % |
| அருணாசலப்பிரதேசம் | 44.24 % | ராஜஸ்தான் | 44.34 % |
| மத்தியப் பிரதேசம் | 50.28 % | ஒரிசா | 50.97 % |
| ஆந்திரா | 51.17 % | சட்டிஸ்கர் | 52.42 % |
| அசாம் | 56.03 % | | |

***Source : Women's Link, January - March.***

***ஆசிரியர்*** **:** போதாது! ஓட்டுல மட்டுமல்ல, குடும்பத்துல, சமூகத்துல, கல்வியில எல்லாத்துல யும் சமத்துவம் வேணும். இந்தச் சமத்துவத்தைப் பெற பெண்கள் தங்களை குடி மகளாக, குடிமக்களாகக் கருதி போராடணும். சமத்துவத்துக்காகப் போராடணும்.

***மாணவர்கள்*** **:** ஓட்டு இரண்டு பேரும் போடுறாங்க. ஆனா ஆண்கள் தான் ஆட்சி செய்றாங்க.

***ஆசிரியர்*** **:** உண்மை தான். இதைத்தான் பாகுபாடு என்கிறோம். கீழே கொடுக்கப்பட் டிருக்கும் புள்ளிவிபரங்களைப் பாருங்கள். உண்மை புரியும். நாடாளுமன்றத் திற்கு, சட்டமன்றத்துக்கு இரண்டு பேரும் வோட்டுப் போடுறோம். ஆனால், ஆண்கள் தான் ஆட்சி செய்றாங்க. கல்வி, வேலைவாய்ப்பு இப்படி எல்லாத் துறையிலும் பெண்களை இப்படித்தான் பாகுபடுத்துகிறோம். குடிமக்கள் சமமான வர்கள் என்று சொல்லி விட்டு, பெண்கள் என்பதால் பாகுபடுத்தலாமா?

பெண்கள், சனநாயக நாட்டில் தான் ஒரு குடிமகள் என்பதை அறிய வேண்டும். அரசியலில் சமத்துவம், பொருளாதார, சமூக வாழ்வில் சமத்துவம் என்பன அடிப் படை உரிமைகள் என்பதனால் பெண்கள் குடிமக்களாய் ஒன்றிணைந்து பாகு பாடு களைய போராட வேண்டும். பெண்கள் குடிமக்கள், உரிமை குடிமக்கள்; கருணையினால் வாழ வேண்டியவர்களல்லர் என்ற விழிப்புணர்வு உருவாகட்டும்.

***மாணவர்கள்*** **:** ரொம்ப நன்றி சார் .

## சட்டமன்றங்களில் பெண்கள்

| மாநிலம் | 1952 | 1993–1997 | மாநிலம் | 1952 | 1993–1997 |
|---|---|---|---|---|---|
| ஆந்திரா | 2.9 | 2.7 | மத்தியப்பிரதேசம் | 2.1 | 3.8 |
| அசாம் | 0.5 | 4.8 | மஹாராஷ்டிரா | 1.9 | 3.8 |
| பீகார் | 3.6 | 3.4 | ஒரிஸ்ஸா | 9.6 | 5.4 |
| கோவா | -- | 1.1 | பஞ்சாப் | 2.2 | 6.0 |
| குஜராத் | -- | 4.4 | இராஜஸ்தான் | -- | 4.5 |
| ஹரியானா | -- | 4.4 | சிக்கிம் | -- | 3.1 |
| இமாசலப் பிரதேசம் | -- | 4.4 | தமிழ்நாடு | 0.3 | 3.8 |
| ஜம்மு காஷ்மீர் | -- | 2.3 | உத்திரப்பிரதேசம் | 1.2 | 4.0 |
| கர்நாடகா | 2.0 | 3.1 | மேற்கு வங்காளம் | 0.8 | 6.8 |
| கேரளா | -- | 9.3 | டெல்லி | 4.2 | 4.3 |

## இந்திய பாராளுமன்றத்தில் பெண்கள்

| ஆண்டு | எண்ணிக்கை | சதவீதம் | ஆண்டு | எண்ணிக்கை | சதவீதம் | ஆண்டு | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1952 | 22 | 4.4 | 1977 | 19 | 3.5 | 1996 | 36 | 7.4 |
| 1957 | 27 | 5.4 | 1980 | 28 | 5.1 | 1998 | 43 | 7.9 |
| 1962 | 34 | 6.8 | 1984 | 44 | 8.1 | 1999 | 49 | -- |
| 1967 | 31 | 5.9 | 1989 | 27 | 5.2 | 2004 | 45 | 8 |
| 1971 | 22 | 4.2 | 1991 | 39 | 7.2 | | | |

*புதியகாற்று, ஜூலை 2004*

# பாகுபாட்டை வென்ற பெண்டிர்

## 1) சிறையுள் பாகுபாட்டை எதிர்த்தவர் – கிரண்பேடி



காவல் துறை அதிகாரி கிரண்பேடி டில்லி மாநகரையே ஒரு கலக்கு கலக்கியவர். சட்டத்திற்கு மிகவும் மதிப்பு தருபவர் என்றாலும் தான் அணிந்திருக்கும் காக்கிச் சட்டைக்கு மட்டுமே மிகுந்த மதிப்பு தருபவர். எங்காவது கலவரம் நடந்தால் நேரில் சென்று அடக்குபவர். ஊழலுக்கு அப்பாற்பட்டவர். அரசியல்வாதிகளின் மிரட்டலுக்கு அஞ்சாதவர். பலப் பிரச்சனைகளுக்கிடையே திகார் சிறையில் இயக்குநராகப் பொறுப்பேற்றார். அங்கு 8,250 கைதிகளை மீன்களை அடைப்பதுபோல் அடைந்திருந்தனர்.

கிரன் பொறுப்பேற்றதும் ''கைதிகள் மிருகங்கள் அல்லர் அவர்களும் மனிதர்கள்'' என்று வெளிப் படையாகப் பேசினார். கைதிகளின் மனநிலையை உணர்ந்து சிறையை ஓர் ஆன்மீகக் கூடமாக் கினார். யோகாசனமும், மாலையில் விளையாட்டும் ஏற்பாடு செய்தார். முதியோர் கல்வியும், படித்தோர்க்கு உயர்கல்வியும், வாரந்தோறும் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி என்று வைத்து பரிசுகள் வழங்கினார். மூன்று வேளை உணவும், சுய வேலைவாய்ப்பு வசதியும், பணத்தை வங்கியில் சேமிக்கவும் வழிசெய்தார். கொடிய குற்றவாளிகளும் மனிதர்களாக மாறும் அற்புதம் இங்கு நடந்தது. கைதிகள் இதுவரை அதிகாரியாக அல்லாமல் தங்களை வாழ வைக்க வந்த தெய்வமாகக் கருதினர். காக்கிச் சட்டைகளின் மத்தியில் இவர் ஒரு புரட்சிப் புயலே.

## 2) முதல் பெண்மணி திருமிகு. ருக்மணி இலட்சுமிபதி (1892- 1953)



சென்னை மாநிலக் கல்லூரி பட்டதாரியான இவர் 1923ல் அரசியலில் ஈடுபட்டார். தனது நகை முழுவதையும் ஹரிஜன நிதிக்காக மகாத்மா காந்தியிடம் அளித்தார். உப்புச் சத்தியாக்கிரகம், சுதேசி இயக்கம், தனிநபர் சத்தியாக்கிரகம், சைமன் கமிஷன் போன்வற்றை எதிர்த்துக் கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் எனப்பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றார். சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்ற முதல் தமிழ்நாட்டுப் பெண்மணி இவரே. வேலூர் சிறையின் முதல் பெண்கள் பிரிவு இவரை முன்னிட்டு துவக்கப்பட்டது.

1926 ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த மகளிர் வாக்குரிமைக்கான 10–வது மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அந்நாளிலேயே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர். **தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையின் முதல் பெண் அமைச்சராகத் திகழ்ந்தார்.** சட்டமன்ற

இந்தியாவில் 83 சதவீதம் பெண்கள் இரத்தச் சோகைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 22,000 பெண்கள், குழந்தைப் பேற்றின் போது ஆண்டுதோறும் மடிகின்றனர்;

மத்தியரசின் சுகாதார அமைச்சகம், தாய்மைப் பேரடைந்த பெண்கள் 1.3 கோடி பேர் இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என கணக்கிடுகின்றனர்.

*– ராஷ்டிரா மகிளா, செப்டம்பர் .2000*

துணை சபாநாயகராகவும் நல்வாழ்வுத்துறை அமைச்சராகவும் கௌரவ நீதிபதியாகவும் பணியாற்றினார். பன்மொழியில் தேர்ச்சி பெற்று வித்தகராகத் திகழ்ந்தார். தேவதாசி முறையை ஒழிக்க, மது மற்றும் தீண்டாமை கொடுமைகளை ஒழித்திட பெண்களது திருமண வயதை உயர்த்த என பல முன்னேற்றச் சட்டங்களை உருவாக்க தன் சிறப்பான பங்கை செலுத்தியவர்.

## 3) விதவைத் திருமணத்திற்கு ஆதரவு தந்த திருமிகு தருமாம்பாள் (1890 - 1962)



தமிழ்ப்பணி, சித்த மருத்துவப் பணி, பகுத்தறிவு எனப் பல்வேறு பணிகளுக்கிடையே **சமுதாய சீர்திருத்தப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர், விதவை மறுமணங்களையும் கலப்புத் திருமணங்களையும் ஆதரித்துத் தானே முன்னின்று** நடத்தியவர். திருமண வாழ்வை தேவையற்ற ஒன்றாகக் கருதி திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்தவர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர். 'வீரத் தமிழன்னை' என சோமசுந்தர பாரதியாரால் போற்றப்பட்டவர். வாழ்நாளெல்லாம் பெண் குலத்தின் முன்னேற்றத்திற்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

## 4) கள்ளுக்கடையை எதிர்த்தவர் - திருமிகு லட்சுமி காந்தம் (1921)



மதுரையின் முதல் பெண் எம்.எல்.ஏ. எனும் பெருமையைப் பெற்றவர். 8 வயதிலேயே தனது தாய் மாமா ஆதரவோடு பொது வாழ்வில் அடியெடுத்து வைத்தார். கள்ளுக்கடை மறியலில் [illegible] சிறைக்குச் சென்றவர்.

சட்டசபை உறுப்பினராகத் [illegible] எம்.எல்.ஏக்கள் யாவரும் ஒன் [illegible] **களின் அருகே சமமாக** [illegible] அறவழியில் காந்தீயக் கொள்கைக்காக பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கு இவர் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

## 5) எரிமலையாய் நின்ற மணலூர் மணியம்மை

மணலூர் மணியம்மை, தேசியவாதியாக, புரட்சியாளராக, பண்ணையடிமைகளுக்கு நீதி கேட்டுப் போராடிய பெண்மணி.

தஞ்சை மண்ணில் உயர்சாதிக் குடும்பத்தில் பிறந்து, அன்றைய கொடூரமான திருமண

### முதியோர் மட்டுமல்லர் விதவைகள்

1993–94 செய்த ஒரு ஆய்வின்படி, மொத்தமுள்ள முதுமை அடைந்துள்ள பெண்களில், 42 சதவீதம் பேர் விதவைகள், மொத்தமுள்ள முதிய பெண்களில் 6–லிருந்து 8 சதவீதம் பேர் தாம் குழந்தை இல்லாதவர்கள்.
- *Ecoomic and Political Weekly, June 2, 2001*

முறைப்படி, ஒன்பது வயதிலேயே வழக்குரைஞர் ஒருவர்க்கு இளையாளாக வாழ்க்கைப்பட்டவர்; 10 ஆண்டுகளே நீடித்த திருமண வாழ்விற்குப் பின், உறவினர்களின் வசைபாடுகளால், புகுந்த வீட்டுப் பந்தங்களை அறுத்துக் கொண்டு, தாய் வீடு திரும்பியவர். ஒரு முறை கதாகாலச்சேபம் செய்யும் ஒருவர், அமங்கலிப் பெண்களுக்குப் பூசை செய்யும் அருகதை இல்லையென்றபோது, பெண்ணைப் படைத்ததும் இறைவனே எனும்போது, கைம்பெண்ணுக்கு வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டது கண்டு வெகுண்டு, அதுவரை இறைவழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த மணியம்மை பூசை செய்வதைக் கைவிட்டார்.

காந்தியின் பணியில் ஈர்ப்பு கொண்ட மணியம்மை, கதர் அணிந்து தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரம் மேற்கொண்டதால் சேரி மக்களுக்கு '**அம்மா**'வானார்.

தஞ்சை நிலக்கிழார் குடும்பங்களில், நிலங்களைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட 'நடுவாள்' முறை குடியானவர்களைச் சுரண்டியதால், தானே தன் நிலத்தில் நேரடியாக விவசாயம் செய்தமையால் உயர்சாதியினர் பகைமையைச் சம்பாதித்தார். ஒருமுறை சேரியிலிருந்து வீடு திரும்பும் வழியில், 'மொட்டை சம்மனாட்டி' என ஏளனப்படுத்தப்பட்டு, குப்புறத் தள்ளிவிடப்பட்டார். எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்ற சிலம்பம் கற்றுக்கொண்டார். ஒரு முறை கால் முடப்பட்ட சேரிக் குழந்தையொன்றை உள்ளூர் மணியக்காரர் மகன் கட்டி வைத்து இரத்தம் ஒழுக அடித்ததற்காக கையில் அரிவாளுடன் ஆவேசமாகச் சென்று, அவன் கையைத் துண்டாட முயன்றார்.

சிறை மீண்டும் வந்த பின்னர், விவசாயச் சங்கம், துப்புறவாளர் சங்கம், என களம் இறங்கினார். பொய்க் குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டும் தளராமல் மக்களுக்காக நின்றார். விடுதலைப் போராட்ட தியாகியாக, தொழிலாளர் தோழியாக, சேரி மக்களின் அம்மாவாக, வாழ்ந்த மணியம்மை, நிலவுடைமை நாசங்களின் கோபத்தில் பலியானார்.

## 6) குழந்தை திருமணத்திற்கு முடிவு கட்டியவர் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

பிற்படுத்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து, தனது நெஞ்சுரத்தால் பெண் விடுதலைக்காகவும் தேவதாசி ஒழிப்புக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வீரப்பெண், ''தேவதாசி முறை தமிழகத்திலிருந்து ஒழிக்கப்பட்டே தீர வேண்டும். வருங்காலத்தில் 'தேவதாசி' என்கிற பெயர் சரித்திரத்தில்கூட இடம் பெறக் கூடாது'' என்று ஆவேசமாக முழக்கமிட்டவர்.



அந்தப் பெண்ணின் வீரமுழக்கத்தை மறுக்கும் விதமாகச் சுதந்திரப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தி அவர்கள், ''தேவதாசிகள் என்பவர்கள் ஆண்டவனின் திருப்பணிக்காக அர்ப்பணிக்கப் பட்டவர்கள், அவர்கள் தேவர்களின் அதாவது

**இந்தியாவில் முதியவரும், முதியவளும் (1991)**

| | | |
|---|---|---|
| முதியோர் | – | 26.34 % |
| பெண் முதியோர் | – | 28.18 % |

*Ecoomic and Political Weekly, June 2, 2001*

அரசு வேலையின்மை, முதுமை, பிணி, இயலாமை, வறுமை ஆகிய நிலைகளில் பொது உதவிக்கான உரிமை கிடைக்கச் செய்தற்கான வழி வகைகள் செய்தல் வேண்டும்.


***இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 41***

தெய்வங்களின் அடிமை என்கிற புனிதத்தன்மை பெற்றவர்கள். அதை ஏன் ஒழிக்க வேண்டு மென்கிறீர்கள்?" என்று கேட்டார்.

சற்றும் தாமதிக்காமல், அந்தப் பெண், "தேவதாசி முறை புனிதமானது என்றால், தேவதாசி முறை ஆண்டவனின் திருப்பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டது என்றால், அந்தத் தொழிலை பிறப்படுத்தப்பட்ட எங்கள் குலத்துப் பெண்கள் மட்டும் தான் செய்ய வேண்டுமா? உங்கள் உயர்சாதிக் குடும்பத்தி லிருந்து எந்தப் பெண்ணையாவது தேவதாசி ஆக்குங்களேன்! ஏனிந்த பாகுபாடு? என்று முழக்க மிட்டவர் தான் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

இந்திய நாட்டில் முதல் சட்டசபை பெண் உறுப்பினர், ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பலரின் உதவியைப் பெற்று மருத்துவரானார். சென்னை அரசு மருத்துவமனையில் பணியாற்றிய போது தான், பெண்ணடிமைத்தனம் விலக வேண்டும், தேவதாசி முறை ஒழிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான கொடுமைகள், அநீதிகள் அழிக்கப்பட வேண்டும். அதற்கு நாம் அரசியலில் இறங்க வேண்டும் என்கிற எண்ணம் அவருக்குள் உதயமானது.

## இணைந்தே வாழ்க



"இணைந்தே நீங்கள் பிறந்தீர்கள், இணைந்தே நீங்கள் என்றும் இருக்கவும் போகின்றீர்கள். இறப்பின் வெள்ளைச் சிறகுகள் உங்கள் காலத்தைக் கலைக்குவரை நீங்கள் இணைந்தே இருப்பீர்கள்.

இறைவனின் மௌன நினைவில்கூட நீங்கள் இணைந்தே இருப்பீர்கள்.

எனினும், உங்கள் இணைப்பிலும் இடைவெளிகள் இருக்கட்டும்.

விண்ணகத் தென்றல்கள் நடனமாட உங்களுக்கிடையே இடம் இருக்கட்டும்.

ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்யுங்கள், ஆனால் உங்களது அன்பை ஒரு கட்டாக ஆக்கிவிடாதீர்கள். இந்த அன்பு ஓர் அலைகடலாக உங்கள் ஆன்மாக்கள் எனும் கரைகளுக்கு இடையே அசைந்து ஆடட்டும்.

ஒருவர் ஒருவருடைய கிண்ணத்தை நிரப்புங்கள், ஆனால் ஒரே கிண்ணத்திலிருந்து நீங்கள் குடிக்க வேண்டாம்.

ஒருவர் ஒருவருடன் உங்கள் அப்பத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள் ஆனால் ஒரே அப்பத்தை நீங்கள் உண்ணவேண்டாம்.

வீணையின் நரம்புகள் ஒரே இசையை எழுப்பினாலும் அவை தனித்தனியாகவே இருப்பது போல் நீங்கள் இணைந்து ஆடுங்கள், பாடுங்கள், மகிழந்திடுங்கள் எனினும் நீங்கள் நீங்களாகவே உங்கள் தனித்தன்மையுடன் இருங்கள்.

உங்கள் இதயங்களைக் கொடுங்கள் ஆனால் அவற்றை ஒருவர் மற்றவர் பாதுகாப்பில் ஒப்படைத்துவிடாதீர்கள்.

ஏனெனில் வாழ்வின் கைகளால் மட்டும் உங்கள் இதயங்களை வைத்துக்கொள்ள முடியும்.

இணைந்து நில்லுங்கள். எனினும் மிகவும் நெருக்கமாக அல்ல.

ஏனெனில். கோயில் தூண்கள் தனித்தனியே நிற்கின்றன.

ஓக் மரமும் சைப்பிரசு மரமும் ஒன்றின் நிழலில் ஒன்று, வளருவது அல்ல.

- கலில் ஜிப்ரான்

லண்டனில் நாற்பத்திரண்டு நாடுகள் கலந்து கொண்ட மகளிர் மாநாட்டில் இவரும் இந்திய மாதர் சங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அப்போது உலகம் முழுக்கப் பெண்களுக்குச் சுதந்திரம் மறுக்கப்படுவதும், ஆண்கள் ஆதிக்கத்தால் பெண்கள் அடிமைகளாய் கட்டுண்டு கிடப்பதும், பெண்கள் வெறும் போகப் பொருள் என்கிற நிலையிலிருப்பதும் அவருக்குள் ஒரு புரட்சித்தீயை உருவாக்கியது. இந்திய மாதர் சங்கம் அவரை அரசியல் களத்திற்குள் இறக்கி விட்டது. முத்துலட்சுமி யின் வீரமும், விவேகமும் அவரை இந்தியத் திருநாட்டின் முதல் சட்டசபை உறுப்பினராக்கியது.

சட்டசபை உறுப்பினர் எனும் கவசத்தால் '**தேவதாசி**', '**பெண்ணடிமை**', '**பால்ய வயதுத் திருமணம்**' எனும் பேய்களை ஓட்டினார். பெண்விடுதலைக்காகவும், ஏழை எளிய மக்களுக் காகவும் தனது வாழ்வின் பெரும்பகுதியைச் செலவழித்தார். இது மட்டுமின்றி 1956இல் இந்திய அரசின் பத்மபூஷன் விருதுக்கும் அவர் சொந்தக்காரர் ஆனார்.

## வகுப்புப் பயிற்சி

1. *பெண்கள் அனைத்துப் பருவ நிலைகளிலும் பாகுபடுத்தப் பெறுவதைப் பார்த்தீர்கள். பாகுபடுத்தப்பட்ட பெண்கள் ஒவ்வொரு நிலைகளிலும் இழந்த உரிமைகள் யாவை.*

| நிலை | இழந்த உரிமைகள் |
|---|---|
| அ. கனவு நிலை | அ.<br>ஆ.<br>இ. |
| ஆ. கருநிலை | |
| இ. மழலை | |

| | |
|---|---|
| ஈ. குழந்தை நிலை | |
| உ. இளமை | |
| ஊ. மணநிலை | |
| எ. மனைவி | |
| ஏ. மருமகள் | |
| ஐ. தாய் | |
| ஒ. விதவை | |
| ஓ. முதுமை | |
| ஔ. குடிமகள் | |

2. பெண்களுக்கு இத்தனை வகை நிலைகள் உண்டென்று பார்த்தோம். இதே வகையாக ஆண்களின் வளர்ச்சி நிலைகளை பகுத்துப் பார்த்தால், எந்தெந்த பெண்களின் நிலைகள் ஆண்களுக்குப் பொருந்தும்? எந்தெந்த நிலைகள் பொருந்தாது?

1.

2.

3.

3. வீட்டில் உனது பெற்றோர் கீழ்க்கண்ட நிலைகளில் ஆண் பெண்ணென்று பாகுபாடு காட்டுகிறார்களா? எப்படி?

| நிலை | பாகுபாடு | |
|---|---|---|
| கல்வியில் | ஆம் இல்லை | எப்படி |
| விளையாட்டில் | | |
| உணவில் | | |
| மருத்துவத்தில் | | |
| உடையில் | | |

**சமத்துவ உரிமை**

சமயம், இனம், குலம், பாலினம், பிறப்பிடம் என்பவற்றுள் எதனையும் காரணங்களாகக் கொண்டு, குடிமகன் எவருக்கும் எதிராக அரசு வேற்றுமை பாராட்டுதல் கூடாது.

*இந்திய அரசியல் சாசனம், சரத்து 15 (1)*

4. பெண்களை தாழ்த்தியும், ஆண்களை உயர்த்தியும் சமூகத்தில் சொல்லாடல்கள் உள்ளன. அவைகள் மூலம் மீறப்பெறும் உரிமைகள் யாவை?

| பழமொழி | உரிமை மீறல்கள் |
|---|---|
| 1. பொம்பளை சிரிச்சா போச்சு<br>புகையிலை விரிச்சா போச்சு | |
| 2. பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல் | |
| 3. பெண்டிர்க்கழகு உண்டி சுருங்குதல் | |
| 4. ஆணாய் பிறந்தால் அருமை<br>பெண்ணாய் பிறந்தால் எருமை | |
| 5. ஆவதும் பெண்ணாலே<br>அழிவதும் பெண்ணாலே | |

**ஆ**ண்களைப் போலவே பெண்ணுக்கும் விரும்பிய கணவனை தெரிவு செய்ய உரிமை உண்டு. திருமண வாழ்வில் அல்லது திருமண முறிவில் ஆணைப் போலவே பெண்ணுக்கும் சமஉரிமை உண்டு. குழந்தை வளர்ப்பிலும் இரு பாலார்க்கும் சமவுரிமை உண்டு. *பிரிவு 6 (ஆ)*

**கு**ழந்தைத் திருமணம், பருவமடையாத பெண்களின் திருமண நிச்சயமும் நிறுத்தப்பட வேண்டும். திருமணத்துக்கான குறைந்தபட்ச வயது நிர்ணயிக்கப்பட வேண்டும். திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். *பிரிவு 6 (இ)*

**பெ**ண்களுக்கு எதிரான குற்றவியல் சட்டங்கள் அனைத்தும் உடனடியாக நீக்கப்பட வேண்டும். *பிரிவு 7*

**பெ**ண்களை கடத்தல், பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் போன்ற வன்முறைகள் ஒழிக்கப்படுவதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். *பிரிவு 8*

***பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கெதிரான***
***உடன்படிக்கை 1967***



| | |
|---|---|
| 6. அஞ்சு பெண் பிறந்தால் அரசனும் ஆண்டி | |
| 7. பெண் புத்தி பின்புத்தி | |
| 8. பெண்ணை அடிச்சு வளர்க்கணும்<br>முருங்கை மரத்தை ஒடிச்சு வளர்க்கணும் | |
| 9. சீறும் பாம்பை நம்பு<br>சிரிக்கும் பெண்ணை நம்பாதே | |
| 10. பெட்டைக் கோழி கூவியா<br>பொழுது விடியப் போகுது | |
| 11. சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை. | |

5. *வகுப்பறையில் பாலியல் சமத்துவத்தை எப்படி வளர்க்கலாம்?*

அ. பெண்ணை தாயாக மட்டுமின்றி ஆசிரியை / மருத்துவர், பேராசிரியை, நிர்வாகி, அரசியல்வாதி, சமூக சேவகி, விடுதலை வீரர் இப்படி பல்வேறு கோணங்களில் படங்களைத் தயார் செய்து வகுப்பறையில் மாணவர்களுக்கு காட்டுதல்.

ஆ. பெண்களும், ஆண்களைப் போலவே அனைத்துத் துறைகளிலும் வேலை செய்ய முடியும் என்பதை பத்திரிகைகளிலிருந்து கத்தரித்த படங்கள், சினிமா படங்கள் போன்றவற்றை காட்டுதல்.

(எ.கா.)

☞ வயல்களில் ஆண்களைப் போல பெண்களும் வேலை செய்யும் தொழிலாளியாக

☞ மருத்துவமனைகளில் மருத்துவராக

☞ விறகு வெட்டுபவராக

☞ வாகன ஓட்டுனராக

இ. பள்ளிகளில் அவ்வப்போது நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு பெண் எழுத்தாளர்களை, பெண் கலைஞர்களை, பெண் பாடகர்களை மற்றும் பல துறைகளில் திறமையுடைய பெண்களை அழைத்து வந்து மாணவர்களோடு பேச வைத்தல்.

ஈ. பாடப் புத்தகங்களில் காணப்படும் பெண்கள் பற்றிய கருத்துக்களை விமர்சன கண்ணோட்டத்துடன் பார்க்க வைத்தல்.

உ. ஆரம்பப் பள்ளிகளில் ஆண், பெண் குழந்தைகளைப் பிரித்து வைக்காமல் இருத்தல்.

## வகுப்பறையுள் கீழ்க்கண்ட வழிமுறைகளையும் பின்பற்றலாம்

1. ஆரம்பப் பள்ளிகளில் இருபால் குழந்தைகளைச் சேர்ந்து அமர செய்தல்

2. குழு நடவடிக்கைகளில் இருபால் குழந்தைகளையும் இணைத்தல்.

3. கூச்சப்படும் பெண் குழந்தைகளுக்கு தைரியம் வரும் வகையில் அவர்களுக்கு தனி முக்கியத்துவம் கொடுத்து பாடங்களை வாசிக்கச் சொல்லுதல், கேள்விகளைக் கேட்டல் முதலியன.

4. துணிச்சலற்ற மாணவனைப் பார்த்து (பெண் குழந்தை) போன்று அழாதே என்பதும், துணிச்சலான பெண் குழந்தைகளைப் பார்த்து (ஆம்பள மாதிரி) நடக்காதே என்பதும் போன்ற சொற்களைத் தவிர்த்தல்.

**6. உங்கள் பள்ளியில் நடந்த கீழ்க்கண்ட விழாக்களில் பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு விழா, சுதந்திர விழா போன்ற விழாக்களைச் சிறப்பிக்க அழைக்கப் பட்ட விருந்தினர்கள் யார் ?**

| | விழா | சிறப்பு விருந்தினர் பெயர் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| சிறப்பு விருந்தினர்களில் பெரும்பான்மையோர் யார் என்று பாருங்கள் | | |

## 7. பயிற்சி

| | | ஏற்கிறேன் | ஏற்கவில்லை |
|---|---|---|---|
| 1. | பெண்களுக்கும், ஆண்களுக்கும் கல்வியில் சமத்துவம் வேண்டும். | | |
| 2. | இருவருக்கும் ஒரே அளவு உணவு வேண்டும். | | |
| 3. | இருவருக்கும் ஒரே அளவு மருத்துவவசதி வேண்டும். | | |
| 4. | இருவருக்கும் ஒரே மாதிரியான கடமைகளும்/ பொறுப்புகளும் உண்டு. | | |
| 5. | இருவருக்கும் ஒரே மாதிரியான விளையாடுவதற்கு உரிமை உண்டு. | | |
| 6. | ஒரே மாதிரியாக வேலைவாய்ப்பு உரிமை உண்டு | | |
| 7. | இருவரும் சமதிறனும், சம அறிவும் பெற்றவர்கள் | | |
| 8. | சம ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். | | |
| 9. | இணைந்து முடிவெடுக்க அதிகாரம் வேண்டும். | | |
| 10. | சம சொத்துரிமை உண்டு. | | |


## வீட்டுப் பயிற்சி

1. உன் வீட்டில் உன் அம்மா கீழ்க்கண்ட விஷயங்களில் சமத்துவமாக நடத்தப் படுகின்றார்களா?

| | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| ■ | உடை வாங்குவதில் | | |
| ■ | வரவு செலவில் | | |
| ■ | திருமண விஷயங்களில் | | |
| ■ | படிக்க வைப்பதில் | | |

2. கீழே தரப்பட்டிருக்கும் பெண்ணின் படத்தோடு கொடுக்கப்பட்டிருக்கும் வாசகங்களைப் படித்துப் பார்.

- **நீ பெண்ணாக இருந்தால் நீ அனுபவித்திருக்கிறாயா?**
- **ஆணாக இருந்தால், உன் சகோதரிக்கு இவ்வனுபவங்கள் உண்டா?**



3. அன்றாட வாழ்க்கையில் பெண்கள் பற்றிச் சமூகம் வைத்திருக்கும் சில நம்பிக்கைகளைச் சிந்தித்து எழுதவும்.

அ. பெண்கள் இப்படித்தான் இருப்பார்கள்

அ. இ.

ஆ. ஈ.

ஆ. பெண்கள் இப்படியெல்லாம் இருக்க மாட்டார்கள்.

அ. இ.

ஆ. ஈ.

இ. பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும்.

அ. இ.

ஆ. ஈ.

ஈ. பெண்கள் இதையெல்லாம் செய்யக் கூடாது.

அ. இ.

ஆ. ஈ.


உ. பெண்களிடம் இந்த வேலையெல்லாம் கொடுக்கக் கூடாது. எந்த வேலையெல்லாம்.

அ. இ.

ஆ. ஈ.

**கல்வி பெறும் உரிமை பெண்களுக்கு வேண்டும். கல்வியில் அனைத்து மட்டங்களிலும் (பல்கலைக் கழகக் கல்வி, தொழிற்கல்வி முதலியன) பங்கேற்கவும், ஒரே வகையான பாடத் திட்டங்கள், தேர்வு முறைகள், ஒரே வகையான வசதிகள் நிறைந்த பள்ளிகள், ஒரே வகையான கற்பிக்கும் முறை இவைகளை அனுபவிக்கும் உரிமை வேண்டும்.**

*பெண்கள் மீதான அனைத்து வகையான பாகுபாட்டிற்கெதிரான உடன்படிக்கை 1967, பிரிவு 9*



4. பெண்களைப் பாகுபடுத்துகிறோம் என்பது உண்மையானால், உன் தாயும் பாகுபடுத்தப்படுகிறாள் என்று தானே அர்த்தம். உன் தாய் பாகுபடுத்தப் பெறல் உனக்கு மகிழ்வைத் தராது என்பது உண்மை தானே. பாகுபாட்டைப் போக்குதற்கான முயற்சியை வீட்டிலேயே தொடங்க வேண்டும். உன் அப்பாவிடம் பாகுபாடு மனித உரிமை மீறல் என்பதனை எடுத்துக்கூறி, அம்மாவை சமத்துவமாக நடத்துவதற்கு என்னென்ன முயற்சி மேற்கொள்வாய். உன் முயற்சி பற்றியும், கிடைத்த வெற்றி, தோல்வி பற்றியும் வகுப்பறையில் பகிர்ந்து கொள்.

5. பெண் குழந்தையைக் கருவிலும், சிசுவிலும் கொலை செய்வது, குழந்தையின் உயிர் வாழும் உரிமையை மறுத்தல் என்பதனை நீ ஏற்றுக் கொள்கிறாயா? அப்படியானால், பெண் குழந்தை கொலைக்கு எதிரான பிரச்சாரம் செய்வதற்கு பத்து கோஷங்களைத் தயார் செய்து கரும்பலகையில் எழுதுக.

   **எ.டு. பறிக்காதே! பறிக்காதே! வாழ்வுரிமையைப் பறிக்காதே.**

6. ஏதாவது ஒரு பிரபலமான ஆங்கில / தமிழ் இதழ் ஒன்றை எடுத்துக்கொள். அதிலுள்ள விளம்பரங்களை எண்ணவும். அவற்றில் எத்தனை பெண்களை வைத்து விளம்பரம் செய்யப்பட்டுள்ளன என்பதைக் குறித்து வந்து வகுப்பறையில் கூறவும். அவைகளைப் பற்றிய உன்னுடைய சிந்தனைகளையும் பகிரவும்.

7. தொலைக்காட்சியில் வரக்கூடிய விளம்பரங்களை உற்றுக் கவனி. எத்தனை விளம்பரங்களில் பெண்கள் எப்படியெல்லாம் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள்? விளம்பரம் செய்யப்படும் பொருளுக்கும் பெண்ணுக்கும் ஏதாவது தொடர்புள்ளதா என்பதை எழுதவும். எழுதியவற்றை வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.

# 3. மதப்பாகுபாடு


# 3. மதப்பாகுபாடு

**பாட நோக்கம்**

அ. பல்வேறு மதங்களையுடைய நாட்டில் மதங்களிடையே நல்லுறவை வளர்த்து, அதன் மூலம் சமூக நல்லிணக்கத்தை உருவாக்கல்.

ஆ. மதச் சுதந்திரம் அடிப்படை உரிமை என்பதனை எடுத்துக் காட்டல்.

இ. பெரும்பான்மை மதம் என்ற பெயரில், சிறுபான்மைச் சமயங்களைப் பாகுபடுத்த கூடாது. சிறுபான்மைச் சமயங்களுக்கும் சம உரிமையுண்டு. அதே வேளை சிறுபான்மைச் சமயஞ் சார்ந்தோரைக் காக்க தனியுரிமைகள் வேண்டும் என்பதனையும் புரியவைத்தல்.



1. அனைவரும் அவரவர் மனசாட்சிப்படி விரும்பும் மதத்தினைப் பின்பற்ற சமவுரிமையுண்டு. பொது அமைதி, ஒழுக்கமுறை, சுகாதாரம் ஆகியவற்றிற் குட்பட்டு ஒரு மதத்தைத் தழுவ, கடைப்பிடிக்க, பரப்ப அனைவர்க்கும் உரிமையுண்டு.

*இந்திய அரசியல் சாசனம், பிரிவு 25*

2. இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் வாழும் குடிமக்களின் அனைத்துப் பிரிவினர்க்கும் அவர்களுடைய மொழி, எழுத்து வடிவம், கலாச்சாரம் ஆகிய வற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.

*இந்திய அரசியல் சாசனம், பிரிவு 29*

3. மதம் அல்லது மொழியை அடிப்படையாகக் கொண்ட அனைத்துச் சிறுபான்மை யினர்க்கும், அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்வி நிறுவனங்களை நிறுவவும், நிறுவகிக்கவும் உரிமையுண்டு.

*இந்திய அரசியல் சாசனம். பிரிவு 30*

4. சிந்தனை, மனசாட்சி மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. மதத்தை மாற்றிக் கொள்ளவும், தழுவிய மதத்தைப் போதிக்கவும், வழிபடவும், கடைப்பிடிக்கவும் உரிமையுண்டு.

*அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு 18*

**ஆசிரியர் நடவடிக்கை**

**ஆசிரியர்** : மாணவர்களே ! ஒரு முக்கியமான கேள்வி ஒன்றை கேட்கப் போகிறேன். சரியாகப் பதில் சொல்ல வேண்டும். உங்களுக்கெல்லாம் சாமிப் பக்தி இருக்கிறதா?

**மாணவர்கள்** : (ஒரே குரலாக) சாமியை நாங்க தினமும் கும்புடுறோம். சாமி கும்பிட்டுத்தான் பள்ளிக்கு வர்றோம்.


**மாணவர்கள்** : சார், நான் திருநீறு போட்டுக்கிறேன்.

**மாணவன்** : நான் சிலுவை அணிந்திருக்கேன்.

**மாணவி** : நான் பர்தா அணிந்திருக்கேன்.

**ஆசிரியர்** : அப்போ நீங்களல்லாம் சாமி கும்பிடுறீங்க. ஆனா ஒரே சாமியல்ல, வேறு வேறு சாமியை வேறு, வேறு விதமா கும்புடுறீங்க.

**மாணவன்** : நான் சாமியைக் கும்புடுறதில்லை சார்! எங்க வீட்ல யாருமே சாமி கும்பிட மாட்டோம்.



**ஆசிரியர்** : பார்த்தீங்களா! சாமியைக் கும்பிடறவங்க இருக்கிறாங்க. சாமியை விதவிதமாகக் கும்புடுறவங்க இருக்கிறாங்க. அதேவேளை சாமியே இல்லங்கறவங்களும் இருக்கிறாங்க. நம்ம ஊர்ல எத்தனை வகை ஆட்கள் பார்த்தீங்களா? கடவுளை நம்புவதும் நம்ம உரிமை தான். ஒரே கடவுளை வழிபடுவதும், விரும்பிய கடவுளை வழிபடுவதும் நம்ம உரிமைதான், கடவுளை வழிபடாம இருக்கிறதும் நம்ம உரிமைதான்.

இன்னொரு கேள்வி ! கடவுளை யாராவது பார்த்திருக்கிறீங்களா?

**மாணவர்கள்** : இல்லை சார்!

**ஆசிரியர்** : ஆனால், பார்க்காத கடவுளை நேசிக்கிறோம்! பக்தி கொள்கிறோம். கடவுள் மீதான பக்தியால் ஆடுகிறோம்! பாடுகிறோம்! பக்தியின் உச்சியில், மிருகங்களைப் பலி கொடுக்கிறோம். ஏன்? மனிதர்களைக்கூட பலி கொடுக்கிறோம். தெய்வத்தை வழிபட வேண்டும். பக்தியாக இருக்க வேண்டும் என்று தானே உன் பெற்றோர் உனக்கு அறிவுரை கூறுகின்றனர். நீ ஏதாவது தவறு செய்தால், உடனே உன் பெற்றோர் என்ன சொல்வர்? அய்யய்யோ! சாமியை கும்பிடறவங்க தப்பு செய்யலாமா என்று கேட்கிறாங்கல்ல!

தப்பு செய்தால் சாமி பிடிச்சுக்கும் என்று சொல்றாங்களல்ல. அப்போ சாமிக்குத் தப்பு பிடிக்காது! குற்றம் செய்றவங்களைப் பிடிக்காது ! அதிகமாகக் குற்றம் செய்றவங்கள சாமி ஒரு நாள் கண்டிக்கும். தண்டிக்கும் என்றெல்லாம் சொல்லுகிறோமே! '**அன்பே சிவம்**' என்கிறோம். **'Love is God'** என்கிறோம்.

உங்க ஊர்ல சாமிக்குத் திருவிழா நடத்தினா எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீங்க.

**இவையெல்லாம் கண்ணில் இதுவரை காணாத கடவுள் பேரோலதானே செய்கிறோம்.**

**இந்தக் கடவுள்தான் உலகைப் படைத்தார் என்கிறோம்.**

**அப்போ, அந்தக் கடவுள்தானே மனிதனையும் படைத்தார் என்று நம்புகிறோம்.**

**அப்போ கடவுள் படைத்த மனிதனை ஏன் பகைக்கிறோம்?**

**கொல்கிறோம்? ஒதுக்குகிறோம்?**

**கடவுள் பொதுவானவர் என்பதால் மனிதர்களும் பொதுவாக இருக்க வேண்டுமல்லவா?**

**கடவுளை நாம் நேசிப்பது போல அவர் படைத்த மனிதர்களை நேசிக்கிறோமா?**

மதங்கள் கடவுளின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ளன. இம்மதங்களின் பெயரால் கலவரங்கள் நடத்தப்படுகின்றன. கலவரங்களால் மனிதர்கள் கொல்லப்படுகின்றனர். கொல்வோரும், கொல்லப்படுவோரும் யார்? யார் பெயரால் கொல்கின்றனர்? மதங்களின் பெயரால் கொல்லப் படுவதற்கு என்ன நோக்கம்?

## அருமை மாணவர்களே!

கடவுளா மதத்தை உண்டாக்கினார்? இல்லையே! அவரவர் விரும்பும் கடவுள் பற்றிய கொள்கைகளை மக்களுக்குச் சொல்ல உருவானது தானே மதம். கடவுள் தானே மதத்தின் மையம்! கடவுள் இல்லையென்றால் மதம் இல்லை. ஆனால், மதம் இல்லையென்றாலும், கடவுள் உண்டு. கடவுளை மையமாகவுடைய மதத்தின் பெயரால் ஏன் சண்டை? போடுகிறோம். ஏன் கலவரம் செய்கிறோம்.

நம்ம நாட்டில் நிறைய மதக் கலவரங்களைப் பார்க்கிறோம். நிறைய பேர் மதக் கலவரங்களால் சாகிறார்கள். இது நம் நாட்டில் மட்டுமல்ல, உலக வரலாற்றில் எல்லா நாடுகளிலும் மதத்தின் பெயரால் வன்கொடுமைகள் நிகழ்ந்துள்ளன.

கடவுள் ஒருவர் என்றால், அவர் நல்லவர், பொதுவானவர் என்றால் கடவுள் பெயரால் ஏன் வன்முறைகள் நிகழ வேண்டும்.

கடவுளின் பெயரால் **எத்தனையோ மதங்கள்** என்றால் என்ன அர்த்தம்?

அ. **த**ன் நாட்டுப் பூகோள எல்லையுள் வாழும் சமய, இன, மொழிச் சிறுபான்மையினரின் தனித்த அடையாளங்களை அரசுகள் பாதுகாப்பதோடு, அவர்களின் தனித்த அடையாள வளர்ச்சிகான சூழல்களையும் உருவாக்க வேண்டும்.

ஆ. இவ்வுரிமைகளை நிறைவேற்ற அரசுகள் உரிய சட்டங்களை இயற்ற வேண்டும். *பிரிவு 1.*


அ. **தே**சிய, இன, மொழி, சமயஞ்சார்ந்த சிறுபான்மையினர் தங்களின் கலாச்சாரத்தை அனுபவிக்கவும், ஒரு சமயத்தைத் தழுவவும், கடைப்பிடிக்கவும், தாய்மொழியைப் பயன்படுத்தவும், பொதுவிடங்களிலும், தனியாகவும், எவ்வித பாகுபாடுமின்றி அனுபவிக்கவும் உரிமையுண்டு. *பிரிவு 2*

**சி**றுபான்மையோர் தம் தனித்த பண்புகளை வெளிப்படுத்தவும், கலாச்சாரம், மொழி, பாரம்பரியம், பழக்க வழக்கங்களை வளப்படுத்தவும் உரிமையுண்டு. *பிரிவு 4*

*தேசிய, இன மொழிச் சமய சிறுபான்மையோர்க்கான அய்க்கிய நாட்டவையின் உரிமைப் பிரகடனம்*

- ஒவ்வொரு மதத்திற்கும் தனித்தனிக் கொள்கைகள் இருக்கின்றன என்று தான் அர்த்தம்.
- ஒவ்வொரு மதத்திற்கும் ஒரு வரலாறு இருக்கிறது என்று அர்த்தம்.
- எனவே, ஒவ்வொரு மதத்திற்கும் தனி அடையாளம் இருக்கிறது என்றர்த்தம்.
- ஆகவே, மதங்களுக்குள் வேறுபாடு இருக்கின்றனவா? ஆம்! நிறைய வேறு பாடுகள் இருக்கின்றன? என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
- வேறுபாடுகளை மதிக்கவும் வேண்டும்.
- வேறுபடும் உரிமையை மறுக்கக் கூடாது
- வேறுபாடுகள் இருந்தாலும் ஒற்றுமை யாக இருக்க முடியுமா?
- ஒற்றுமையாக இருக்க வேண்டுமா? வேண்டாமா?

**வேற்றுமை அல்லது வேறுபாட்டை மதித்தலைத் தான் சகிப்புத்தன்மை என்கிறோம்.**



நாம் பிற சமயங்களைச் சகிக்கிறோமா? பாகுபடுத்துகிறோமா? கீழ்க்கண்ட நிகழ்வுகளை வாசிக்கவும்.

### நிகழ்வு 1



நான் ஒரு ஆசிரியை. எங்களது பள்ளியில் இந்து முஸ்லீம் மாணவர்கள் ஒரே பெஞ்சில் அமர்ந்து படித்து வருகின்றனர். குஜராத் பந்த் அறிவிக்கப்பட்ட போது ஈட்டிகள், அமில மற்றும் பெட்ரோல் குண்டுகள் வைத்திருந்த சுமார் 10,000 பேர் கொண்ட கும்பல் காலை 10 மணியளவில் ஒரு வழிபாட்டுத்தலத்தை முற்றிலுமாக தகர்த்தனர். மூன்று நபர்களின் குடும்பங்களை உயிரோடு எரித்தனர்.

ஆறுவயது சிறுவனின் வாயில் பெட்ரோலை ஊற்றித் தீக்குச்சி ஒன்றைக் கொளுத்தி, அவனது வாயில் போட்டு அவன் உயிரோடு வெடித்துச் சிதறியதை என் கண்களால் நேரடியாகப் பார்த்தேன்.

என் கண் முன்பே சுமார் 120 பேர் வரை உயிரோடு எரித்துப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டேன்.

நான் உதவியற்று இருந்தேன். கழிப்பிடத்தில் பதுங்கியிருந்தேன். எங்களில் பலர் இது போன்ற கொடூரமான காட்சிகளைக் கண்டவாறே ஆங்காங்கு உயிருக்காகப் பதுங்கியிருந்தனர்.

*– குசராத் படுகொலைகள் 2002*

**தீயினைக் கும்பிடும் பார்ப்பார் – நித்தந்**
**திக்கை வணங்குந் துருக்கர்,**

**கோயிற் சிலுவையின் முன்னே – நின்று**
**கும்பிடும் யேசு மதத்தார்**

**யாவரும் பணிந்திடும் தெய்வம் – பொருள்**
**யாவினும் நின்றிடும் தெய்வம்**

**பாருக்குள்ளே தெய்வம் ஒன்று – இதில்**
**பற்பல சண்டைகள் வேண்டாம்**

**- பாரதி**



நிகழ்வு 2

## மறுவாழ்விலும் பாகுபாடு, நிவாரணப் பணியிலும் பாகுபாடு



குசராத் கலவர வன்முறைகளின் காரணமாக 1,74,000 பேர் அகதிகளாயினர். இவர்களில் அனைவருமே அகதி முகாம்களில் அடைக்கலம் தேடினர் என்று சொல்ல இயலாது. பலர் மாநிலம் முழுவதும் தமக்குத் தெரிந்தவர் வீடுகளில், உறவினர் வீடுகளில் புகலிடம் தேடினர். அரசு கணக்கையும் தாண்டி, வேறு புள்ளி விபரங்கள் அகதிகளானோர் எண்ணிக்கையை 2,50,000 என்கிறது. இக்கலவரத்திற்கு முந்திய ஆண்டு, குசராத் மாநிலம் மிகப்பெரிய பூகம்பத்தால் தாக்கப்பட்டது. குசராத் பூகம்ப நிவாரணப் பணி என்ற பெயரில் நிவாரணப் பணி வேகப்படுத்தப்பட்டது. அதே அரசு, இக்கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு மட்டும் நிவாரணம் அளிக்கத் தயங்கியதாக, ஆய்வறிக்கை கூறுகிறது. பாதிக்கப்பட்டோர் மதச் சிறுபான்மையோர் என்பதால் இப்பாகுபாடா? அப்படியாயின், இது அரசியல் சாசன விதிக்கு முரணில்லையா?

**– *Crime Against Humanity, P.50***




நிகழ்வு 3

எங்கள் குடும்பத்தில் ஒரு சகோதரன், ஒரு சகோதரி, எனது வயதான தந்தை மட்டுமே எஞ்சியுள்ளனர். எனது தாயும், எனது மற்றொரு சகோதரியும் கத்தியால் குத்தப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். நான் இவையெல்லாவற்றையும் கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருந்தேன்.

### மதச்சகிப்பை வளர்ப்போம்

உண்மையான இந்தியா என்பது இந்துக்களுக்கு மட்டும் உரியதன்று. ஏனைய மதத்தவரையும் ஏற்றுக்கொள்ளுமாறுக்கும் கிறித்தவர் உண்மை கிறித்தவர் அன்று. உண்மைச் சமயங்களைத்த மதத்தவர் பண்பானது உலகம் சகிப்பற்ற மதங்களின் பாதையைத்தேடக் கூடாது. மதங்களிடையே வளர்க்கப் பெறும் சகிப்பின்மை இந்தியாவை, பாகிஸ்தானை அழித்துவிடக் கூடாது. மதச் சகிப்பின்மையால் அழியப் போகும் இந்தியாவைக் காக்க நம் உயிரையும் தியாகம் செய்ய உறுதியேற்போம்.

**– மகாத்மா காந்தி**

எனது சகோதரி இன்னும் அழுவதை நிறுத்தவில்லை. எனது தந்தைக்கோ பேச்சு வரவில்லை.

நான் ஒரு சுவர் மீது ஏறி நின்ற போதுதான் என் தாயும், சகோதரியும், கத்தியால் குத்தப்பட்டதைக் கண்டேன். பின் மண்ணெண்ணெய் அவர்கள் மீது ஊற்றப்பட்டு எரிக்கப்படுவதைக் கண்டேன். நான் அதிர்ச்சியில் கீழே விழுந்தேன். நான் எழ முயன்ற போது ஒருவர் ஓடிவந்து என் மார்பிலும், வயிற்றிலும் அடித்தார். அப்போது கூட்டத்தினர் என் தலையை வெட்டச் சொல்லி கூச்சலிட்டனர். ஆனால் அக்கூட்டத்திலிருந்த பெரியவர் ஒருவர் குழந்தையைக் கொல்லாதீர்கள் என்றார். மற்றவர்கள் அவரோடு வாதிட்ட சமயம் அப்பெரியவர் ''ஓடிவிடு மகனே'' என்றார். நான் ஓடி வந்து விட்டேன். இன்னும் கூட அந்த வயதான மனிதரின் முகம் என் நினைவில் உள்ளது.

*– குசராத் படுகொலைகள் 2002*

நிகழ்வு 4

## சொந்த நாட்டில் அகதிகளானோர்!



காஷ்மீர் மாநிலத்தில் நிகழும் வன்முறைகளை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நம் நாட்டின் எல்லையைத் தாண்டி காஷ்மீரினுள் ஊடுருவி பயங்கர வாதத்தைக் கட்டவிழ்த்து விடுவோர் ஒருபக்கம். உள்நாட்டு மதத் தீவிரவாதிகள் இன்னொரு பக்கம். இருவரும் இணைந்து காஷ்மீர் மாநிலத்தைச் சொந்த நாடாகக் கொண்ட காஷ்மீர் பண்டிட்களை மதத்தை காரணமாக்கி தொடர்ந்து அச்சுறுத்துகின்றனர். இரவில் தூங்கும் போது இரக்கமின்றி கொலை செய்கின்றனர். வீடுகள் அழிக்கப்படுகின்றன. 1990–இல் மட்டும் 1,60,000 பண்டிட்டுகள் தங்கள் ஊரிலிருந்து வெளியேறியுள்ளனர். 2,17,000 பண்டிட்டுகள் எங்கும் செல்ல முடியாமல் அகதி முகாம்களில் எவ்வித வசதியுமின்றி வாழ்கின்றனர். சரியான மருத்துவ வசதியின்மையால், பலர் செத்துப் போகின்றனர். சொந்தப் பூமியாகிய காஷ்மீரை விட்டு டெல்லியில் மட்டும் 1,43,565 பேர் அகதிகளாகியுள்ளனர். மத அடிப்படையில் அழிக்கப்படும் பண்டிட்டுகளின் எதிர்காலம் என்னாவது? பல சமயங்களுடைய ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்தவர் என்பதால் இந்த நிலை வரலாமா?

**- Outlook** *பிப்ரவரி 10, 2003*

## மதக் கலவரங்களும், கொல்லப்பட்டோரும்


| ஆண்டு | எண்ணிக்கை | கொல்லப்பட்டோர் | ஆண்டு | எண்ணிக்கை | கொல்லப்பட்டோர் |
|---|---|---|---|---|---|
| 1950 | 56 | 50 | 1980 | 421 | 372 |
| 1959 | 42 | 41 | 1981 | 319 | 196 |
| 1964 | 1070 | 1919 | 1983 | 500 | 1143 |
| 1967 | 198 | 301 | 1984 | 476 | 2000 |
| 1968 | 346 | 133 | 1992 | 37 | 1324 |
| 1969 | 519 | 673 | 1993 | 33 | 700 |
| 1970 | 528 | 298 | 1998 | 600 | 207 |
| 1979 | 304 | 261 | 2002 | 16 | 7081 |

1950 – 2002 வரை நடந்த மதக்கலவரங்களில் கொல்லப்பட்டோர் 20,332 பேர்

– ஆதாரம் : *Indian Journal of Secularism, April - June 2002*

### நிகழ்வு 5

குஜராத் மதக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை முஸ்லீம்கள் சொந்த மண்ணில் அகதிகளாய் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். கலவரம் முடிந்து அமைதி திரும்பிய பின் முகாம்களிலிருந்து வீடு திரும்பி தாங்கள் ஏற்கனவே செய்து வந்த சொந்தத் தொழிலைச் செய்தனர். ஆனால், இவர்களிடம் மற்றவர்கள் எந்தப் பொருளையும் வாங்காமல் புறக்கணிக்கின்றனர். இத்தகைய




## மதரீதியான பாகுபாடு



- மதங்களிடையே வளரும், பகை அமைதியை குலைக்கும்.
- மக்களின் மதச்சுதந்திரம் பாதிக்கப்படும்.
- கருத்துரிமை மறுக்கப்படும்.
- வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படும்.
- தங்கள் மதத்தைப் போதிக்க முடியாது.
- மக்களைப் பிரிக்கும், தேசத்தையே துண்டாடும்.
- பெரும்பான்மை மத அடிப்படையான ஆட்சி அமையுமானால், சிறுபான்மை சமயங்களின் மேற்கண்ட அனைத்து உரிமைகளும் மீறப்படும். பெரும்பான்மை மதத்தைச் சார்ந்துதான் சிறுபான்மையினர் வாழ முடியும்.

சமூக புறக்கணிப்பை சிறுபான்மை முஸ்லீம்கள் ஒரு வகையான தீண்டாமையாகவே கருதுகின்றனர்.

பாவாகட் என்றுமிடத்தைச் சேர்ந்த ஷேக் என்பவர் இதுபற்றிக் கூறும் போது, "நீங்கள் எங்களைப் புதிய தீண்டத்தகாதவர்கள் என்றே கூப்பிடலாம். எங்களுக்கு உதவ இங்கு யாருமே இல்லை" என்றார்.

***— இந்தியா டுடே செப்டம்பர் 1, 2003***

## பிற மதத்தை ஏன் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம் ?

- பிற மத்தினர் பற்றிய தவறான முன் தீர்மானக் கருத்துக்கள்

  (உ.ம். இந்த மதத்துக்காரவங்க தீவிரவாதிங்க, மதவெறி பிடித்தவங்க என்று சில கருத்துக்களை மீண்டும், மீண்டும் சொல்லி உள்வாங்கச் செய்தல்.)
- தான் சார்ந்த மதம் தான் உயர்வானது எனக் கருதுதல்.
- தன் மதம் பெரும்பான்மையோர் மதமாக இருப்பதால், இம்மதம் மட்டுமே நாட்டில் இருக்க வேண்டும் என்று எண்ணுதல்.
- மதத்தைச் சுய நலனுக்கும், அரசியலுக்கும் பயன்படுத்துதல்.
- குழந்தைப் பருவத்திலேயே மதப்பகை வளர்த்தல்.

  எ.டு. நம்ம சாமி வேற, அவங்க சாமி வேற, நம்ம சாமி நல்லவரு, அவங்க சாமி கெட்டவரு.

**இ**ந்திய எல்லை அல்லது ஏதாவது ஒரு பகுதியில் வசிக்கும் குடிமக்களின் அனைத்துப் பிரிவினருக்கும் அவர்களுடைய மொழி, எழுத்து வடிவம் மற்றும் கலர்சசாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.

***இந்திய அரசியல் சாசனம் , பிரிவு 29 (1),***

**அ**ரசால் அல்லது அரசின் நிதி உதவியால் நடத்தப்பட்டு வருகின்ற கல்வி நிலையங்களில் எந்த குடிமகளுக்கும் மதம், இனம், சாதி, மொழி அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றில் அடிப்படையில் சேர்க்கை அனுமதி மறுக்கப்படக் கூடாது.

***இந்திய அரசியல் சாசனம், பிரிவு 29 (2)***




**க**ல்வி நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் போது சிறுபான்மையினரால் நிறுவகிக்கப் பெறும் கல்வி நிறுவனம் என்ற காரணத்தினால் அரசு நிதி உதவி வழங்குவதில் பாகுபாடு காண்பிக்கக் கூடாது.

- பெரும்பான்மையினர் அனுபவித்து வரும் அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு சிறுபான்மையினர்க்கு உரிமையுண்டு.

***இந்திய அரசியல் சாசனம், பிரிவு 30***

## வகுப்புப் பயிற்சி

1) நம் நாட்டில் என்னென்ன மதங்கள் உள்ளன.

அ.

ஆ.

இ.

ஈ. முதலியன.

2) ஒரு நாட்டில் பலமதங்கள் இருப்பது சரி என்று ஏற்றுக் கொள்கிறாயா ? ஆம்/ இல்லை

ஆமென்றால் ஏன்? காரணங்கள் அ.

ஆ.

இ.

இல்லையென்றால் ஏன்? காரணங்கள் அ.

ஆ.

இ.

– உன் மதத்திலுள்ள நல்ல பண்புகள் மூன்றினை வரிசைப்படுத்து.

அ.

ஆ.

இ.

– நீ அறிந்த வேறு மதங்கள் இரண்டின் நல்ல பண்புகளை எழுது.

அ.

ஆ.

இ.

3. மக்கள் அவரவர் விரும்பிய மதங்களைத் தழுவுவது மனித உரிமையா? ஆம் எனில் உன் கருத்து.

4. உன் வகுப்பில் வேறு மதம் சார்ந்த மாணவர்கள் இருந்தால், அவர்களோடு நீ சமமாகப் பழகுகிறாயா?

ஆம் இல்லை

5. சமமாக பழகவில்லையென்றால் ஏன் என்பதற்கான காரணத்தைச் சொல்.

6. பாகுபாடு காட்டப் பெறும் மதஞ்சார்ந்தோர் என்னென்ன உரிமைகளை இழப்பர்?

அ. இ.

ஆ. ஈ.

7. அ. பெரும்பான்மை மதத்தினரையும் சிறுபான்மை மதத்தினரையும் சமமாக நடத்த வேண்டும்.

சரி தவறு

ஆ. சிறுபான்மை மதத்தவர்க்குத் தம் மதம், கலாச்சாரம், பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாக்க தனிச் சலுகைகள் அளிக்கப்படல் வேண்டும்.

| சரி | தவறு |
|---|---|

இ. பெரும்பான்மை மதத்தினரையும், சிறுபான்மை மதத்தினரையும் சமமாக நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, சிறுபான்மையினர்க்கு சிறப்புச் சலுகைகள் கொடுப்பது சமத்துவத்திற்கு எதிரானதல்ல.

| சரி | தவறு |
|---|---|

ஈ. சிறுபான்மை மதம் சார்ந்தவர்கள் தனிச் சலுகைகள் கேட்பது சரியல்ல.

| சரி | தவறு |
|---|---|

உ. சிறுபான்மை மதஞ்சார்ந்தவர்கள் பெரும்பான்மை மதத்தினரின் தயவில் தான் வாழ வேண்டும்.

| சரி | தவறு |
|---|---|

## மதப்பாகுபாட்டைக் களைய என்ன செய்யலாம்?

8. பள்ளியில் ஏதாவது ஒரு நாளைத் தெரிவு செய்து, மத நல்லிணக்க நாளாகக் கொண்டாடுக. அன்று அனைத்து மதஞ்சார்ந்த பெரியோர்களை அழைத்து, அவரவர் சமய உண்மைகளைப் பேசச் செய்து, மத நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்ச்சிகளை நடத்துக.

## சிறுபான்மை உரிமைகளும், சமத்துவமும்

“மதச்சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையினரோடு சமமாக வாழ்வதற்குரிய அனைத்து முயற்சிகளும் மேற் கொள்ளாதவரை இந்நாட்டில் சமத்துவம் என்ற சொல்லுக்கு எந்த மதிப்பும் இருக்காது. பெரும்பான்மையினரின் கலாச்சாரத்தோடு ஒட்டித்தான் சிறுபான்மையினரின் கலாச்சாரம் அமைய வேண்டும் என்பது தவறு. சிறுபான்மை மக்கள் தம் கலாச்சாரத்தைப் பேணுதற்கான அனைத்து உரிமைகளும் உண்டு. எந்தச் சூழலிலும் சிறுபான்மையினர் உரிமை நசுக்கலை ஏற்றுக் கொள்ள இயலாது.”

**நேரு 1930**

**சி**றுபான்மையினரின் நலன், ஆளுமை, வலு என்பன பாதுகாக்கப் பெறா ஒரு சமூகத்தில் முன்னேற்றமிருக்காது. அமைதியும் இருக்காது.

**ஜி.பி. பந்த்**

9. **சமய அடிப்படையில் உருவாகும் கலவரம் மக்களைக் கேவலப்படுத்துவது என்ற விழிப்புணர்வை உருவாக்கும் வகையில் நல்லிணக்கப் பாடல்களைப் பாடுக; குறுநாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்துக.**

**வீட்டுப்பயிற்சி**

1. உங்கள் ஊரில் உள்ள மக்கள் பெரும்பாலோர் ஒரு மதம் சார்ந்தவர்கள் என்று வைத்துக் கொள். கொஞ்சம் சிலரே வேறு மதம் சார்ந்தவர்கள்; இந்தக் கொஞ்சம் சிலர் தங்களுக்கென்று ஒரு கோயிலைக் கட்டிக் கொண்டு வழிபடுவது தேவையில்லை. அவர்களும் பெரும்பான்மையினர் வழிபடும் கோயிலுக்கே வந்து விடுவதுதான் நல்லதென்று எண்ணுகிறாயா? அல்லது, அவர்களுக்கென்று தனிக்கோயிலும் வழிபாட்டு முறையும் அவர்கள் உரிமையென்று எண்ணுவாயா? உங்கள் பெற்றோரிடம், நண்பர்களிடம் பேசி கருத்தினைக் கேட்டு வந்து வகுப்பில் பகிர்ந்து கொள்க.

2. உங்கள் ஊரிலிருக்கும் பிற மதம் சார்ந்த நண்பர்களிடம் கலந்துரையாடி, அவர்கள் மதம் பற்றிய கொள்கைகளைக் கேட்டு, வகுப்பில் பகிர்ந்து கொள்.

3. மதங்கள் நல்லிணக்கத்தோடு இருந்தால் தான், சமூகத்தில் அமைதி நிலவும் எனும் கருத்தில் கட்டுரை ஒன்று எழுதி வகுப்பில் பகிர்ந்து கொள்க.

## ☸ தந்தைக்கு மகள் ☸

**அப்பா !**

*உங்களைப் பிரிந்து எப்படியப்பா வாழப் போகிறேன்? உங்கள் அர்ப்பணம். நம்பிக்கை. துணிவு, வாழ்வியல் மதிப்பீடுகள், தியாகம் இவையெல்லாம் எப்படியப்பா மறக்கப் போகிறேன்?*

**அப்பா !**

*நீங்கள் இன்று உலகில் இல்லையென்பதை என்னால் நினைத்துக்கூட பார்க்க இயலவில்லை. உங்கள் உடல் எரிக்கப்பட்டு விட்டதால், நீங்கள் இறந்ததாக நினைக்க முடியவில்லை. உங்கள் கொடூர கொலைக்குப் பின்பு கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் சமத்துவம், சகோதரத்துவம், பாரம்பரிய மதிப்பீடுகள் மீதெல்லாம் எனக்கு கேள்விகள் எழுகின்றன. அப்பா! ஆனால், நீங்கள் எனக்குக் கற்றுத் தந்த நல்ல பண்புகள் என் நம்பிக்கைகளை சீர் குலையச் செய்யாமல் காத்து வருகின்றன என்பதுதான் உண்மை.*

**அப்பா !**

*அம்மா இன்னும் எதை நினைத்துப் புலம்புகிறாள் தெரியுமா? ஓரிரவில் நீங்களும், அம்மாவும் அறையில் தூங்குகின்ற போது கீழே விழுந்த மண்ணெண்ணெய் விளக்கின்*



தீ உங்களை நோக்கிப் படர்ந்த போதும், அம்மாவின் மீது பற்றி விடக் கூடாதே என்றஞ்சி அம்மாவை வெளியேறச் சொல்லி, அம்மாவைக் காப்பாற்றிய பின்பே, தன்னைப் பற்றிக் கவலைப்பட்டீர்களாமே!

**40** வருடங்களுக்குப் பின்பும், அம்மா அந்நிகழ்வை கவலையோடு நினைவு கூர்கின்றாளே!

**அப்பா !**

நீங்கள் மனிதரை மட்டுமா நேசித்தீர்கள்! உங்கள் அறையில் சிட்டுக் குருவிகள் சுதந்திரமாகக் கூடு கட்டி வாழ்ந்ததை மகிழ்வோடு அனுமதித்தீர்கள்! முட்டைப் பிழந்து வெளியே வந்த குஞ்சுகள் மேலே பறக்கும் மின் விசிறியின் காற்றினால் சிதறடிக்கப்பட்டு விடக் கூடாதே என அஞ்சி சுவிச்சுகளில் பசை கொண்டு ஒட்டி, விசிறியைச் செயற்பட முடியாது செய்ததோடு, காற்றில்லா புழுக்கத்தையும் தாங்கிக் கொண்டு உங்கள் பணியைச் செய்த உங்கள் மனிதாபிமானத்தை எப்படிப் பாராட்டுவேன்! நீங்களில்லா வீட்டில் இப்போது சிட்டுக்குருவிகளும் இல்லையே !

கலியன் என்ற சிறுவனின் கால் புண்ணாகி அழுகி விட்ட நிலையில் தினமும் புண்ணைக் கழுவி, மருந்திட்ட கருணையை நாங்கள் எப்படி மறப்போம் !

**அப்பா !**

பொன்னுக்கும் பொருளுக்கும் மதிப்பு கொடுக்கும் இவ்வுலகில் நீங்கள் நினைத்திருந்தால் எவ்வளவோ பணம் ஈட்டியிருக்கலாம். ஓர் வழக்குரைஞராக நீங்கள் சம்பாதிக்கவில்லை. ஓர் அரசியல்வாதியாகவும் பதவியைத் தவறாகப் பயன்படுத்திப் பொருளீட்டவில்லை. எளிமையாக வாழ்ந்தீர்கள்! ஒழுக்கமாக வாழ்ந்தீர்கள்! மக்களுக்காக வாழ்ந்தீர்கள்!

**அப்பா !**

உங்களை ஏனப்பா கொன்றார்கள்? நீங்கள் காட்டிய வழியில் உலகைப் பார்க்க வைத்த அப்பா! பகையெனும் அரக்கனின் கோரத்திற்குப் பலியாகி விட்டீர்களே அப்பா !

**அப்பா !**

உங்களைக் கொன்றது யார்? இன்னொரு மத உறுப்பினர்களா கொன்றனர்? இல்லை! உங்களைக் கொன்றதாகச் சொல்லப் பெறும் மத உறுப்பினர்கள்

*நல்லவர்களப்பா! அவர்கள் உங்களைக் கொன்றிருக்க முடியாது ! உங்களை அழித்தவர்கள்* **தவறாக வழிகாட்டப்பட்டவர்கள், மதத்தின் பெயரால் நச்சூட்டப்பட்டவர்கள்.**

**அப்பா !**

*நீங்கள் காட்டிய வழியை, அன்பை, அமைதியை, சகிப்புத் தன்மையை மறவேன். உங்களைக் கொன்றோரை ஒருக்காலும் பகைக்க மாட்டேன். அனைத்து மதத்தினரோடும் நல்லிணக்கம் கொள்வேன். பகை களைவேன். ஒரு சில கல்நெஞ்சர்களின் சூழ்ச்சியில், நட்பை, நல்லுணர்வை அழிக்க விட மாட்டேன்.*

**அப்பா !**

*காலமெல்லாம் யார் மீதும் பகை காட்டாது, பாகுபாடு கொள்ளாது வாழ்ந்த நீங்கள் இந்நாடு செழிக்க வாழ்த்துங்கள். நீங்கள் காட்டிய பரிவு, இரக்கம், ஒற்றுமை, நேர்மை, நல்லிணக்கம், அமைதி வழி நம் நாட்டு மக்கள் பயணிக்க, குசராத்தில் மதத்தினம் பெயரால் இனியொரு மானுட சீரழிவு நடைபெறாதிருக்க வழிகாட்டுங்கள். வாழ்த்துங்கள்.*

**அப்பா !**

*உங்களை நேசிக்கிறேன் எப்போதும் அன்பு செய்கிறேன். நீங்களில்லா உலகை நினைத்துப் பார்க்க இயலவில்லை.*

*அன்புடன் மகள்*

**நிசுரின்**

***(2002 பெப்ருவரி 28 ஆம் நாள் குசராத் கலவரத்தின் போது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏஹ்சன் ஜாப்ரி அவர்கள் மதவெறிக் கும்பலால் எரித்துக் கொல்லப்பட்டார். தந்தையை இழந்த மகள் எழுதிய கடிதம்.)***

***கம்யூனலிசம் காம்பாட் - செப்டம்பர் 2002***

**மாணவர்களே !**

- **மதப்பாகுபட்டால் பலியான ஒருவரின் மகள், துன்ப நிலையிலும் என்ன முடிவெடுத்தார் பார்த்தீர்களா ?**
- **தந்தையைக் கொன்றவர்கள் இன்னொரு மதஞ் சார்ந்தவராக இருந்தும், அவர் சார்ந்த மதத்தைப் பகைக்கவில்லை.**
- **மதத்தின் பெயரால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள். இச்செயல் செய்ததாகச் சொல்கிறாரே தவிர, பகையில்லை.**
- **தந்தையைப் பரிதாபமாக இழந்த பின்பும், தேச நலனில், அமைதியில் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்?**

**மதவெறிக்கு உள்ளாகாமல், மதஉரிமைகளைக் காப்போம் !**

# 4. இனப்பாகுபாடு

# 4. இனப்பாகுபாடு

**பாட நோக்கம்**

- உலகில் பல்வேறு இனங்கள் உள்ளன. இனங்கள் தமக்கென தனித்த அடையாளங்களை, வரலாற்றை, கலாச்சாரங்களை உடையன. இவைகள் மதிக்கப் பெற வேண்டும். அனைத்து இன மக்களும் சமமானவர்கள். சமவுரிமையுடையவர்கள் என்பதனால், ஓரினம் இன்னொரு இனத்தை எந்த ரீதியிலும் பாகுபடுத்த உரிமையில்லை.

- நம் நாட்டில் சாதி ரீதியாகக் காட்டப் பெறும் பாகுபாடு போல் மேனாடுகளில் நிற அடிப்படையில் மக்கள் பாகுபடுத்தப்பட்டனர். இப்பாகுபாட்டில் காணப்பெறும் ஒற்றுமையையும் மாணவர்க்கு எடுத்துரைத்தல்.

## பாகுபாட்டின் விளக்கம்

**இனம்**, **பிறப்பு, தேசிய இனம், மரபின் அடிப்படையில் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மறுக்கும் வகையில் பாகுபாடோ, பிரிவினையோ, ஒதுக்கலோ, கட்டுப்பாடோ காட்டுதல்.**

*– இனப்பாகுபாடு பற்றிய அகில உலக உடன்படிக்கை, பிரிவு 1*

**எவரையும் அடிமையாக வைத்துக் கொள்ள யாருக்கும் உரிமை இல்லை. அடிமை முறையும், அடிமை வியாபாரமும் அவற்றின் அனைத்து வடிவங்களிலும் தடை செய்யப்பட வேண்டும்.**

*– அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு 4*



**ஆசிரியர் நடவடிக்கை**

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, கீழ்க் கண்ட மூவர் பற்றிய செய்தி யினைப் படித்து வரச் செய்து, ஒவ்வொரு குழுவும் ஒருவர் பற்றிய செய்தியினை வகுப்பில் வாசிக்கவும்.

## 1. இனவெறியை எதிர்த்து வெற்றி கண்ட நெல்சன் மண்டேலா



தென் ஆப்பிரிக்காவில் வாழும் மக்கள் தொகையில் 75 சதவீதம் பேர் கருப்பினத்தைச் சார்ந்தவர்கள். ஆனால், இங்குள்ள சிறுபான்மை வெள்ளையர்கள் இவர்களை அடிமைகளாக நடத்தினர்.

வேலை, இருப்பிடம் போன்ற அடிப்படை விஷயங்களுக்குக்கூட கருப்பின மக்கள் ஓர் இடத்தை விட்டு வேறு இடத்திற்குச் செல்ல இயலாத அவல நிலை. "வெள்ளையர்கள் மட்டும்" என்ற தட்டிகளை நாட்டில் பல இடங்களில் காண முடிந்தது.

ஏழை கருப்பின மக்களின் வீடுகளை இடித்தல், பார்த்த வேலைக்கு அடிமாட்டுக் கூலி, கருப்பின இளைஞர்கள்–சிறையில் மாயமாய் மறைந்த சோகம், கருப்பர்களின் விவசாய நிலங்களை அரசு பறித்துக் கொள்ளல். இவையெல்லாம் அன்றாட நிகழ்வுகள்.

சொத்துரிமை மறுக்கப்பட்டது. ஆபத்தான சுரங்கங்களில் கருப்பர் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப் பட்டனர். இம்மக்களின் விடுதலைக்கென போராடியவர்தான் நெல்சன் மண்டேலா. இனவெறிக் கெதிராகப் போராடி தன் வாழ்வின் 28 ஆண்டுகளைச் சிறையில் கழித்தவர். 80 ஆண்டுகளாக நிலவிய இனவெறியை எதிர்த்துப் போராடிய தென்னாப்பிரிக்க மக்களின் எழுச்சி, உலகெங்கும் பல்வேறு பெயர்களில் நிலவும் பாகுபாட்டை எதிர்க்கவும் பாதிக்கப்பட்டவர்கள் திரண்டெழவும் உத்வேகமூட்டியது.

கருப்பின மக்கள் இவரது தலைமையை ஏற்று ஓரணியில் திரண்டனர். அகிம்சை வழியில் போராடியதை வெள்ளையர் அரசு அதிகார பலத்தால் அடக்கியது. மண்டேலாவை விடுதலை செய்ய வெள்ளையர் அரசு பல்வேறு நிபந்தனைகளை விதித்தது. ஆனால், அவர் எந்த சமரசத்திற்கும் உடன்படவில்லை. கருப்பின மக்களின் விடுதலையே இலட்சியம் என்று கூறினார். இறுதியில் அவரது இலட்சியமே வென்றது. 1990–ல் அவர் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு 1993 இல் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1994இல் தென் ஆப்பிரிக்காவில்


- ★ சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படும் உரிமை.
- ★ பொதுப்பணியில் சமவாய்ப்பு.
- ★ நாட்டின் எல்கைக்குள் எவ்விடத்திற்கும் இடம் பெயர்ந்து குடியிருக்க உரிமை.
- ★ வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்து திருமணம் புரிய உரிமை.
- ★ சொத்துரிமை.
- ★ கல்விக்கான உரிமை
- ★ பொது மக்கள் பயன்படுத்தும் இடங்களில் புழங்குவதற்கான உரிமை.
- ★ வசிப்பிட உரிமை.

*இனப்பாகுபாடு ஒழிப்பு பற்றிய அகில உலக உடன்படிக்கை, பிரிவு 5*

நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் அமோக வெற்றி பெற்று, அந்நாட்டின் அதிபர் ஆனார். கருப்பின மக்களை இனவெறி பாகுபாட்டால் ஒதுக்கி வைத்த வெள்ளை இன மக்களையும் அமைச்சர வையில் இணைத்துக் கொண்டார். கருப்பின மக்கள் அதிகப் பெரும்பான்மை பெற்று விட்ட காரணத் திற்காக வெள்ளையர்கள் மீது இனப்பாகுபாடு காட்டக் கூடாது என்று மண்டேலா கூறினார்.

கொடுமை என்னவெனில், நெல்சன் மண்டேலா அதிபராகப் பதவியேற்று ஏழு ஆண்டுகளுக்கு மேலாகியும், நாட்டின் 72 சதவீத நிலங்கள் மக்கள் தொகையில் 13 சதவீதமே இருக்கும் வெள்ளையர்களிடந்தான் உள்ளன.

## 2. இனவெறிக்குப் பலியானவர் மார்ட்டின் லூதர் கிங்



அனைத்து மனிதர்களுமே படைப்பால் சமமானவர்கள் என்ற கருத்தை உண்மையாக்க,

கருப்பின அடிமைகளும், அடிமைகளின் வெள்ளை முதலாளிகளும் சகோதரத்துவ உணர்வில் ஒரே பந்தியில் அமர்ந்து உணவு உண்ண,

அநீதியும் சுரண்டலும் நிறைந்த அமெரிக்காவில் நீதி, சுதந்திரம் எனும் மதிப்பீடுகள் காக்கப் பெற,

தன்னுடைய நான்கு குழந்தைகளும் எதிர்காலத்தில் அவர்களின் கருப்பு நிறம் கொண்டு கணிக்கப் பெறாமல், அவர்தம் பண்பு கொண்டு நிர்ணயிக்கப் பெற, வெள்ளைக் குழந்தைகளும், கருப்புக் குழந்தைகளும் சமத்துவ நிலையில் கைகோர்த்து விளையாடிட **கனவு கண்டவர்** தாம் **மார்ட்டின் லூதர் கிங்.**



சமயப் போதகரான இவர் கடவுள் நம்பிக்கையுடையவர் என்பதால், நிறத்தின் பெயரால் மக்களைப் பாகுபடுத்தலைக் கண்டு பதைத்தார்; இப்போக்கை வெறுத்தார். இன ரீதியான வெறுப்பு மிக்க அமெரிக்க சமூகத்தில், வன்முறையற்ற அமைதி வழியில் நிறவெறியை எதிர்க்க மக்களிடம் பிரச்சாரம் செய்தார்.

1955ஆம் ஆண்டு அமெரிக்கா வில் மாண்ட்கோமரி எனும் இடத்தில், பேருந்து ஒன்றில் ரோசா பார்க் என்ற கருப்பினப் பெண் பயணம் செய்து

கொண்டிருந்தாள். அவ்வூர்ச் சட்டப்படி, வெள்ளையர் பேருந்தில் ஏறிய பின் அவர்க்கு இடமில்லையென்றால், ஏற்கனவே இருக்கையில் அமர்ந்திருக்கும் கருப்பர் இடம் கொடுக்க வேண்டும். ரோசா பார்க் இடம் கொடுக்க மறுக்கவே, கைது செய்யப்பட்டாள். மார்ட்டின் லூத்தரின் முதல் போராட்ட வரலாறு இங்கு தான் தொடங்கிற்று. பேருந்துப் புறக்கணிப்பு போராட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அக்குழுவுக்கு மார்ட்டின் லூதர் கிங் தலைமை தாங்கினார். இனரீதியான பாகுபாட்டிற்கெதிரான போராட்டங்கள் தொடர்ந்தன.

**இப்போராட்டங்களால் முப்பது முறைக்கு மேல் சிறைவாசம் அனுபவித்தார்.**

"நாம் அமெரிக்காவின் உரிமைக் குடிமக்கள். வன்முறையால் நம் உரிமைகளைப் பெற வேண்டாம். நம்மிடமிருக்கும் ஒரே ஒரு ஆயுதம் போராட்டம் மட்டுமே. சனநாயகத்தின் சிறப்பு போராட்டத்திற்கான உரிமையில்தான் இருக்கிறது" என்று முழங்கினார். இனப்பாகுபாட்டை எதிர்த்தார்; வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் சமவாய்ப்பைக் கேட்டார். 1964–ல் நோபல் பரிசைப் பெற்ற இவர், 1968–ல் இனவெறியனின் துப்பாக்கிக்குப் பலியானார். இவர் பலியான நாள் அமெரிக்க கொடி

**மண்டேலா !**
உனக்கிருப்பது போல்
சுருண்ட முடியோ, தடித்த உதடோ
எமக்கில்லாமல் இருக்கலாம்
உனது இனம் போல ஓரினம் இங்கும்
உனது நிறம் போல ஒரு நிறம் இங்கும்
உனது யதார்த்தம் போல இங்கொரு யதார்த்தம்
உனது சேரிகள் போல இங்கும் சேரிகள்
உனது யுத்தம் போல இங்கும் ஒரு யுத்தம்,
அடிமைகள்
ஆப்பிரிக்காவில் இருந்தாலென்ன
ஆசியாவில் இருந்தாலென்ன
எந்த வேற்றுமை எதிர்த்து நீ நிற்கிறாயோ
அந்த வேற்றுமையால் நாங்கள்
ஆண்டுகள் இரண்டாயிரம் அடிமைகள்
நீ கிறிஸ்தவனாக இருக்கலாம்
ஏசுவைக் கும்பிடலாம்
ஆனாலும் நீ தீண்டத்தகாதவன் !
நான் இந்துவாக இருக்கலாம்
கணபதியை வணங்கலாம்
ஆனால் நான் தீண்டத்தகாதவன்
இத்துணைக் கண்டத்தில் ஒவ்வொரு இனத்திலும் உனது
சகோதரன்; நினைவில் நிறுத்து!



- அக்னி புத்ரன், அரும்பு ஆகஸ்ட் 90

அரைக்கம்பத்தில் பறந்தது. அன்றைய நாள் அமெரிக்க அதிபரால் துக்க நாளாக அறிவிக்கப் படுகின்ற அளவுக்கு இவர் புகழ் உயர்ந்து நின்றது".

## 3. அடிமை முறையை ஒழித்தவர் ஆபிரகாம் லிங்கன்



மனிதர்கள் மிருகங்களைச் சந்தையில் விலைக்கு வாங்கு வதையும், விற்பதையும் அனைவரும் அறிவோம். மிருகங்களை வாங்கவும், விற்கவும் நாம் மிருகங்களின் அனுமதி பெறுவ துண்டா? மிருகங்களைச் சந்தையில் வாங்குவது போல மனிதர்க்குச் சேவகம் செய்ய மனிதர்களையே சந்தையில் வாங்குவதும், விற்பதும் என்ற பழக்கம் நியாமான ஒன்று போல ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம் ஒன்று இருந்தது. மனிதர்களைக் குறிப்பாகக் கருப்பின மனிதர்களைச் சந்தைகளில் முதலாளிகள் வாங்கினர்; தேவையில்லாத போது விற்றனர். மிருகங்களை விட கேவலமாக நடத்தினர். நமது நாட்டில் சாதியம் வளர்த்த தீண்டாமை எப்படி ஒரு தவறு என்று கருதப்படவில்லையோ அதைப் போலவே, அடிமை முறையையும் தவறென கருதப்படவில்லை.

அமெரிக்காவின் 16வது அதிபரான ஆபிரகாம் லிங்கன் தான் இக்கொடிய பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர். எளிய குடும்பத்தில் பிறந்த இவர் எளிய மனமும், வாழ்க்கையும் உடையவர். இவர் அதிபரான போது இவரைப் பற்றி மக்களுக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால், அமெரிக்க வரலாறு இவரை மறந்து விடா அளவுக்கு வரலாறாக மாறி விட்டவர். இவர் காலத்தில் அமெரிக்காவில் மூண்ட உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். **உண்மையான சனநாயகத்தில் அடிமைகள் இருக்க முடியாது, இருக்க கூடாது** என்பதில் தெளிவாக இருந்தார். எனவே, அமெரிக்காவில் அடிமை முறை ஒழிப்புப் பிரகடனம் செய்தார். ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்குப் போராடுவோர்க்கு கிடைக்கும் பழியே இவருக்கும் கிடைத்தது. அடிமை முறை ஒழித்த இவர், எதிரிகளால் கொலை செய்யப்பட்டார்.



## வகுப்புப் பயிற்சி

1. இனப்பாகுபாட்டிற்கெதிராகப் பேராடினார் என்பதனால் 28 ஆண்டுகள் சிறைவாசம் புரிந்த மண்டேலாவின் வாழ்வு உன் உள்ளத்தில் உருவாக்கிய உணர்வுகள் எவை. மண்டேலா கருப்பராக இருந்தமையால் இழந்த உரிமைகள் யாவை.

| உணர்வுகள் | இழந்த உரிமைகள் |
|---|---|
| அ. | அ. |
| ஆ. | ஆ. |
| இ. | இ. |

2. மார்ட்டின் லூதர் கிங் கொலை செய்யப்பட்ட நிகழ்விலிருந்து இனவெறியின் கொடுமையை உணர்ந்திருப்பீர்கள். இவர் கொலை உன் உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்வுகள் யாவை? கருப்பின அமெரிக்கர் இழந்த உரிமைகள் யாவை?

| உணர்வுகள் | இழந்த உரிமைகள் |
|---|---|
| அ. | அ. |
| ஆ. | ஆ. |
| இ. | இ. |

3. இனவெறி - இனப்பாகுபாடு

சாதிவெறி - சாதியப் பாகுபாடு

மதவெறி - மதப்பாகுபாடு

மொழிவெறி - மொழிப்பாகுபாடு

வெறி பாகுபாட்டை உருவாக்குகிறது; பாகுபாடு மனித உரிமைகளை மீறுகிறது ; வெறியும் பாகுபாடுமற்ற சமுதாயத்தை உருவாக்க என்னென்ன செய்யலாம் என்பதற்கான யோசனைகளை குழுவாகச் சென்று யோசித்து, மொத்தமாகப் பகிர்ந்து கொள்க.

## நம்மூரில் சாதீயத் தீண்டாமை, வெளிநாட்டில் இனத் தீண்டாமை



நான் ஒரு சமயம் பிரிட்டோரியாவில் ஆங்கிலேயர் ஒருவரிடம் முடி வெட்டிக் கொள்ளப் போனேன். அவர் அதிக வெறுப்புடன் என் தலைமுடியை வெட்ட மறுத்து விட்டார். எனக்கு இது அவமரியாதையாக இருந்தது. உடனே முடிவெட்டும் கத்தரி ஒன்றை வாங்கினேன். கண்ணாடி முன்பு நின்று கொண்டு என் தலைமுடியைக் கத்தரித்துக் கொண்டேன். முன் முடியை வெட்டிக் கொள்வதில் ஓரளவுக்கு வெற்றி பெற்றேன். ஆனால், பின்பக்கத்து முடியை வெட்டிக் கெடுத்து விட்டேன். கோர்ட்டில் இருந்த நண்பர்கள் அதைப் பார்த்து விட்டுக் குலுங்க, குலுங்கச் சிரித்தார்கள்.

"உமது தலைமுடிக்கு என்ன ஆபத்து வந்தது காந்தி? எலிகள் ஏதாவது வேலை செய்து விட்டனவா?" என்று கேட்டனர். "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. வெள்ளைக்காரனான சவரத் தொழிலாளி என் கருப்பு முடியைத் தொட இஷ்டப்படவில்லை. ஆகவே, எவ்வளவு மோசமாக இருந்தாலும் சரி என் முடியை நானே வெட்டிக் கொள்வது என்று வெட்டிக் கொண்டு விட்டேன்" என்றேன்.

எனது பதில் அந்த நண்பர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்க வில்லை. முடியை வெட்ட மறுத்தது அந்த சவரத் தொழிலாளியின் குற்றமல்ல. கருப்பு மனிதருக்கு அவர் முடி வெட்டி விடுவாரேயானால் வெள்ளைக்காரர்கள் அவரிடம் முடிவெட்டிக் கொள்ள வர மறுத்து விடக்கூடும். நமது தீண்டாத சகோதரர் களுக்குச் சவரம் செய்ய நம் சவரத் தொழி லாளியை நாம் அனுமதிப்பதில்லையே! இந்தப் பாவத்திற்கு உரிய பலனை நான் தென்னாப் பிரிக்காவில் ஒரு தடவை அல்ல, பல தடவை களில் அனுபவித்தேன். இதெல்லாம் நாம் செய்த பாவத்திற்குத் தண்டனையே என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததால் நான் கோபம் அடையவில்லை."



*மகாத்மா காந்தியின்*
*''சத்திய சோதனை''யிலிருந்து*

## வீட்டுப் பயிற்சி

1. சாதியப் பாகுபாடு, இனப்பாகுபாடு பற்றி படித்துள்ளீர்கள்; இரண்டுமே பாகுபாடு என்று ஏற்றுக் கொண்டால் கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை தருக.

- இரண்டிற்குமுள்ள ஒற்றுமைகள் - வேற்றுமைகள் யாவை?
- இப்பாகுபாட்டு முறையினால் மக்கள் இழக்கும் உரிமைகள் யாவை?

| | **ஒற்றுமை** | **வேற்றுமை** | **இழக்கும் உரிமைகள்** |
|---|---|---|---|
| ***1.*** | | | |
| ***2.*** | | | |
| ***3.*** | | | |
| ***4.*** | | | |

தொகுத்து வகுப்பில் பகிர்ந்து கொள்ளவும்.


***2.*** லிங்கன் கொல்லப்பட்டார், மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டார். தீண்டாமையையும், மதவெறியையும் எதிர்த்த காந்தியும் கொல்லப்பட்டார். இவர்கள் தியாகத்தை ஒரு கவிதையாக அல்லது நாடகமாக எழுதி வரவும்.

# 5. சாதியப் பாகுபாடு

# 5. சாதியப் பாகுபாடு

**பாட நோக்கம்**

- சாதி, மனிதர்களை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாகுபடுத்துவதால் சமத்துவத்தை மறுப்பது.
- சாதி உருவாக்கியுள்ள தீண்டாமை மனித மாண்பை கேலி செய்வது.
- சாதியின் உள்ளடக்கம் மனிதத்தை மறுப்பது, எனவே மனித உரிமைகளை மீறுவது என்பதனை மாணவர்க்கு எடுத்துரைத்தல்.



1. மனிதரிடமிருந்து பாகுபடுத்துதல் அல்லது பாகுபடுத்த தூண்டுதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுகின்ற உரிமை அனைவருக்கும் உண்டு. *– அகில உலக மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 7*

2. மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குடிமக்களிடையே பாகுபாடு காட்டுதல் கூடாது. *– பிரிவு 15*

3. மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் அனுமதிக்கவும், இடங்களைப் பயன்படுத்தவும் நிபந்தனைகளோ, கட்டுப்பாடோ விதிக்கக் கூடாது.

   அ. கடைகள், பொதுமக்கள் தங்கும் விடுதி, உணவகம், பொழுது போக்கிடங்கள்.

   ஆ. கிணறுகள், குளங்கள், நீராடும் துறைகள், சாலைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள் *– பிரிவு 15(3)*

4. தீண்டாமை ஒழிக்கப்பட்டுள்ளது. தீண்டாமையின் அனைத்து வடிவங்களும் செயற்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

   தீண்டாமையை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக எழும் எவ்வகைச் செயற்பாடும் தண்டனைக்குரியது. *– இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 17*

## ஆசிரியர் நடவடிக்கை

1. பாகுபாட்டிற்கு எதிரான ஐ.நா.வின. உடன்படிக்கையை மாணவர்க்குப் படித்துக் காட்டி விளக்குக.
2. தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டதென்று 1950–ல் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சாசனம் கூறுவதால் மாணவர்களிடம் தீண்டாமை ஒழிந்து விட்டதா என்ற கேள்வியைக் கேட்கவும்.
3. தீண்டாமை பற்றிய சரியான புரிதல் இல்லையெனில் மாணவர்க்கு ஆசிரியர் தன் அனுபவம் மூலம் தீண்டாமை பற்றி விளக்கம் தரவும்.
4. மாணவர்கள் தீண்டாமை பற்றி தெரிந்த பின், மாணவர்களைக் குழுக்களாகப் பிரிக்கவும். மாணவர்கள்

   *அ. தம் வீடுகளில் (மேல் சாதி வீடாக இருந்தால்)*

   *ஆ. ஊரில்*

   *இ. கோயிலில்*

   *ஈ. பள்ளியில்*

   *உ. பொதுவிடங்களில்*

   *ஊ. குளம், கிணறு*

   *எ. உணவகம் முதலிய இடங்களிலும்*

அ. இவை போன்ற ஏனைய இடங்களிலும் எல்லோரும் சாதி வித்தியாசமின்றி அனுமதிக்கப் படுகின்றனரா?

ஆ. இம்மாதிரி இடங்களில் எத்தகைய தீண்டாமை வடிவங்கள் கடைபிடிக்கப்படுகின்றன? எடுத்துக்காட்டாக,



- *இரட்டை டம்ளர் முறை*
- *செருப்பணியத் தடை*
- *வாக்களிக்க தடை*
- *பொதுக்குளத்தைப் பயன்படுத்த தடை*
- *கோயில் வழிபாடு செய்ய தடை* முதலியன.

மாணவர்கள் தொகுத்த இவ்வடிவங்களை வகுப்பில் பகிர்ந்து கொள்ளச் சொல்லுக. மாணவர்கள் தீண்டாமை வடிவங்களைப் பகிர்ந்து கொண்ட பின் கீழே கொடுக்கப் பட்டிருக்கும்

– *ஒவ்வொரு நிகழ்வையும், ஒரு மாணவன் அல்லது மாணவியை வாசிக்கச் சொல்லுக*

**(அல்லது)**

– *வகுப்பு மாணவர்களைக் குழுவாகப் பிரித்துக் கீழ்க்கண்ட தீண்டாமையின் வடிவங்களை வாசிக்கச் செய்து, வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.*

**வடிவம் 1**

## கற்பிக்கப் பெறும் தீண்டாமை



**ஒ**ரிசா மாநிலத்தில் பள்ளிகளில் மதிய உணவின் போது தலித் குழந்தைகள் ஒரு வரிசையிலும், தலித் அல்லாத குழந்தைகள் வேறொரு வரிசையிலும் தனித்தனியாக உட்கார்ந்து சாப்பிடு கின்றனர். மதிய உணவின் போது அங்கு சென்ற பத்திரிகையாளர்களிடம் பிரிதிவி என்ற மாணவி கூறும் போது, "நாங்கள் தலித் என்பதால் இங்கு உட்கார்ந்து சாப்பிடுகிறோம். நாங்கள் அந்தப் பக்கம் சென்றால் இங்கிருந்து ஓடி விடு என்று கூறுவார்கள். அவர்களின் தண்ணீர்க் குவளையைத் தொட்டால்கூட, தட்டிலிருக்கும் உணவைக் கீழே கொட்டி விடுவார்கள். இதன் காரணமாகவே நாங்கள் தனிவரிசையில் உட்கார்ந்து சாப்பிடுகிறோம்" என்றாள்.

***– சாய்நாத், தி இந்து 21.01.2001***


**வடிவம் 2**

## பாகுபடுத்தும் டம்ளர்



கரூர் மாவட்டத்தில் ஒரு கிராமம். இங்கு அடிப்படை வசதி மறுக்கப்பட்ட 80 தலித் குடும்பங்கள் வாழ்கின்றன. தீண்டாமையின் உச்சமாக டீக்கடையில் தலித்துகளுக்கும், மேல் சாதியினருக்கும் **தனித்தனி டம்ளர்கள்!** தலித்துகள் டீக்கடையின் உள்ளே செல்லக் கூடாதாம். வெளியே நின்று தான் டீ வாங்க வேண்டும். பெஞ்சில் உட்காரக் கூடாது;. பஸ் ஸ்டாண்டிலும் பெஞ்சில் உட்காரக் கூடாது.

**- மக்கள் களம், ஜூன் 2002**



**வடிவம் 3**

## சைக்கிளில் செல்லக் கூடாதாம்!

காஞ்சிபுரம் மாவட்டம் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் மேல் சாதியினர் வசிக்கும் தெருக்களின் வழியாக நடந்து செல்லக் கூடாது. சைக்கிள் ஓட்டிச் செல்லக் கூடாது. நல்ல பேண்ட், சட்டை அணிந்து செல்லக் கூடாது.

**– மக்கள் களம், ஆகஸ்ட் 2002**

### காவல்துறையில் பதிவு செய்யப்பட்ட வன்கொடுமை வழக்குகள்

| ஆண்டு | புகார் செய்யப்பட்டது | வழக்குகள் பதியப்பட்டது | நிலுவையில் உள்ள வழக்குகள் | விசாரணையில் உள்ளது | தண்டிக்கப்பட்டது | விடுவிக்கப்பட்டது |
|---|---|---|---|---|---|---|
| 1998 | 897 | 391 | 265 | 7 | 21 | 213 |
| 1999 | 1,011 | 379 | 384 | 9 | 20 | 219 |
| 2000 | 996 | 279 | 516 | 33 | 3 | 165 |
| 2001 | 500 | 164 | 187 | 149 | --- | --- |

*- நன்றி : தீக்கதிர் 08.11.2002*

# 6. பழங்குடியினருக்கு எதிரான பாகுபாடு

# 6. பழங்குடியினருக்கு எதிரான பாகுபாடு

**பாட நோக்கம்**

பழங்குடியினர், ஆதிவாசிகள், பூர்வீகக் குடிமக்கள், வனவாசிகள் என்ற பல சொற்களால் வழங்கப்படும் இம்மக்கள், இந்நாட்டின் பூர்வீகக் குடிமக்கள். வரலாற்றின் பல கட்டங்களில் இவர்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டவர்கள். இவர்களின் நிலம், வீடுகள் பறிக்கப்பட்டன. இவர்களின் கலாச்சாரம், மொழி, பழக்கவழக்கம், தொழில், உற்பத்திமுறை அனைத்தும் அழிக்கப்பட்டு, இவர்களின் வாழ்வுரிமைகள் ஒவ்வொருநாளும் அழிக்கப்படுகின்றன. காட்டுமிராண்டிகள், நாகரீகமற்றவர்கள் என்றெல்லாம் கேலி பேசி இவர்தம் மாண்பினை, தனித்தன்மையினைக் கேள்வி கேட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. வேறுபட்ட கலாச்சாரம், மொழி, பழக்கவழக்கம், சமூக, பொருளாதார, அரசியலமைப்புடைய இவர் தம் தனித்துவம் காக்கப் பெற வேண்டும் என்ற விழிப்புணர்வு உலகெங்கும் உருவாகியுள்ளது. பழங்குடியினர் மீது நிகழ்த்தப் பெறும் பாகுபாடு மனித உரிமை மீறல் என்பதனை மாணவர்க்குத் தெரிய வைத்தலே இப்பாட நோக்கம்.

**ப**ழங்குடி மக்கள் தடையின்றியும், எவ்வித பாகுபாடுமின்றியும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மனித உரிமைகளையும் அனுபவிக்க உரிமையுண்டு.

*– பழங்குடியினர் தொடர்பான அகில உலக தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கை, பிரிவு 3*

**ப**ழங்குடி மக்கள் தங்கள் தனித்த அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரப் பண்புகளைக் காக்கவும், வலுப்படுத்தவும் உரிமையுண்டு.

*– ஐ.நா.வின் பழங்குடி மக்களின் உரிமைகள் , பிரிவு 4*

**ப**ழங்குடி மக்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களை மிகுந்த அக்கறையோடு அமல்படுத்த வேண்டும். சமூக அநீதிகளி லிருந்தும் எல்லா வகையான சுரண்டல்களிலிருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும்.

*– இந்திய அரசியல் சாசனம் , பிரிவு 46*

## ஆசிரியர் நடவடிக்கை

1) பழங்குடி வகுப்பினரிடமிருந்து பள்ளியில் படிக்கும் மாணவர்களிருந்தால் அவர்கள் ஊரில் சந்திக்கும் பிரச்சினைகளைச் சொல்லச் சொல்லிப் பாடத்தை ஆரம்பிக்கலாம்.

2) அல்லது இப்படியும் ஒரு நிகழ்வைச் சொல்லி மாணவர்களிடம் கேள்வி எழுப்பலாம்.

நம் நாட்டில் பெரிய பெரிய அணைகள் உள்ளன. இந்த அணைகளில் மலைகளிலிருந்து

வரும் தண்ணீர் தேக்கப்படுகிறது. மலைகளில் அணை கட்டப் பெறுகின்ற போது, மலையில் வாழ்கின்ற மலையை நம்பி வாழ்கின்ற மக்கள் அப்புறப்படுத்தப்படுகின்றனர். காலங்காலமாக வாழ்ந்த இடத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றனர்.

*அ. இவ்வணைகளால் அங்கு இதுவரை வாழ்ந்து வந்த மக்களுக்கு பாதிப்பு இல்லை.*

**ஏற்றுக் கொள்கிறேன் / ஏற்றுக் கொள்ளவில்லை.**

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

*ஆ. பெரிய அணையினால் பயன் பெறப்போவது யார்?*

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

*இ. பெரிய அணை கட்டப்படுவதால் பாதிக்கப் பெறப் போவது யார்?*

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

**ப**ழங்குடி மக்களின் சமூக, கலாச்சார, சமய, ஆன்மீக மதிப்பீடுகளும், பழக்க வழக்கங்களும் மதித்துப் பாதுகாக்கப் பெற வேண்டும்.

அகில உலக தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கை, பிரிவு 5 (அ)

**ப**ழங்குடி மக்கள் தங்களுக்குகந்த வளர்ச்சித் திட்டங்களை வகுக்கவும், திட்டங்களைத் தீட்டவும், நடைமுறைப்படுத்தவும், தங்கள் நம்பிக்கைகள், ஆன்மீக வளர்ச்சிகளையொட்டிய நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு.

அகில உலக தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கை , பிரிவு 7

**ப**ழங்குடி மக்களுக்குச் சொந்தமான நிலங்களை சட்டத்திற்குப் புறம்பாக ஆக்கிரமிப்போர்க்கு எதிராக அரசு தண்டனைக்குரிய குற்றமாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அகில உலக தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கை , பிரிவு 18

ஈ. அணை கட்டப்படுவதால் அங்கு வாழ்கின்ற மக்கள் இழந்த உரிமைகள் யாவை?

1. ----------------------------------------------------------------------------

2. ----------------------------------------------------------------------------

3. ----------------------------------------------------------------------------


3. கீழே கொடுக்கப்பட்ட நிகழ்வுகளைக் குழுக்களாகப் பிரிந்து வாசித்து, வகுப்பறையில் பகிர்ந்து கொள்ளச் சொல்லவும்.

**நிகழ்வு 1**

## 30 கி.மீ. நடந்து படிக்கும் பழங்குடி மாணவர்கள்

சேலம் அருகே மலைப்பகுதியிலிருக்கும் ஓர் மேல்நிலைப் பள்ளியில் 1,457 மாணவ, மாணவியர் படிக்கின்றனர். இங்குள்ள விடுதியில் 55 மாணவிகளுக்கும் 220 மாணவர்களுக்கும் மட்டுமே தங்கி படிக்க இடவசதி உள்ளது.

விடுதியில் தங்கிப் படிக்க ஏராளமான மாணவ, மாணவிகளுக்கு விருப்பம் இருந்தாலும், போதிய இடவசதி இல்லை. எனவே, ஏராளமான மாணவர்கள் வீடுகளிலிருந்தும் வந்து படிக்கின்றனர்.



**பூ**ர்வீகக் குடிமக்களுக்குச் சுய நிர்ணய உரிமையுண்டு. இவ்வுரிமையின் காரணமாக, தங்கள் அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கவும், சுதந்திரமாகத் தங்கள் பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சியைத் தொடரவும் உரிமையுண்டு.

அய்.நா.வின் பழங்குடி மக்களின் உரிமைகள், பிரிவு 3

**அ**னைத்து முடிவெடுக்கும் அதிகார அமைப்புகளிலும் முழுமையாக பங்கேற்கும் உரிமையுண்டு.

அய்.நா.வின் பழங்குடி மக்களின் உரிமைகள், பிரிவு 19

**ப**ழங்குடி மக்கள் தங்கள் பாரம்பரியம், பழக்க வழக்கங்களை, நிறுவனங்களை சொந்தமாக்கவும், வளர்க்கவும் பயன்படுத்தவும் உரிமையுண்டு.

அய்.நா.வின் பழங்குடி மக்களின் உரிமைகள், பிரிவு 26

பஸ் வசதி போதிய அளவு இல்லாதநிலையில், அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்டால் தான் காடுமேடுகளைக் கடந்து உரிய நேரத்தில் பள்ளி வந்து சேர முடியும். மாலையில் பள்ளி விட்டதும், புறப்பட்டால், இரவு ஏழு, எட்டு மணிக்குத்தான் வீடு திரும்ப முடியும். எனினும், படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், கடுமையான கஷ்டங்களையும் சமாளித்து மலைப் பாதைகளில் நெடுந்தூரம் நடந்து வந்து படிக்கிறார்கள். மழை நேரங்களில் இவர்களது சிரமங்களைச் சொல்லி மாளாது.

பள்ளியிலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் அறப்பளீஸ்வரர் கோவில் உள்ளது. இங்கிருந்து காலையில் புறப்படும் மினி பஸ்ஸில் 40 இடங்களே உள்ளன. ஆனால், காத்திருப்பதோ 100 பேர். அதனால், நீயா, நானா போட்டி தான். பஸ்ஸினுள் இடம் கிடைக்காமல் பலர் ஏணிப்படிகளில் தொற்றிக் கொண்டும், பஸ்ஸின் மேற்கூரையில் ஏறிக் கொண்டும் வருகிறார்கள்.

பள்ளிக்கு வந்து போவதிலேயே பாதி நேரத்தைக் கழிக்க வேண்டிய நிலையில் இருப்பதால், மாணவர்கள் படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்த முடிவதில்லை. அந்தந்தப் பகுதியில் தொடக்க, நடுநிலைப் படிப்புகளைப் படிக்கும் மாணவர்கள், படிப்பை இடையிலேயே விட்டு விடுவதற்கு இது போன்ற சூழ்நிலையும் காரணமாகி விடுகிறது.

200 சிறிய கிராமப் பகுதிகளைக் கொண்ட இப்பழங்குடி இன மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிப் படிப்புக்கு, இப்பள்ளியையே நம்பியுள்ளனர்.

இப்பள்ளியில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகளுக்குப் போதிய தண்ணீர் வசதி இல்லாததால், காலைக் கடன்களைக் கழிக்கவும், குளிக்கவும் ஒரு கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

மாணவர்கள் விளையாடுவதற்குப் போதிய வசதிகள் இல்லை.

இந்நிலையிலும் 1,500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்று இப்பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளார் **மாணவர் ராமச்சந்திரன்.**

## பழங்குடியினர் தொடர்பான
## அகில உலக தொழிலாளர் அமைப்பின் உடன்படிக்கை

பழங்குடி மக்கள் தடையின்றியும் எவ்வித பாகுபாடுமின்றியும் அடிப்படை சுதந்திரங்களையும், மனித உரிமைகளையும் அனுபவிக்க உரிமையுண்டு. ***பிரிவு 3***

பழங்குடி மக்களின் சமூக, கலாச்சார, சமய, ஆன்மீக மதிப்பீடுகளும், பழக்க வழக்கங்களையும் மதித்துப் பாதுகாக்கப் பெற வேண்டும். ***பிரிவு 5 (அ)***

பழங்குடி மக்கள் தங்களுக்குகந்த வளர்ச்சித் திட்டங்களை வகுக்கவும், திட்டங்களைத் தீட்டவும், நடைமுறைப்படுத்தவும், தங்கள் நம்பிக்கைகள், ஆன்மீக வளர்ச்சிகளையொட்டிய நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. ***பிரிவு 7***

பழங்குடி மக்களுக்குச் சொந்தமான நிலங்களை சட்டத்திற்குப் புறம்பாக ஆக்கிரமிப்போர்க்கு எதிராக அரசு தண்டனைக்குரிய குற்றமாக கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ***பிரிவு 18***

ஒரு வகுப்புக்கு 100 மாணவர்கள் வரை உள்ளனர். போதிய ஆசிரியர்களும் இல்லை. காலி இடங்கள் நிரப்பப்படவில்லை. இந்நிலையிலும், கடந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 68 சதவீதமும், பிளஸ் டூ தேர்வில் 89 சதவீதமும் தேர்ச்சி காட்டியுள்ளது இத்தமிழ்வழிப்பள்ளி.

***தினமலர், 28.02.2004***

**நிகழ்வு 2**

## கிட்னி கிராமம்



கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் பழங்குடியினர் அதிகமாக வாழ்கின்றனர். இம்மாவட்டத்தின் ஒரு கிராமத்தைக் கிட்னிகிராமம் என்றே அழைக்கின்றனர். ஏனெனில் இங்குள்ள பல கிராமவாசிகள் கிட்னி வியாபாரம் செய்யும் ஒரு கும்பலிடம் சிக்கி பலர் கிட்னிகளை இழந்துள்ளனர். இன்னும் பலர் விற்பனைக்கு வரிசையிலுள்ளனர். இவ்வூரில் மத்தேயு என்பவர்க்கு ஒரு லட்சம் தருவதாகக் கூறி கிட்னியை எடுத்து விட்டு வெறும் 59,000 ரூபாய் மட்டுமே கொடுத்துள்ளனர். இப்போது இவருக்கு கிட்னி, பணம் இரண்டும் போய் வேலை செய்யும் சக்தியும் போய் விட்டது. மோகனன் எனும் ஆதிவாசி 40,000 ரூபாய்க்குப் பேசி, கிட்னிக்காகப் பெற்றுக் கொண்டதோ 33,000 ரூபாய் மட்டுமே.

***மீன் டைம், சூன் 14–27, 2002.***

## பழங்குடி இனப் பெண்ணின் சாதனை




சிந்தியாபாய் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெண்; படிப்பறிவே இல்லாதவர். இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பஞ்சாயத்துத் தலைவரானார். ஆரம்பத்தில் அவருக்கு எதுவுமே தெரியாது. கணவரின் கட்டளைப்படியே பணிகளைச் செய்தார். அவர் வாழ்ந்து வந்த பைகா கிராமத்துப் பெண்கள் ஆரம்பக் கல்வியைத் தாண்டியதில்லை. ஆனால் சிந்தியா பாய் கையெழுத்துக்கூட போடத் தெரியாமல் இருந்தார். அவரது குழந்தைகள் அவருக்கு முதலில் கையெழுத்துப் போடக் கற்றுக் கொடுத்தனர். பின்னர் சிறிது சிறிதாகக் கல்வியறிவைப் புகட்டினார். அதன் பின் சிந்தியாபாய் பஞ்சாயத்தின் நிர்வாகப் பொறுப்புகளைக் கவனிக்க ஆரம்பித்தார். பஞ்சாயத்து அலுவலக் கட்டிடம் கட்ட அனுமதி பெற்றார். குளங்களை ஆழப்படுத்த நடவடிக்கை எடுத்தார். முதலில் தன்னைத் திருத்தினார். பின்னர் தனது பஞ்சாயத்தைத் திருத்தும் பணியை மேற்கொண்டார். முயன்றால் முடியாதது எதுவுமில்லை. **நம் ஒவ்வொருவருக்கும் தேவை விடா முயற்சியே**.

***Source : Panchayati Raj Update, June 2001***

**நிகழ்வு 3**

## பாம்போடு வந்தவர்!



''ஐயா! நான் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவனுங்க. அதுக்காகச் சான்றிதழ் வாங்க வந்தேன்'' என்று பயபக்தியாக அதிகாரி முன் நின்றார் அவர்.

அவரை ஏற இறங்கப் பார்த்த அந்த அதிகாரி, ''ஏன்யா, இருளர்ன்னா பாம்பு பிடிக்கிற சாதி தானே... பாம்பு பிடிக்கிற வங்க உன்னை மாதிரி டீசண்ட்டாக டிரஸ் பண்ண மாட்டாங்க. நிஜமாகவே நீ அந்த சாதி தானா? முழுசா ஒரு பாம்பைப் பிடிச்சிட்டு வா! அப்புறம் சர்டிபிகேட் பற்றி யோசிக்கலாம் . ..'' என்று வார்த்தைகளால் குத்திக் காயப்படுத்தி அனுப்புகிறார்.

தலை கவிழ்ந்தபடி திரும்பும் அந்த இளைஞர் மறுநாள் கையில் பாம்புடன் அலுவலகத்துக்குப் போய்ச் சேர்ந்த போது, அலுவலக ஊழியர்கள் பதறிப் போய் அவரை வாசலிலேயே தடுத்து விட்டார்கள். அதிகாரியை அந்த இளைஞரால் பார்க்க முடியாதது மட்டுமல்ல. கடைசி வரை தான் இருளர் என்பதற்கான சாதிச் சான்றிதழ் வாங்கவே முடியவில்லை.

***ஜூனியர் விகடன் 02.04.2002***

## ஐ.நா.வின் பழங்குடி மக்களின் உரிமைகள்

- பூர்வீகக் குடிமக்களுக்கு சுய நிர்ணய உரிமையுண்டு. இவ்வுரிமையின் காரணமாக, தங்கள் அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்கவும், சுதந்திரமாக தங்கள் பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சியை பேணவும் உரிமையுண்டு. *– பிரிவு 3*

- பூர்வீகக் குடிமக்கள் தங்கள் தனித்த அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சாரப் பண்புகளை காக்கவும், வலுப்படுத்தவும் உரிமையுண்டு. *– பிரிவு 4*

- அனைத்து முடிவெடுக்கும் அதிகார அமைப்புகளிலும் முழுமையாக பங்கேற்கும் உரிமையுண்டு. *– பிரிவு 19*

- பழங்குடி மக்கள் தங்கள் பாரம்பரியம், பழக்க வழக்கங்களை, நிறுவனங்களை சொந்தமாக்கவும், வளர்க்கவும் பயன்படுத்தவும் உரிமையுண்டு. *– பிரிவு 26*

**நிகழ்வு 4**

## சாதிச் சான்றிதழ் இல்லை



இவர்கள் அனைவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை சாதிச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இதன் காரணமாகக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க முடியவில்லை. பள்ளிப் பதிவேட்டில் மலைவாழ் பழங்குடியினர் என்று பதியும்போது அதை உறுதி செய்ய சாதிச் சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

**தொழில் இல்லை**

இவர்களது முக்கியத் தொழில் மலைகளில் கிடைக்கும் மூலிகைப் பொருட்களைச் சேகரித்தும், தேன் எடுப்பதும் அப்பகுதியில் கிடைக்கும் நன்னாரி வேர், சிறுகுறிஞ்சான் இலை, பூமிச் சக்கரைக் கிழங்கு, மாகாளி கிழங்கு, கொடுவலி வேர், கருடகொடி, நாகதாளி வேர், இவைகளைச் சேகரித்து ஆண்டிப்பட்டி, விருதுதுநகர் சந்தைகளில் விற்பனை செய்து வந்தனர். இந்நிலையில் மலை சார்ந்த பொருட்களைச் சேகரிப்பது சட்ட விரோதம் என்று வனத்துறையினர் கடுமையாகக் கெடுபிடி செய்வதால் இவர்களது தொழிலும், வருமானமும் பாதித்துள்ளது.

**சோறில்லை**

பரம்பரைத் தொழிலான மூலிகைகளைச் சேகரிப்பதும், தேன் எடுப்பதும் சட்ட விரோதமானது என்று வனத்துறையினர் கூறுவதால் இவர்கள் பிழைப்புக்கே வழியின்றி ஒருவேளைச் சோற்றுக்குத் திண்டாடு கின்றனர். காட்டில் கிடைக்கும் கிழங்குகளே இவர்களது பிரதான உணவாகி விட்டது.

*தினகரன், 23 டிசம்பர் 2002*

## பழங்குடியினர் மீதான வன்முறை

| ஆண்டு | குற்றங்களின் மொத்த எண்ணிக்கை | கொலை | பாலியல் பலாத்காரம் | கொள்ளை | சிவில் உரிமைகள் பாதுகாப்பு மீறல் | பிரிவு 3 முதல் 6 வரை மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1995 | 5,489 | 75 | 369 | 40 | 71 | 555 |
| 1996 | 4,973 | 94 | 314 | 51 | 72 | 531 |
| 1997 | 4,644 | 95 | 315 | 29 | 88 | 527 |
| 1998 | 4,276 | 66 | 331 | 38 | 50 | 485 |
| 1999 | 3,841 | 71 | 336 | 43 | 35 | 485 |

தலித் முரசு, சனவரி 2002

**நிகழ்வு 5**

## அடிமைச் சேவகர்களாய் !

கொடைக்கானல் அருகே தாண்டிக்குடி ஊராட்சி பொம்மைக்காடு கிராமத்தில் பணியர் இனத்தைச் சார்ந்த 52 ஆதிவாசி குடும்பங்கள் காபித்தோட்டங்களில் தினக்கூலிகளாக வேலை செய்து வருகின்றனர். குறைவான கூலி கிடைப்பதனால் உயர்த்திக் கொடுக்க கேட்டால் வேலையில் இருந்து நீக்கப்படுகின்றனர். இதனால் இம்முதலாளிகளிடம் சிறு தொகையைக் கடனாகப் பெற்று காலம் முழுவதும் அடிமைகளாக வேலை செய்து வருகின்றனர்.



இவர்களது தொழிலான மரங்களில் படியும் பாசம் எடுக்கும் பணியிலும் நள்ளிரவில் தங்கள் உயிரையும் பணயம் வைத்து மரங்களில் கயிறு கட்டி தேன் எடுத்தும் வருகின்றனர். வியாபாரிகள் போலியான தராசைப் பயன்படுத்தி ஏமாற்றி வருகின்றனர். வனத்துறையினரும் உரிமம் இல்லை என்று கூறித் தேனை எடுத்துச் சென்று விடுகின்றனர். மீறிக் கேட்டால் அடித்து உதைத்து காவல்துறையிடம் ஒப்படைத்து விடுகின்றனர். வீடு கிடையாது. வாழைப்பட்டைகளால் வேயப்பட்ட வீடுகளில்தான் வாழ்ந்து வருகின்றனர். இம்மக்கள் வாழும் இடங்களில் சாலை வசதி இல்லை. வீடுகளில் மின் வசதியில்லை. மக்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்படும்போது சரியான மருத்துவ வசதிகூட இல்லை.

*– தினமணி, 17.12.2002*

**நிகழ்வு 6**

தமிழ்நாட்டில் வாழும் மலைவேடன் இன பழங்குடியினர் சுமார் 4879 பேர். பழங்குடி மக்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் தங்களுக்கான இட ஒதுக்கீடு பெற வேண்டுமெனில் அவர்கள் தாசில்தாரிடமிருந்து சாதிச் சான்றிதழ் பெற வேண்டும்.

1989 வரை சரியாகச் சாதிச் சான்றிதழ்களை வழங்கி வந்த தாசில்தார்கள் அதற்குப் பின் முறைப்படி வழங்க மறுத்து விட்டனர். மாநில மனித உரிமை ஆணையம் இவர்களின் மனுவை ஏற்றுக் கொண்டு 2000 பிப்ரவரி 15 அன்று பழங்குடியினர் அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற சான்றிதழ் வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கிய பின்பும் மாவட்ட நிர்வாகம் இன்றும் தாமதப்படுத்தியே வருகின்றது.

## வகுப்புப் பயிற்சி

1. மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து ஒரு நிகழ்வைப் படித்து, ஒவ்வொரு நிகழ்விலும் பழங்குடி மக்கள் இழந்த உரிமைகளைத் தொகுக்கவும்.,

| இழந்த உரிமைகள் | |
|---|---|
| 1. | 4. |
| 2. | 5. |
| 3. | 6. |

2. பழங்குடி வகுப்பைச் சார்ந்தவர்களோடு பழகியிருக்கிறாயா? ஆமெனில், அவர்களின் பழக்க வழக்கம் உன் பழக்க வழக்கத்திலிருந்து எப்படியெல்லாம் வேறுபடுகிறது என்பதை வரிசைப்படுத்து.

   எ.டு. உணவு முறை

   அ. ------------------------------------------------------------------

   ஆ. ------------------------------------------------------------------

   இ. ------------------------------------------------------------------

   ஈ. ------------------------------------------------------------------

3. பழங்குடி மக்களின் பழக்கவழக்கங்கள், அவர்கள் மதம், மொழியெல்லாம் தனியாக இருக்க வேண்டும். அவைகளை அழிக்கக் கூடாது என்று எண்ணுகிறாயா? அல்லது உன் பழக்க வழக்கங்களை மதத்தை, மொழியை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று எண்ணுகிறாயா? ஏன் என்பதற்கான காரணங்களை விரிவாக எழுதுக.

## வீட்டுப் பயிற்சி

அ. பழங்குடியினர் மீது காட்டப் பெறும் பாகுபாடுகளைக் களைவது நம் சமூகக் கடமை என்று கருதுகிறாயா? அப்படியானால், அதற்கான காரணங்களை ஊரில் உள்ள பெரியோரிடம் கேட்டு எழுதி வரவும்.

ஆ. பழங்குடியினர் நாகரிகமற்றவர்கள்; காட்டில் வாழ்பவர்கள் என்பதால் பாகுபடுத்துவது தவறில்லை என்று சிலர் எண்ணுகிறார்களே. அது சரியா? தவறென்றால் காரணத்தை எழுதுக.

இ. நாம் காடுகளை அழிப்பதால் காடுகளுக்குச் சொந்தமான மக்களையும் அழிக்கிறோம். இப்போக்கு நம் எதிர்காலத்திற்கு நல்லதல்ல எனும் பொருளில் கட்டுரையொன்று தயார் செய்க.

# 7. அகதிகளும் பாகுபாடும்

# 7. அகதிகளும் பாகுபாடும்

**பாட நோக்கம்**

அகதிகள் சொந்த மண்ணிலிருந்து அகற்றப்பட்டவர்கள். சொந்தபந்தம், மொழி, கலாச்சாரம் அனைத்தையும் துறந்து, முற்றிலும் வேறான இன்னொரு மண்ணில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்.

இவர்கள் வேறொரு நாட்டிற்கு, சொகுசான வாழ்வு தேடி வந்தவர்கள் அல்லர்.

தம் உயிரை மட்டுமல்லாது, தம் உடமைகளாம் குடும்பத்தார், குழந்தைகளைக் காக்க ஓடி வந்தவர்கள்; இவர்கள் மனிதர்கள். எனவே, மனித உரிமையுடையவர்கள். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் அடைக்கலம் புகுந்தவர் என்பதால் இவர்கள் இன்னொரு நாட்டினரின் **தயவில்** வாழ்பவர்கள் என்ற எண்ணம் கூடாது. ஒவ்வொரு அகதியும் ஒரு ஆள் (Person). எனவே, மனிதர்க்குரிய மாண்பும், மரியாதையும், உரிமைகளும் உண்டென்பதை அறியச் செய்தல்,

அகதிகள் பற்றிய கற்பிதங்கள், அல்லது தவறான நம்பிக்கைகளை உடைத்தல்.

## அகதிகள் யார்

**அ. அகதிகள் தாம் பிறந்த நாட்டை விட்டு வெளியேறி வேறு நாட்டில் வாழ்பவர்கள்.**

**பிறந்த நாட்டில் துன்புறுத்தப்பட்டுப் பாதுகாப்பு மறுக்கப்பட்டவர்கள்.**

**இனம், மொழி, மதம், பால், தேசிய இனம், அரசியல் கட்சி, கொள்கை இவை காரணமாகப் பாகுபாடு மற்றும் ஒடுக்கலுக்குள்ளாதலினால் சொந்த நாட்டை விட்டு வெளியேறியவர்கள்.**

**ஆ. வெளிநாட்டுப் படையெடுப்பால் உள்நாட்டுக் கலவரங்களால், தொடர்ந்து நடக்கும் போரினால் மனித உரிமை மீறல்களால் உள்நாட்டில் வாழ முடியாமல், வெளிநாட்டிற்கு அடைக்கலம் தேடிச் செல்பவர்கள்.**

**தா**ங்க வியலா கொடூரச் சூழலிலிருந்து தப்பித்து, பிற நாடுகளில் தஞ்சம் கோரிப் பெறுவதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

*– அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு 14*

**ஓ**ர் அகதியை அவர் சார்ந்த மதம், இனம், பிறந்த நாடு – இவற்றைக் காரணம் காட்டிப் பாகுபடுத்தக் கூடாது.

*– ஐ.நா.வின் அகதிகளுக்கான உடன்படிக்கை 1951, பிரிவு – 3*

**அ**கதிகள் தாம் பிறந்த நாட்டை விட்டு விரும்பி வெளியேறுவதில்லை. வெளியேற வேண்டிய கட்டாயச் சூழலால் வெளியேறுகின்றனர்.

*– அய்க்கிய நாட்டவையின் அகதிகளுக்கான உயர் ஆணையம்*

## ஆசிரியர் நடவடிக்கை

அ. மாணவர்களிடம் அகதிகள் என்றால் யார் என்று தெரியுமா என்று கேட்டு, தெரியாத மாணவர்க்கு முதலில் கூறப்பட்டுள்ள விளக்கத்தை வாசிக்கச் சொல்லி விளக்கவும்.

ஆ. அகதிகள் பற்றிய கற்பிதங்கள் உடையும் பொருட்டு கீழ்க்கண்ட வாசகங்களை எல்லா மாணவர்களும் சேர்ந்து சொல்லச் சொல்ல வைத்தல்.

**''அகதிகள் மனிதர்கள்''**
**'அவர்களுக்குச் சமஉரிமையுண்டு'**
**'அவர்கள் கருணையின் மக்களல்லர்; உரிமைக் குடிமக்கள்'**

மாணவர்களைச் சொல்ல சொன்ன பிறகு கீழ்க்கண்ட நிகழ்வுகளை வாசிக்கச் சொல்லவும்.

### 1) நந்தினியின் ஆசை



அன்று காலையிலிருந்து அகதிகள் முகாம் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. வெளியூர் வேலைகளுக்குப் போகிறவர்களும் முகாமுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

அரசு அதிகாரிகளும், அமைச்சர்களும் முகாமுக்கு வருகை தருவதைப் பற்றியே எங்கும் பேச்சாக இருந்தது. தமது தேவைகளையும், குறைகளையும் மனுவாக எழுதி வைத்துக் கொண்டு காத்திருந்தார்கள்.

நந்தினிக்கு வயது பதினேழு. அகதியாக தமிழ்நாட்டுக்கு வந்து ஐந்தாண்டுகள் முடிந்து விட்டன.

அவள் தன் தாய்நாட்டில் அப்போது ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். வகுப்பில் அவள் தான் முதல் மாணவி. ஒரு நாள் இரவு அந்த ஊரில் குண்டு வீசினார்கள். துப்பாக்கியால் சுடும் ஓசை விடியும் வரை ஒலித்துக் கொண்டேயிருந்தது. அந்தத் தாக்குதலில் அவள் படித்த பள்ளிக்கூடம் தரைமட்டமாகிப் போயிருந்தது. அவளது தோழிகளில் சில பேர் கொல்லப்பட்டிருந்தார்கள். பல குடும்பங்கள் உயிர் பிழைப்பதற்காகத் தமிழ்நாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தனர். சொத்து சுகம் எல்லாவற்றையும் விட்டு விட்டு நந்தினியை மட்டும் இழுத்துக் கொண்டு தமிழ்நாட்டுக்கு வந்து விட்டாள் அவளது தாய்.

> சொந்த நாட்டு குடிமக்களுக்குக் கொடுக்கப் பெறும் கல்வி போலவே அகதிகளுக்கும் கல்வி பெறும் உரிமை உண்டு. (குறிப்பாக ஆரம்பக் கல்வி)
>
> – ஐ.நா.வின் அகதிகளுக்கான உடன்படிக்கை, பிரிவு 22

மண்டபம் முகாமிலிருந்து இரண்டு மூன்று முகாம்களுக்கு மாற்றியதில் நந்தினியின் இரண்டு வருடப் படிப்பு தடைப்பட்டு விட்டது. மற்ற பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதை வெறித்து பார்ப்பாள். அழுகை வரும். ஒரு வழியாக மூன்றாவது வருடம் பள்ளியில் சேர்ந்தாள். அங்கு படித்த மாணவிகள் இவளைவிட வயதில் குறைந்தவர்களாக இருந்தனர். வினோதமாக இவளைப் பார்த்தார்கள். இவள் பேசிய மொழி வித்தியாசமாய் இருந்ததால் கேலியாகச் சிரித்தார்கள். இவளுக்கு அவமானமாய் இருந்தது. எதனோடும் ஒட்ட முடியவில்லை. பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி விட்டாள். ஒருநாள் இவளிருக்கும் முகாமிற்கு அமைச்சர் வந்தார்.

குறைகளைக் கேட்டார், மனுக்களை வாங்கினார். கல்விக்கு உதவி, சாலை உதவி, குடிநீர், மின்சாரத் தேவை என்று நூற்றுக்கணக்கான மனுக்கள் அளிக்கப்பட்டன. அமைச்சர் அருகே போனதும் நந்தினி தயங்கியபடி நின்றாள்.

"உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டார் அமைச்சர்

நந்தினியின் கண்கள் கலங்கி விட்டன. "நான் படிக்கணும். என் தோழிகளைப் பாக்கணும். என்னாலே இங்கிருந்து படிக்க ஏலாது. நான் எங்க தாய்நாட்டுக்குப் போக வேணும்" என்றாள்.

*- நன்றி : சி. பன்னீர் செல்வம்*

## உலகில் அகதிகள் எண்ணிக்கை

- உலகில் 10.4 மில்லியன் மக்கள் அகதிகளாக உள்ளனர்.
- ஆசியாவில் 4.2 மில்லியன்
- ஆப்பிரிக்காவில் 3.5 மில்லியன்
- ஐரோப்பாவில் 2.5 மில்லியன்

*தகவல் : www.irr.org*

## 2002ம் ஆண்டில் இந்தியாவில் அகதிகள் நிலை

- 332,000 அகதிகள் இந்தியாவில் வாழ்கின்றனர்
- 143,000 இலங்கை அகதிகள்
- 110,000 திபெத்தியர்கள்
- 52,000 சின், பர்மா அகதிகள்
- 15,000 பூடான் அகதிகள்
- 11,400 ஆப்கன் அகதிகள்

*தகவல் : www.refugee.org*

## உள்நாட்டில் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்வோர்

- 600,000 மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளனர்
- 350,000 முதல் 450,000 காஷ்மீரிலும்
- 150,000 முதல் 200,000 வடகிழக்கு மாநில பழங்குடியினரும்
- 100,000 குசராத் சிறுபான்மையினரும் இடம் பெயர்ந்துள்ளனர்.

*தகவல் : www.refugee.org*

மாணவ ! மாணவியரே,

அ. நந்தினி ஏன் மகிழ்ச்சியாக இல்லை?

**காரணம்** அ. ------------------------------------------------

ஆ. ------------------------------------------------

ஆ. நந்தினி அகதியானதால் இழந்த உரிமைகள் யாவை?

அ. ------------------------------------------------

ஆ. ------------------------------------------------

இ. ------------------------------------------------

## 2) நான் யார்?



நான் திபெத்திலிருந்து அகதியாக இந்தியாவிற்கு வந்தவன். என் பெற்றோரைப் பிரிந்து வந்த நான், அவர்களைப் பார்க்க ஆவலோடிருக்கிறேன். நான், ஒரு சிறகொடிந்த பறவை போல வாழ்கிறேன். என்னுடைய உடல் இந்தியாவில் இருக்கிறது. ஆனால், என் மனம், ஆன்மா இரண்டும் திபெத்திலுள்ளது. என் பெற்றோரையும், நாட்டு மக்களையும், உறவினரையும் பிறந்த மண்ணையும் பிரிந்து வாழ்தல் தரும் துன்பம் எழுத்தில் வடிக்க இயலாது. நான் இந்தியாவில் உயர்கல்வி கற்கின்ற வாய்ப்பு கிடைத்தாலும், பலவேளை என்னுள் எழும் கேள்வி.

நான் யார்?
எங்கிருந்து வந்தேன்?
ஏனிங்கு இருக்கிறேன்?
நான் என்ன செய்யப் போகிறேன்?
இக்கேள்விகள் என்னை உலுக்குகின்றனவே.

*– இந்தியாவில் படிக்கும் ஒரு திபெத் அகதி மாணவர், 1999*

**சிந்தனைக்கு**

இம்மாணவன் ஏன் கலங்கினான்? உன்னை இம்மாணவனாகக் கற்பனை செய்து பார்.

## வகுப்புப் பயிற்சி

1. நீங்கள் எப்போதாவது, பெற்றோரிடமிருந்து சில காலம் வேறு ஊரிலோ, உறவினர் வீட்டிலோ தங்கியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருந்தால், உன் பெற்றோரை, நண்பரை, ஊர்ச்சூழலை பிரிந்ததால் வேதனைப்பட்டிருப்பாய். அவ்வனுபவங்களை வகுப்பில் பகிர்ந்து கொள்.

2. விடுதியில் தங்கியிருந்த அனுபவம் இருக்கிறதா? அப்போது உன் மனநிலை எப்படியிருந்து? அனுபவங்களை நினைத்துப் பார்

3. அகதிகள் வெறுங்கையினராய் வருகின்றனர். கையில் பணமில்லை. எனவே, பட்டினி கிடக்கின்றனர். மருத்துவ வசதி இல்லை. குழந்தைகளுக்குக் கல்வியும் கொடுக்க முடியாது. நெருக்கமாகச் சிறிய இடத்தில் வாழ்வதால் தனிமை இல்லை. இப்படியே வாழ்வதால் இவர்கள் அனைவருமே வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளை இழந்து விடுகின்றனர். இப்போது கூறுங்கள். அகதிகளில் கீழ்க்கண்டோர் இழக்கும் உரிமைகள் யாவை?

| | **இழக்கும் உரிமைகள்** |
|---|---|
| **பெண்கள்** | **அ.** |
| | **ஆ.** |
| | **இ.** |
| **குழந்தைகள்** | **அ.** |
| | **ஆ.** |
| | **இ.** |
| **முதியோர்** | **அ.** |
| | **ஆ.** |
| | **இ.** |
| **இளைஞர்கள்** | **அ.** |
| | **ஆ.** |
| | **இ.** |

4. அகதிகள் வேற்று நாட்டவர். ஆகவே, அவர்களுக்குக் கருணை காட்டலாம். ஆனால், உரிமை காட்டக் கூடாது. சமமாக நடத்தத் தேவை இல்லை.

**ஏற்றுக் கொள்கிறேன்**

**காரணம்**

அ. ------------------------------------------------

ஆ. ------------------------------------------------

இ.------------------------------------------------

**ஏற்றுக் கொள்ளவில்லை**

அ. ------------------------------------------------

ஆ. ------------------------------------------------

இ. ------------------------------------------------

## ஓர் அகதியின் குடும்பம்

*மகன் யாழ்ப்பாணத்தில்*
*மனைவி கொழும்பில்*
*தந்தையோ வன்னியில்*
*முதிய நோயுற்ற தாய் தமிழகத்தில்*
*உறவினர்கள் செர்மனியில்*
*நான் பாலை நிலத்தில் அலைக்கழிக்கப்படும்*
*ஒட்டகம் போல் ஒவ்வொவரு நாளும்*
*ஒரு நாட்டில் வாழ்கிறேன்.*
*குரங்கிடம் அகப்பட்ட பஞ்சடைத்த*
*தலையணை எப்படியெல்லாம்*
*சிதறிப் போகுமோ அப்படியே*
*என் குடும்பம் சிதைந்து விட்டதே.*

– **செயபாலன்**, ***Between Fear and Hope*** *பக். 54*

**வீட்டுப் பயிற்சி**

அ. உன் ஊர்ப்பக்கத்தில் அகதி முகாம் இருக்கலாம். அம்முகாம்களுக்குச் சென்று

- ஏன் இந்தியாவிற்கு வந்தனர்?
- எப்படி வந்தனர்?
- அகதி முகாம்களில் அவர்களின் கீழ்க்கண்ட அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றனவா என்று கேட்டு வகுப்பில் பகிர்ந்து கொள்.

☐ உணவு ☐ மருத்துவம் ☐ கல்வி

☐ உடை ☐ சுகாதாரம் ☐ பாதுகாப்பு

☐ தண்ணீர்

ஆ. உன்னை ஒரு அகதிக்குழந்தையாகக் கற்பனை செய்து கொள். அகதியானால், நீ இழக்கும் உரிமைகள் எவை? உன் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று கற்பனையாக, ஒரு கட்டுரை தயார் செய்து வகுப்பில் வாசிக்கவும்.

**த**த்தமது அரசின் எல்லைக்குள் சுதந்திரமாய் போய் வருவதற்கும், குடியிருப்பதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

சொந்தநாடு உட்பட எந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கும், சொந்த நாட்டுக்கே திரும்புவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

*- பிரிவு **13**, அகில உலக மனித உரிமைப் பிரகடனம்*

# ௪. பிறப்பிடத்தால் பாகுபாடு

# 8. பிறப்பிடத்தால் பாகுபாடு

**பாட நோக்கம்**

- ❖ சாதி, இனம், மொழி, மத அடிப்படையில் மட்டுமல்ல; மக்கள் **பிறப்பிட** அடிப்படையிலும் பாகுபடுத்தப்படுகின்றனர் என்பதனை எடுத்துக்காட்டல்.
- ❖ இந்தியா ஒரு துணைக்கண்டம். இந்நாடு பல மொழி பேசும் மாநிலங்களையுடையது. எனவே, பன்முகக் கலாச்சாரங்களையுடையது. பன்முகத் தன்மையுடைய இம்மக்கள் ஒரே நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதால், விரும்பிய இடத்திற்குச் செல்லவும், குடியிருக்கவும் உரிமை பெற்றவர்கள். பிறந்த இடம் விட்டு, இன்னொரு இடத்தில் குடி அமர்வோரைப் பிறப்பிடம் கருதி பாகுபடுத்தல் மனித உரிமை மீறல் என்பதனை விளக்குதல்.

மதம், இனம், சாதி, பால், வம்சா வழி, பிறப்பிடம், இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் அரசு பதவிகளுக்கு நியமனம் அல்லது வேலை வாய்ப்பு தொடர்பாக எந்தவொரு குடிமகளையும் தகுதியற்றவராகக் கருதக் கூடாது. பாகுபாடு காட்டக் கூடாது.

*– இந்திய அரசியல் சாசனம், பிரிவு 16 (2)*

**இந்தியக் குடிமக்கள் யாவர்க்கும்,**

அ. இந்திய எல்லைக்குள் எத்தகைய தடையுமின்றி நடமாடவும்,

ஆ. தான் விரும்பிய இடத்தில் வசிக்க, தங்கியிருக்கவும்

இ. சொத்துக்களை வாங்க, விற்க, வைத்துக் கொள்ளவும்

ஈ. எந்தத் தொழிலையும் செய்யவும் நடத்துவதற்கும் எந்தப் பணியிலும் ஈடுபடுவதற்கும் உரிமையுண்டு.

*– இந்திய அரசியல் சாசனம், பிரிவு 19 (1)*

தத்தமது அரசின் எல்லைக்குள் சுதந்திரமாய்ப் போய் வருவதற்கும், குடியிருப்பதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

சொந்த நாடு உட்பட எந்த நாட்டை விட்டும் வெளியேறுவதற்கும், சொந்த நாட்டுக்கே திரும்புவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

*– அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு 13*

**ஆசிரியர் நடவடிக்கை**

- பிறப்பிடம் கருதி பாகுபடுத்தலுக்கெதிரான உரிமை சாசனப் பிரிவுகளை மாணவர்களை உரக்க வாசிக்கச் சொல்லவும்.
- மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விளக்கம் சொல்லவும்.

பின்பு மாணவர்க்கு கீழ்க்கண்ட சிறிய விளக்கத்தை முன்னுரையாகக் கொடுக்கவும்.

**ஆசிரியர் :** இந்தியா ஒரு துணைக்கண்டம். இந்நாட்டில் பல மொழி பேசுவோர் வாழ்கின்றனர். ஒவ்வொரு மொழி பேசுவோரின் பண்பாடும் வேறானது. பழக்க வழக்கமும் வேறானது. ஆகவே தான் நம் நாட்டை மொழி அடிப்படையில் பல மாநிலங்களாகப் பிரித்துள்ளனர். இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் உள்ளன?

**மாணவர்கள் :** தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரம் உட்பட 30 மாநிலங்கள் உள்ளன.

**ஆசிரியர் :** இந்தியா என்ற நாட்டில் பல மாநிலங்கள் உள்ளன.

எனவே, இந்த நாட்டின் குடிமக்களாகிய நாம் **எந்த மாநிலத்திற்கும் போகலாம், குடியேறலாம், தொழில் செய்யலாம்.**

வேறு மாநிலத்தில் பிறந்தவர்கள் என்பதனால் ஒதுக்கவோ, ஒடுக்கவோ, பாகுபடுத்தவோ யாருக்கும் உரிமை கிடையாது.

**மாணவர்கள் :** வேறு மாநிலத்தில் குடியேறினால், அந்த மாநிலத்து மொழியைத் தான் கட்டாயம் பேசணுமா?

**ஆசிரியர் :** கட்டாயப்படுத்தக் கூடாது. விரும்பினால் பேசலாம். பிற மாநிலத்தில் குடியேறியவர்களின் குழந்தைகளுக்கு அவரவர் தாய் மொழியில் கல்வி கற்கவும் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிறப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு யாரையும் பாகுபடுத்த உரிமையில்லை.


**மாணவர்கள் :** ஒரே நாடு என்று தான் நாம் கருதுகிறோம். தமிழ்நாட்டு மக்கள் பல்வேறு மாநிலங்களில் வாழ்கின்றனர். வேறு மாநிலத்தவர்களும் நம்மூரில் இருக்கின்றனர். இதெல்லாம் பார்க்க சந்தோஷமாக இருக்கிறது.

**வேறொரு மாணவர் :** ஆனால் எல்லா இடத்திலேயும் அப்படியில்லையே. கொஞ்ச காலத்துக்கு முன்னாடி மும்பையில் தென்னிந்தியாவைச் சேர்ந்தவங்களை வெளியே போகச் சொல்லி ஆர்ப்பாட்டம் பண்ணினாங்க. கர்நாடக மாநிலத்தில், காவிரிப் பிரச்சினைகள் வரும் போதெல்லாம், பெங்களூரில் இருக்கும் தமிழர்கள் பயந்துட்டே இருக்கிறாங்களே.

**ஆசிரியர் :** பிறந்த இடத்தின் அடிப்படையில் செய்யப்படும் இந்தச் செயலைத் தான் பாகுபாடு என்கிறோம். அண்மையில் நடந்த இன்னொரு செய்தியைக் கேளுங்கள்.

பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பழங்குடியினராகவோ உள்ள ஒருவருடைய நிலத்தில் அல்லது இருப்பிடத்தில் அவருக்குள்ள உடைமையை சட்ட முரணாகப் பறிப்பாராயின், அல்லது நிலம், இருப்பிடம் அல்லது நீர் வசதி மீது அவருக்குள்ள உரிமைகளை அவர் அனுபவிப்பதில் குறுக்கிடுவாராயின் ஆறு மாதம் முதல் அய்ந்தாண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். *- 3(1) (v) எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989*

## 1) இப்படி அன்று நடந்தது



*நாஞ்சில் நாடு என்று அழைக்கப் படுகிற குமரி மாவட்டம், மலை யாள மன்னர்களின் அதிகாரத் தின் கீழ் இருந்த போது, மலை யாள நம்பூதிரி இனத்தினர். தமிழ் மக்களைத் தீண்டத்தகாதவர் களாக ஒதுக்கியும், ஒடுக்கியும், சாதீயக் கொடுமைகள் செய்தனர். ஆணோ, பெண்ணோ - அவர்கள் இடுப்புக்கு மேல் ஆடை அணி யவும் கூட தடை விதித்திருந்தனர்.*

*மலையாள நாட்டில் எதற் கெடுத்தாலும் வரி! தலைக்கு வரி, மீசைக்கு வரி, திருமணம் செய்தால் வரி, சடங்கு நடத்தினால் வரி, செத்தால் வரி, பனை ஏறினால் வரி, கள் விற்றால் வரி, வலை விரித்தால் வரி, மீன் கொணர்ந்தால் வரி, என்று 108 வரிகளைச் சுமத்தினர். தமிழர்கள் வரி செலுத்தியே நலிந்தனர். நம்பூதிரி வம்சத்தினருக்கோ எந்த வரியும் கிடையாது.*

*தண்டிக்கப்பட்டவர்கள் மேல் முறையீடு செய்யக் கூடாது. பத்திரங்கள் பதியக் கூடாது. உயர்சாதியினரைக் கீழ் சாதியினர் குறை சொல்லக் கூடாது. நம்பூதிரிகள் எதிரே வந்தால், தமிழர்கள் ஒதுங்கி நிற்க வேண்டும். இடுப்புக்குக் கீழே முழங்காலுக்கு மேலே தான் உடை உடுத்தலாம். ஆலயத்துக்குள் அனுமதி கிடையாது. குற்றங்களுக்குத் தக்கவாறு முதுகில் கல் சுமக்க வைத்தல், புளியைத் தின்ன வைத்தல், மீசை ரோமங்களை ஒவ்வொன்றாய்ப் பிடுங்குதல் போன்ற தண்டனைகள்! இந்தக் கொடுமைகள் சுதந்திரத்துக்கு முன்பு மட்டுமல்ல, பின்னும்கூட நிகழ்ந்த வண்ணம் இருந்தன. 'கைமுக்கு' என்ற பெயரில் கொதிக்கும் எண்ணெய்க்குள் குற்றவாளியின் கையை நுழைக்கச் செய்யும் கொடூரமும் இங்கே இருந்தது. நெய்யாற்றிற்கு வடக்கே தமிழர்கள் மலையாளத்தில் தான் பேச வேண்டும் என்னும் கட்டாய நிலைக்கும் தள்ளப்பட்டனர்.*

– *குமுதம்*

பட்டியலில் கண்ட சாதியினராகவோ, பட்டியலில் கண்ட பழங்குடியின ராகவோ உள்ள ஒருவருக்கு உடல்ஊறு, அவமதிப்பு அல்லது தொல்லை விளைவிக்கும் கருத்துடன் அவரது இருப்பிடத்தில் அல்லது அதன் அருகாமை யில் மலம், கழிவுபொருள், விலங்கின் பிணச் சிதைவுகள், அருவருப்பான பிற பொருள் எதனையும் கொட்டி வைப்பாராயின் ஆறு மாதம் முதல் அய்ந்தாண்டு வரை சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

– 3(1) (**ii**) எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989

## 2) இப்படி இன்று நடக்கிறது



கடந்த நவம்பர் 9ஆம் தேதி அசாம் மாநில தலைநகர் கவுகாத்தியில் ரயில்வே பணி களுக்கு ஆள் தேர்வு செய்யும் பணி துவங்கியது. இதில் இந்தி பேசும் பீகார் மாநிலத் தைச் சார்ந்த மாணவர்களும் கலந்து கொள்ள கவுகாத்தி வந்தனர். அப்போது அசாம் மாணவர்கள் கவுகாத்தியில் நடை பெறும் தேர்வில் அசாம் மாணவர்கள் மட்டுமே பங்கு கொள்ள வேண்டும் என்று கூறி பீகார் மாணவர்களைத் தாக்கினர். அதனால் பீகார் வழியாக ரயில் மூலம் பயணம் செய்த அசாமியர்களைப் பீகாரைச் சார்ந்தவர்கள் தாக்கினர். இதனையடுத்து, அசாமில் பீகார் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் கொலை வெறித்தாக்குதல் நடந்தது. பீகார் வம்சாவளியினர் அதிகமாக வாழும் பகுதிகளில் வன்முறையால் பலர் படுகொலை செய்யப்பட்டனர். தின் சூகியா மாவட்டத்தில் உள்ள ஒரு செங்கல் சூளையில் மட்டும் பீகாரைச் சேர்ந்த எட்டுக் கூலித் தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வன்முறைகளில் சுமார் 34 பீகார் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பணம், நகைகள் பறிக்கப் பட்டன. வீடுகள், கடைகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இதே போன்று மகாராஷ்டிரா மாநிலத்தில் ரயில்வே பணிக்கு மற்ற மாநிலத்தவர்கள் நியமிக்கக் கூடாது என எதிர்ப்பு கிளம்பியது.

*- ஃப்ரண்ட் லைன், டிசம்பர் 19, 2003*

### வகுப்புப் பயிற்சி

1. **தமிழ்நாட்டில் வேறு மாநில மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அறிவாயா? அறிந்திருந்தால் இரு மாநில மக்களின் பெயரைச் சொல்லவும்.**

   அ. ______________________________

   ஆ. ______________________________

**அ**ரசியல் சாசனம் துவக்கப்பட்ட நாளில் இந்தியாவில் குடியிருக்கும் ஒவ்வொரு நபரும் மற்றும்
(அ) இந்திய மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும்,
(ஆ) அவர்களுடைய பெற்றோரில் ஒருவர் இந்தியராக இருப்பின் அத்தகைய நபரும் இந்தியக் குடிமக்கள் ஆவர்.
*- பிரிவு 5, இந்திய அரசியல் சாசனம்*

2. வேறு மாநில மக்கள் நம்மக்கள் போல் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கருதினால் ஏன் என்பதற்கான காரணங்களை எழுதுக.

அ. ______________________________

ஆ. ______________________________

3. அசாமியர்கள் பீகார் மாநில மக்களைத் தாக்கியது பற்றி உன் கருத்து என்ன?

– தாக்கப்பட்ட பீகார் மக்கள் இழந்த உரிமைகள் யாவை?

| | |
|---|---|
| அ. | இ. |
| ஆ. | ஈ. |

4. நீ நகரில் ஒரு கடையில் பொருள் வாங்கச் செல்கின்றாய். அக்கடைக்காரர் வேறு மாநிலத்தவர் என்பதால் உன் நண்பன் இக்கடையில் பொருள் வாங்கக் கூடாது என்று உன்னிடம் கேட்டுக் கொள்கிறான். பிறப்பிடத்தால் பாகுபாடு காட்டக் கூடாது என்ற கருத்தை எப்படி நீ புரிய வைப்பாய்?

______________________________

______________________________

______________________________

______________________________

*தன்னுடைய நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாகச் சென்று வருவதற்கும், தன்னுடைய வசிப்பிடத்தைத் தேர்வு செய்வதற்குமான சுதந்திரம்.*

*–பிரிவு 12, குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை 1966*

5. பிறப்பிடம் வேறு, மொழியும் வேறு, மதமும் வேறு, இவ்வளவு வேறுபட்டாலும் மனிதர்களை சமமாக நடத்த வேண்டும் என்பதற்கான காரணங்கள் யாவை?

| | |
|---|---|
| அ. | இ. |
| ஆ. | ஈ. |

6. பிறப்பிடத்தால், மொழியால், மதத்தால் வேறுபட்ட ஒருவரைச் சமமாக நடத்த வேண்டுமானால் அவர் உன் மொழியைப் பேச வேண்டும், உன் மதத்திற்கு மாற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவாயா? அல்லது அவருக்குரிய மொழியைப் பேசட்டும், அவர் விரும்பிய மதத்தில் இருக்கட்டும் என்று கூறுவாயா?

உன் கருத்தையும், காரணங்களையும் எழுதுக.

உன் கருத்து

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

---------------------------------------------------------------

காரணங்கள் **அ.** ____________________

**ஆ.** ____________________

**இ.** ____________________

**ஒவ்வொரு குழந்தைக்கும், பாதுகாப்போடும், மாண்போடும் வாழ்வதற்கான போதுமான குடியிருப்புக்கான உரிமை உண்டு.**

*- விதி 27, ஐ.நா.வின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை 1989*

7. உங்கள் ஊரில் வெகுகாலத்திற்கு முன்பே, வேறு ஊரிலிருந்து ஒருவர் குடியேறி யிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் மிகவும் நல்லவர். ஊர் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நாட்டமுடையவர். உங்கள் ஊரில் ஊராட்சி மன்றத் தேர்தலில் இவரையே தலைவராக நிறுத்த வேண்டும் என்று பெரும்பான்மை மக்கள் விரும்புகின்றனர். ஒரு சிலர், வெளியூர்க்காரர்க்குப் பதவி கொடுத்தல் தவறு என்று வாதிடுகின்றனர். இவ்விவாதத்தில் நீ என்ன முடிவெடுப்பாய்?

❖ வெளியூர்க்காரர் ஊராட்சி மன்றத் தலைவராவது சரி தான் என்று கருதினால் அதற்கான காரணங்களைத் தருக.

அ. ____________________

ஆ. ____________________

இ. ____________________

❖ தவறு என்று கருதினால் அதற்கான காரணங்களைத் தருக.

அ. ____________________

ஆ. ____________________

இ. ____________________

## வீட்டுப் பயிற்சி

1. நீ வாழும் கிராமத்தில் ஏறக்குறைய எல்லோரும் உறவினர்கள் என்று வைத்துக் கொள்வோம். இவ்வூருக்கு வேறொரு ஊரிலிருந்து வந்து ஒரு குடும்பம் குடியேறுகிறது. இவர்கள் உங்களுக்குச் சொந்தக்காரர் அல்லர். நீங்கள் சார்ந்த சாதியுமல்லர். உங்கள் ஊரில் பிறக்கவில்லை. ஆனால், உங்கள் ஊரில் வாழ்கிறார்கள். இக்குடும்பத்தை இக் குடும்பத்தின் உறுப்பினர்களை பிறப்பிடம் வேறு என்பதால் கீழ்க்கண்ட இடங்களில் சமமாக நடத்துவீர்களா? ஒதுக்கி வைப்பீர்களா?

| | சமமாக நடத்துவோம் | ஒதுக்குவோம் |
|---|---|---|
| ஊர்ப் பஞ்சாயத்து | | |
| ஊராட்சி மன்ற தேர்தல் | | |
| கூட்டுறவு அமைப்பு | | |
| திருமண உறவு | | |
| காதல் திருமணம் | | |
| மங்கல நிகழ்வுகள் | | |

2. உன் ஊரிலோ, அல்லது உன் ஊர்ப்பக்கத்தில் இருக்கும் நகரத்திலோ வாழும் வேறு ஊர்/ மாநிலம் சார்ந்தவரை அணுகி, அவர் எப்படி நடத்தப்படுகிறார் என்று கேட்கவும்.

- ✪ சமமாக என்றால் எந்தெந்த நிலைகளில்

- ✪ பாகுபாடென்றால் எந்தெந்த நிலைகளில் என்று கேட்டறிக.

3. உங்களூர் சார்ந்த பலர் வேறு மாநிலங்களில் வேறு நாடுகளில் கூட பணியாற்றலாம். அங்கெல்லாம் பிறப்பிடத்தால் வேறுபட்டவர்கள் என்பதால் சமமாக நடத்துகின்றனரா - பாகுபாடு காட்டுகின்றனரா?

**பாகுபாடு காட்டப்பட்டால், கீழ்க்கண்ட எந்தெந்த அடிப்படையில் என்பதனை கேட்டு டிக் செய்க.**

- – கல்வி ☐
- – தொழில் ☐
- – வேலை வாய்ப்பு ☐
- – திருமணம் ☐
- – வழிபாடு ☐

**மற்றும்**

4. பிறப்பிட அடிப்படையில் காட்டப் பெறும் பாகுபாட்டால் மக்கள் இழக்கும் உரிமைகள் யாவை ?

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. பிறப்பிட அடிப்படையில் காட்டப் பெறும் பாகுபாட்டைக் களைய என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்பதனை கட்டுரை வடிவில் எழுதிக் கொள்க.

6. திரைப்படம் பார்க்கிறாய். தமிழ்ப்பட நடிகர்கள் அனைவரும் தமிழர்கள் அல்லர். தமிழ்நாட்டைச் சேர்ந்த நடிகர் நடித்தால் தான் படம் பார்ப்போம் என்று சொல்பவரிடம் என்ன சொல்வாய்?

______________________________

______________________________

______________________________

7. தமிழ்ப்படத்தில் எல்லா மாநில நடிகர், நடிகைகளும் நடிக்கின்றனர். வேறு மொழிப் படங்களிலும் தமிழ்ப்பட நடிகர், நடிகைகள் நடிக்கின்றனர். பிறப்பிட அடிப்படையிலான பாகுபாடு தொடர்ந்தால் என்னென்ன விளைவுகள் திரைப்படத் துறையில் ஏற்படும் என்பதனையும் இதைப் போல ஒவ்வொரு துறையிலும் ஏற்படும் விளைவுகளையும் சிந்திக்கவும்.

# ௭. வறுமையும் பாகுபாடும்

# 9. வறுமையும் பாகுபாடும்

### பாட நோக்கம்

வறுமை ஒரு நோயல்ல; நோயின் அடையாளம். பொருளாதார ஏற்றத்தாழ்வு தான் நோய்; அதாவது உள்ளவர் - இல்லாதவர் அல்லது பணக்காரன் - ஏழை என்ற பிளவு. இப்பிளவு தான் ஏழையரை வறுமைக்குட்படுத்துகிறது. வறுமை தான் மனிதர்களின் மாண்பினைக் கேலிக்குள்ளாக்கி, ஏழ்மையின் அனைத்து வடிவங்களுக்கும் (பிச்சை எடுத்தல், சுரண்டப் பெறல், கொத்தடிமை) மனிதர்களை ஆட்படுத்து கிறது.

வறுமைக்குள்ளானோர் எளிதாகப் பாகுபாட்டிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். வறுமை பாகுபாட்டின் வடிவம், மனித உரிமை மீறல் என்பதனால் வறுமையினால் உருவாகும் பாகுபாடும் மனித உரிமை மீறலே. இக்கருத்தை விளக்குதலே இப்பாடத்தின் நோக்கம்.

ஏற்றத் தாழ்வு
|
வறுமை
|
இயலாமை
|
சுரண்டல்
|
பாகுபாடு



**ம**னிதர்களின் உள்ளார்ந்த மாண்பு, சமத்துவம் எனும் பிரிக்க இயலா உரிமைகள் தாம் உலகின் சுதந்திரம், நீதி, அமைதிக்கான அடித்தளங்களாம்.

*– அகில மனித உரிமைப் பிரகடனம், முகப்புரை*

**ச**ட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டத்தின் முன் சம பாதுகாப்பைப் பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு. பாகுபடுத்தலிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு.

*– (மேற்கண்ட பிரகடனம்), பிரிவு 7*

**இ**ந்திய மக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல், **நீதி**,
எண்ண, எழுத எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க வழிபாடு செய்ய **சுதந்திரம்**,
அந்தஸ்து, வாய்ப்பில் **சமத்துவம்** இவற்றை வளர்க்க உறுதி.

*– இந்திய அரசியல் சாசனம் , முகப்புரை*

**இ**ந்தியாவில் உள்ள எந்த நபருக்கும் சட்டத்தின் முன் சம உரிமையும் சமமான பாதுகாப்பையும் அரசு மறுக்கக் கூடாது

*– இந்திய அரசியல் சாசனம் , பிரிவு 14*

## ஆசிரியர் நடவடிக்கை

மேலே தரப்பட்டுள்ள உரிமைச் சட்டங்களில் தரப்பட்டுள்ள முக்கியமான வார்த்தைகளை மாணவர் துணை கொண்டு **வரிசையாகத்** தொகுக்கவும்.

எ.டு. : **நீதி**

**சமத்துவம்**

**சம உரிமை**

**சம பாதுகாப்பு**

**அமைதி**

**மாண்பு**

இவ்வார்த்தைகளுக்கு மாணவர்களைக் கொண்டே விளக்கம் தரச் சொல்லி வகுப்பறையில் எளிய எடுத்துக் காட்டுகளோடு விவாதம் செய்யவும்.

- ➔ *நீதி என்றால் என்ன?*
- ➔ *அநீதி என்றால் என்ன?*
- ➔ *சமத்துவத்திற்கும் நீதிக்கும் என்ன தொடர்பு?*
- ➔ *சமத்துவம் வேறு நீதி வேறா?*
- ➔ *மனிதர்கள் சமமான மாண்புடையவர்கள் என்பதை ஒத்துக் கொள்கிறாயா?*

➔ உண்மையான ***அமைதி*** (Peace) எது?

*வாய் மூடியிருப்பது அமைதியா?*
*சமத்துவம், நீதியால் உருவாகும் அமைதியா?*
*எது வந்தாலும் மௌனமாக ஏற்றுக் கொள்வது அமைதியா?*
*எது நடந்தாலும் கண்டுகொள்ளாதிருப்பது அமைதியா?*

விவாதத்தின் இறுதியில், கீழ்க்கண்ட நிகழ்வுகளை குழுவாக வாசிக்கச் சொல்லி, மேற்கண்ட வார்த்தைகளுக்கான பொருளை அறியச் செய்க.

> தனி நபர்கள் மட்டுமின்றி பல்வேறு தளங்களில் பல பிரிவுகளாக வாழ்ந்து வரும் மக்களிடம் நிலவும் வருமான ஏற்றத் தாழ்வு மற்றும் அந்தஸ்து, பொது நலன், வாய்ப்புகள் ஆகியவற்றில் காணப்படும் சமமற்றதன்மை போன்றவற்றைக் களைய அரசு முயற்சிக்க வேண்டும். – *இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 38 (2)*



பாகுபாட்டின் விளைவு 1

## தற்கொலைத் தலைநகர்

ஆந்திர மாநிலத்தின் ஒரு மாவட்டத் தலைநகரின் பெயர் அனந்தப்பூர். இந்தத் தலைநகரைத் **தற்கொலைத் தலைநகர்** என அழைக்கின்றனர். 2000–லிருந்து 2004– மார்ச் வரையிலான காலகட்டத்தில் இந்நகரில் 450 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இவ்வாண்டு (2004) மே மாதம் 18லிருந்து 29 ஆம் தேதி வரை 80 பேர் தற்கொலை செய்துள்ளனர்.

உள்ளத்தில் எழ வேண்டிய கேள்விகள்

→ **ஏழை விவசாயிகள் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்?**

→ **விவசாயிகள் பஞ்சத்தால் வாடுகின்றனர்**

↓

**பட்டினி**

↓

**கடன் தொல்லை**

↓

**தற்கொலை**

**(பஞ்சம் பட்டினி → கடன் தொல்லை → தற்கொலை)**

→ இந்நிகழ்வு நீதியா அநீதியா?

→ ஒரு சிலர் எல்லா வகை செல்வத்தோடும் வாழ்கின்றபோது, உழைக்கும் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டமைக்கு **என்ன** காரணம்?


– வறுமையும் பட்டினியும் கடன் சுமையும் தற்கொலைக்கு இட்டுச் சென்றபோது, இவர்கள் இழந்த உரிமை?

**~~– சமத்துவ உரிமை~~**
**~~– சுதந்திர உரிமை~~**
**– வாழ்வுரிமை** ✓

பாகுபாட்டின் விளைவு 2

## யாரை பாகுபடுத்த முடியும்?

கொசு ஒன்று ரீங்காரம் செய்து கொண்டு அங்கும் இங்கும் பறந்தது. அதன் முகத்தில் கோபமும், எரிச்சலும் தெரிந்தது.



வேறொரு கொசு ஒன்று அந்தப்பக்கம் வந்து சேர்ந்தது. கொசுவின் கோபத்தைக் கண்ட இக்கொசு, ''ஏன்? இத்தனைக் கோபத்துடன் பாடுகிறாய்?'' என்று கேட்டது.

அதை ஏன் கேட்கிறாய்? இந்த வீட்டுக்குள் மின்விசிறி, கொசுவர்த்தி, கொசுவலை, போர்வை எத்தனை பாதுகாப்பு !

### இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் (மாநிலம் வாரியாக)

| வறுமைக் கோட்டிற்கு கீழே சதவிகிதத்தில் | மாநிலங்கள் |
|---|---|
| 10 % | கோவா, அரியானா, இமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், டையூ டாமன், டில்லி |
| 20 % | ஆந்திரப்பிரதேசம், குஜராத், கர்நாடகா, கேரளா, மிசோராம், ராஜஸ்தான், லட்சத்தீவு, தாத்ரா/நாகஹெவேலி, அந்தமான் |
| 30 % | மகாராஷ்டிரா, மணிப்பூர், தமிழ்நாடு, மேற்குவங்காளம், புதுச்சேரி |
| 40 % | அருணாச்சலப்பிரதேசம், அசாம், மத்தியப்பிரதேசம், மேகாலயா, நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, உத்தரப்பிரதேசம் |
| 50 % | பீகார், ஒரிசா |

*தகவல்: 1999 – 2000 ஆம் ஆண்டிற்கான மத்திய திட்டக்குழு*

"ஒரு சொட்டு ரத்தம் குடிக்க வழியில்லை. சுற்றிச் சுற்றி வருகி றேன்" என்றது.

"இத்தனைச் சலிப்பு உனக்கு ஏன்? இலைச்சாறு குடித்துப் பழகு, ஒருவருக்கும் துன்பம் இல்லை"

கொசு சொன்னது: "அட ! நீ ஒண்ணு, மனித ரத்தம் ஒரு புதுச்சுவை எத்தனை இன்பம்"

கொசு அந்த வீட்டை விட்டு வெளியில் வந்தது. ஒரு சிறு குடிசை முன்னால், ஒரு திண்ணையில் ஒரு **ஏழை** மனிதன் படுத்திருந்தான்.

உடுத்தியிருந்த வேட்டியைத் தவிர அவன் உடலில் வேறு ஒன்றும் இல்லை. நன்றாக குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

பெண் கொசு அந்தப் பக்கமாகச் சென்றது. ரீங்காரப்பாடல் அதன் வாயிலிருந்து தொடர்ந்து வந்தது. அதன் மனம் மகிழ்ச்சியால் நிறைந்தது. மெதுவாக அவன் கால் மேல் அமர்ந்து தன் வாயிலிருந்த ஊசி போன்ற உறுப்பால் துளைக்க ஆரம்பித்தது.

அப்பப்பா ! எத்தனை சுவை ! கொசு தன்னை மறந்தது !

***- சிறுவர் மலர், தினமலர்***

**வகுப்புப் பயிற்சி**

■ *கொசு கோபப்பட என்ன காரணம்?*

அ. ____________________

ஆ. ____________________

**1973 முதல் 2000ஆம் ஆண்டு வரை வறுமைக் கோட்டிற்கு கீழேயான எண்ணிக்கை**

| ஆண்டு | ஊரகம் | | நகர்புறம் | | ஒப்பீடு | |
|---|---|---|---|---|---|---|
| | தமிழ்நாடு | இந்தியா | தமிழ்நாடு | இந்தியா | தமிழ்நாடு | இந்தியா |
| 1973 – 74 | 57.43 | 56.44 | 49.40 | 49.01 | 54.94 | 54.88 |
| 1977 – 78 | 57.68 | 53.7 | 48.69 | 45.24 | 54.79 | 51.32 |
| 1983 | 53.99 | 45.65 | 46.96 | 40.7 | 51.66 | 44.48 |
| 1987 – 88 | 45.80 | 39.9 | 38.64 | 38.20 | 43.39 | 38.86 |
| 1993 – 94 | 32.48 | 37.27 | 39.77 | 32.36 | 35.3 | 35.97 |
| 1999 – 2000 | 20.55 | 27.9 | 22.11 | 23.63 | 21.12 | 26.10 |

*தகவல் : மத்திய திட்டக்குழு*

■ கொசுவால் செல்வந்தர்களிடம் ஏன் இரத்தம் குடிக்க முடியவில்லை?

அ. ______________________________

ஆ. ______________________________

■ குடிசையில் வாழ்ந்த மனிதரிடம் ஏன் இரத்தம் குடிக்க முடிந்தது?

அ. ______________________________

ஆ. ______________________________

■ செல்வந்தரை கொசுவிடமிருந்து எவையெல்லாம் பாதுகாத்தன?

அ. ______________________________

ஆ. ______________________________

இ. ______________________________

ஈ. ______________________________

## 1999 – 2000 ஆண்டில் தென்னிந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயான மக்கள் எண்ணிக்கை

| மாநிலங்கள் | ஊரகம் | | நகர்ப்புறம் | | ஒப்பீடு | |
|---|---|---|---|---|---|---|
| | நபர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்) | நபர்களின் சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்) | நபர்களின் சதவீதம் | நபர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்) | நபர்களின் சதவீதம் |
| ஆந்திரப்பிரதேசம் | 58.13 | 11.5 | 60.88 | 29.63 | 119.1 | 15.17 |
| கர்நாடகா | 59.91 | 17.38 | 44.49 | 25.25 | 104.40 | 20.4 |
| கேரளா | 20.97 | 9.38 | 20.7 | 20.27 | 41.4 | 12.72 |
| தமிழ்நாடு | 80.51 | 20.55 | 49.97 | 21.11 | 130.48 | 21.12 |
| இந்தியா | 1932.43 | 27.9 | 670.7 | 23.62 | 2602.50 | 26.10 |

*தகவல் : மத்திய திட்டக்குழு*

■ ஏழையிடம் கொசுவிடமிருந்து தன்னைப் பாதுகாக்க எவையெல்லாம் இல்லை?

அ. ______________________ இ. ______________________

ஆ. ______________________ ஈ. ______________________

■ கொசு ஏழையிடம் மட்டும் ஏன் இரத்தம் குடிக்க முடிந்தது?

காரணம்

அ. ______________________ இ. ______________________

ஆ. ______________________ ஈ. ______________________

■ நீ அறிந்த ஒரு செல்வந்தர், ஒரு ஏழை இருவரையும் ஒப்பிட்டுப் பார்

அ. செல்வந்தரிடம் காணும் வசதிகள் யாவை?

______________________

______________________

ஆ. ஏழையிடம் இல்லா அடிப்படை தேவைகள் யாவை?

______________________

______________________

**பி**ரிவு 11(2) பசியின் கொடுமையில் இருந்து விடுதலை பெறும் உரிமை அனைவருக்கும் உண்டு. சர்வதேச ஒத்துழைப்புடன் தொழில்நுற்ப மற்றும் அறிவியல் ரீதியாக உணவு உற்பத்தி, சேமிப்பு மற்றும் விநியோகத்தினை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் வழிமுறைகளையும் வகுக்க வேண்டும் என உறுப்பு நாடுகளை இவ்வுடன்படக்கையின் இப்பிரிவு கூறுகிறது.

*– பொருளாதார, சமூக கலாச்சார உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்படிக்கை – 1966*

**உ**யிருக்கும், சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு

*– அகில உலக மனித உரிமைப் பிரகடனம், பிரிவு – 3*


| வசதிகள் | செல்வந்தர் | ஏழை |
|---|---|---|
| **வீடு**<br>மாடி வீடு<br>குடிசை வீடு | ☑ | ☒ |
| **வாகனம்**<br>சைக்கிள்<br>கார் | | |
| **நல்ல உடை**<br>உயர் தர ஆடை<br>வேட்டி சட்டை | | |
| **சத்துள்ள உணவு**<br>மூன்று வேளை<br>ஒரு வேளை<br>கஞ்சி | | |
| **கல்வி**<br>அரசுப் பள்ளி<br>ஆங்கிலப் பள்ளி | | |
| **மருத்துவம்**<br>அரசு மருத்துவமனை<br>தனியார் மருத்துவமனை | | |
| **நீர்**<br>வீட்டிலேயே குழாய்<br>தெருக்குழாய்த் தண்ணீர் | | |

– மேலும் நீங்கள் பார்க்கிற வேறுபாடுகளையும் இணைத்துக் கொள்

– மனிதர்க்குள்ளேயே இத்தனை வேறுபாடுகள் ஏன் என்பது பற்றி யோசி.

பாகுபாட்டின் விளைவு 3

## சாப்பாடு போடாமல் தனிஅறையில் சித்ரவதை



“வெளிநாட்டில் வேலை செய்தால் நிறைய சம்பளம். எதிர்காலம் நன்றாயிருக்கும் என்று நம்பி கடன் வாங்கி, இருக்கிற சொத்துக்களை விற்று தரகருக்கும் பணம் கொடுத்தோம். நாங்கள் 5 பேர், மலேசியா சென்று சேர்ந்தவுடன், மலேசியாவில் உள்ள சீனபுரோக்கரிடம் எங்கள் 5 பேரையும் விற்று விட்டனர். சின்ன அறை

ஒன்றில் எங்களை அடைத்து வைத்தனர். அவ்வறையில் 40 பேர் அடைக்கப்பட்டிருந்தனர். அங்கிருந்த ஒரு கம்பெனியில் வேலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு 10 நாட்கள் வேலை பார்த்தோம். 10 நாட்களும் சாப்பாடு முறையாகத் தரவில்லை. சம்பளத்தையும் புரோக்கரே வாங்கிக் கொண்டார். புரோக்கரிடம் புகார் சொல்லிய போது, மீண்டும் அறையில் அடித்துச் சித்ரவதை செய்தனர். பட்டினி போட்டார். கொலை செய்வோம் என்று மிரட்டினர். அப்படியே வேலை செய்தாலும், ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை செய்யச் சொன்னார்கள்.'' மலேசியாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி சித்திரவதைக்குள்ளான இளைஞர்கள். ***- தினகரன் 13.06.2004***

**வகுப்புப் பயிற்சி**

– இவர்கள் ஏன் வெளிநாட்டுக்கு வேலை தேடிச் சென்றனர்.

______________________________

______________________________

- கடன் வாங்கிக்கூட வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டிய அவசியம் என்ன?

______________________________

______________________________

- மலேசிய முதலாளிகளிடம் இந்தியத் தொழிலாளர்கள் இவ்வளவு அவமானம் படவேண்டிய காரணம் என்ன? டிக் செய்க

அ. வெளிநாட்டு மோகமா? ☐

ஆ. வேலைவாய்ப்பின்மையா? ☐

இ. வறுமையா? ☐

- இந்த இளைஞர்களை மலேசிய நாட்டு முதலாளிகள் பாகுபடுத்த என்ன காரணம்

அ. ஏழைகள் என்பதால்? ☐

ஆ. வெளிநாட்டுக்காரர்கள் என்பதாலா? ☐

இன்மையின் இன்னாதது யாது? எனின், இன்மையின்
இன்மையே இன்னாதது.
(வறுமைபோல கொடியது எது?
வறுமை போல கொடியது வறுமைதான் – வேறு எதுவுமில்லை)

*– திருவள்ளுவர்*

**பாகுபாட்டின் விளைவு 4**

## அரும்பு



எட்டு வயதுச் செல்வி. காலை 4 மணி. அடுப்புச் சாம்பலில் பல்லைத் தேய்த்தாள். கஞ்சியைக் குடித்தாள். தலையில் எண்ணெய் வைத்துப் பின்னிக் கொண்டாள். கணக்குச் சீட்டையும், சில்லறை டப்பாவையும் எடுத்துக் கொண்டாள். சோறு வைத்த தூக்குச் சட்டியை நீட்டினாள் தாய் வேலாயி.

செடிக்குச் செடியா உட்கார்ந்து பறக்கிற தட்டானைப் போல . . .. தெருவுல ஓடி விளையாட வேண்டிய சின்ன அரும்பு செல்வி, விடியுறதுக்கு முந்திப்போய், பாடுபட்டு, பொழுதடைஞ்சு இருட்டுனப்பிறகு வீடு வந்து சேரும் கொடுமை. கண்ணு முழியாத இந்தக் குஞ்சு ஒழச்சுக்காலம் ஓட்ட வேண்டிய தாயிடுச்சே என்று வேலாயி கவலைப்பட்டாள். தீப்பெட்டி ஆபிசில் செல்வி வேலை செய்து இப்படியே வாழ்க்கை போய்க் கொண்டிருந்த போது கம்பெனி ஏஜெண்டு ஒரு நாள் வந்து செய்தி சொன்னான். "சின்னப் புள்ளைகளை வைச்சு வேலை வாங்கக் கூடாதுன்னு சட்டம் இருக்காம். அப்பப்ப அதிகாரிங்க வந்து, புள்ளைகளை வேலை செய்றதைப் பார்த்துட்டு, ஆயிரக் கணக்குல அபராதம் போட்றாங்க அதனால செல்வி இனிமேல் வேலைக்கு வரவேண்டாம்" என்றார்.

வேலாயி அலறினாள். "அடக் கொடுமையே! பெத்தவுகளைக் காப்பாத்தாத சட்டம், புள்ளைக மேல இரக்கப்பட்டு, திங்குற சோத்துல மண்ணைப் போடுதாக்கும். புள்ளைகளைக் கொடுமைப் படுத்த பெத்த தாய்க்கு ஆசையாகவா இருக்கும்? வவுத்துக் கொடுமை... வறுமைப் பொழைப்பு... வேற புகல் இல்லையே, இதையும் மறிக்கிராளாக்கும்... பாவிப்பய!"

"மொதலாளி கண்டிசனா சொல்லிட்டாரு. இந்த வாரத்தோட, நம்ம செல்வி மாதிரியான சின்னப் புள்ளைகளையெல்லாம் நிறுத்தியாகனுமாம்." ஏஜெண்டு இப்படிப் பதில சொன்னான்.

"தம்பி, வாரத்துக்குத் தொண்ணூறு ரூவா இந்தப் புள்ளை கொண்டு வருது. இதுலேதா ரெண்டு

**சமஉரிமைகளே சனநாயகம்**

**நியாயமான தேர்தல்கள், பேச்சுச் சுதந்திரம், கருத்துரிமை, சட்டத்தின் ஆட்சி என்பன சனநாயகத்தின் தலையாய பண்புகள். ஒரு சனநாயக முறை வெற்றி இவை மட்டும் போதா. குடிமக்களுக்கான சமஉரிமைகளைப் பேணா எந்தச் சனநாயகமும் பொருளற்றது.**

***– EPW - March 15, 2003***

சீவனோட சீவனம் நடக்குது. இதுக்கு ஒரு மாத்து யோசனை இல்லியா . . ய்யா?"

"இருக்கு . . ஆனா நீங்க செய்யணுமே . ."

"சொல்லுய்யா?"

"நம்ம செல்வி சின்னப் புள்ளைதா, இருந்தாலும் **சும்மாவாச்சும் தாவணியைச் சுத்தி அனுப்புங்க**. மத்ததை நான் பாத்துக்கிறேன்.

யக்கா, மனசுல ஞாபகம் வச்சுக்குங்க. தாவணி போட்டா திங்கட்கிழமை வேலைக்கு வரலாம். இல்லேன்னா . . நின்னுக்கிட வேண்டியதுதான்."

இப்படியும் ஒரு கொடுமையா? அததுக்குரிய **வயசு வராமே, விரலைச் சூப்புற புள்ளைக்கு** எப்படி தாவணி போடுறது? ஊரை அழைச்சு, உறவைக் கூப்பிட்டு, விருந்து வைச்சு, தாய் மாமன் சீர் வரிசையோட, கூடுன கூட்டத்திலே போட வேண்டிய தாவணியை . . . சட்டத்தை ஏமாற்றதுக்காக எப்படிப் போட அடக்கடவுளே, எளியவங்க **பொழப்பை எதுக்கு விதி இப்படிப் பிய்ச்சுப் பிடுங்கிப் போடணும் ?**

வேலாயி, செல்வியை அழைத்து தாவணி அணிய வேண்டுவதைச் சொன்னாள். நான் இப்போ தாவணி போட மாட்டேன். முடியவே முடியாது. அதைவிட உசுற விட்டுடுவேன் என்றாள் செல்வி.

தாவணி போடா விட்டால், நோய்க்கார அம்மா என்ன செய்வாள். செல்விக்கு என்ன செய்றதுன்னு தெரியவில்லை. அவள் மனசே தளர்ந்து போச்சுது.

மறுநாள் செல்வி தாவணியை கையிலே மடிச்சு வைத்துக் கொண்டு வேலைக்குப் போனாள்.

*– மேலாண்மை பொன்னுச்சாமி (சுருக்கம்) நூல், அற்றது பற்றெனில்*

**மாணவ மாணவியரே !**

*கதையை மீண்டும் மீண்டும் படியுங்கள்.*
*படித்த பின்பு கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை தாருங்கள்.*

அ. செல்விக்கு வயது எட்டு, இக்கதையை படிக்கின்ற உங்களைக் காட்டிலும் வயது குறைந்தவள் செல்வி, நீங்களெல்லாம் படிக்கின்ற போது, செல்வி வேலைக்குச் செல்வதன் காரணம் என்ன?

வறுமையா? ☐

அம்மாவா ? ☐

**"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து**
**கெடுக உலக இயற்றியான்"**

(ஒருவன் உயிர் வாழ்வதற்கு பிச்சையெடுத்துத் தான் வாழ வேண்டியிருந்தால், அவனைப் படைத்த இறைவனும் பிச்சையெடுத்து திரியட்டும்.) *- திருவள்ளுவர்*

ஆ. எட்டு வயது செல்வி வேலை செய்து தான் குடும்பம் சாப்பிட வேண்டும் என்பது ஒரு உரிமை மீறல் என்பதற்கான இரண்டு காரணம் சொல்.

1. ______________________________

2. ______________________________

இ. செல்வியைப் போன்ற குழந்தைகள் காலையில் குளித்து, யூனிபார்ம் அணிந்து கையில் புத்தகம் எடுத்து பள்ளிக்குச் செல்கின்றனர்.

– செல்வியோ, காலை நான்கு மணிக்கு எழுந்து கம்பெனி வண்டியிலேறி கிழிந்த ஆடையுடன் பகலெல்லாம் வேலை செய்து அம்மாவுக்கு உணவு தருகிறாள். செல்விக்கு நிகழ்ந்த இந்த நிலைக்கு என்ன பெயர்?

______________________________

______________________________

ஈ. சின்னப் பெண் குழந்தைகள் ஆசையாகத் தாவணி கட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். மற்றபடி பெண் குழந்தைகள் தாவணி அணிய ஒரு காலம் உண்டு. உறவினர் எல்லோரும் வந்திருக்க, மகிழ்ச்சியாக நடத்தப் பெறும் சடங்கில் தாவணி உடுக்கச் சொல்வர்.

– செல்வியை எதற்காக தாவணி உடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர்?

______________________________

______________________________

– எட்டு வயது செல்வியைக் கட்டாயப்படுத்தி தாவணி உடுக்க சொல்வது வன்முறை இல்லையா?

ஆம் ☐ இல்லை ☐

உ. பெண் குழந்தையாக இருந்து செல்வியைப் போன்றதொரு சூழலில் தாவணி உடுத்த வேண்டி வந்தால் உன் மனநிலை எப்படியிருக்கும் என்பதனை ஒரு கடிதமாக எழுது பார்ப்போம்.

______________________________

______________________________

______________________________

ஊ. வறுமையின் காரணமாக செல்வி இழந்தவைகள் யாவை?

எ.டு.

அ. விளையாட்டு

ஆ. ______________________


இ. ______________________

ஈ. ______________________

உ. ______________________

பாகுபாட்டின் விளைவு 5

## குழந்தையை விற்க வைத்த சோகம்



குடும்பக் கஷ்டத்தால் நாங்கள் குடும்பத்துடன் பெங்களூருக்குப் பிழைக்கப் போனோம். எங்களை தேவனநல்லி பகுதியில் உள்ள கல்குவாரிக்கு அழைத்துச் சென்றனர். கல்குவாரியில் எவ்வளவு வேலை செய்தாலும் ஒரு வேளை சாப்பாடுதான் கிடைக்கும். வேலைக்கான கூலி கிடையாது. கடந்த மே மாதம் 10ஆம் தேதி கர்ப்பமாக இருந்த எனது மனைவிக்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தையை எங்களால் வளர்க்க முடியவில்லை. பால் வாங்கக் கூட பணம் இல்லை. மேலும் கல்குவாரியில் இருந்து தப்பிச் செல்வதற்கும் பணம் தேவைப்பட்டது. இதனால் கடந்த 21ஆம் தேதி பிறந்து 20 நாளான எனது பெண் குழந்தையை அந்த பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் 100 ரூபாய்க்கு விற்றுவிட்டு கிடைத்த பணத்தைக் கொண்டு தப்பி வந்துவிட்டோம்.


*- காலைக்கதிர் - 25.5.2004*

**சிந்தனைக்கு**

- பெற்ற குழந்தையைக் கூட விற்க வைத்த சூழல் எது?

  அ. வறுமை ☐

  ஆ. குழந்தைகள் மீது வெறுப்பு ☐


சமத்துவ
சமுதாயத்திற்கான
மாணவர்
சாசனம்

# சமத்துவ சமுதாயத்திற்கான மாணவர் சாசனம்

***மாணவ, மாணவியரே!***

பாடங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வாருங்கள். பாகுபடுத்தப்பட்டவர்கள் யாரெல்லாம் என்று நினைவுபடுத்துங்கள்.

- பெண்கள்
- ஏழைகள்
- தாழ்த்தப்பட்ட சாதியினர்
- அகதிகள்
- பழங்குடியினர்
- மதச் சிறுபான்மையினர்
- கருப்பின மக்கள்

ஒவ்வொரு பிரிவினரும் எப்படியெல்லாம் பாகுபடுத்தப்பட்டனர் என்று கொஞ்சம் நினைவுபடுத்துங்களேன்.

மக்களுள் இவர்கள் மட்டும் ஏன் பாகுபடுத்தப்படுகின்றனர்?

இரத்தமும் சதையோடும் கூடிய நம்மையொத்த மனிதர் பாகுபடுத்தப்படுதல் உங்கள் நெஞ்சத்தினைத் தொடவில்லையா?

இப்பாகுபாட்டினைக் களைய நாம் ஏதாவது செய்ய வேண்டாமா?

## என்ன செய்யலாம்?

மனிதம் சிதைக்கப் பெறுகின்ற போதெல்லாம், கண்ணீர் வடித்தோர் பலர்; கலங்கியோர் பலர்; கண்டு பொறுக்கவியலாமல் வெகுண்டெழுந்தோர் பலர்; போராடியோர் பலர். இவர்கள் தம் இவ்வுணர்வுகள் தாம் உரிமைக் காப்புச் சட்டங்களாய் மாறின. தேசங்களிலும், அகில உலகு எங்கும் மனித உரிமைக் காப்பாளர்களும் தோன்றினர்; காப்பு நிறுவனங்களும் தோன்றின; காப்புச் சட்டங்களும் தோன்றின. மனித உரிமை காப்பாளர்களின் கனவு நனவாகிட, மனித உரிமை காப்பு நிறுவனங்களையும், உரிமைச்

சட்டங்களையும் வலுப்படுத்தவும், காத்திடவும் மாணவர்களாகிய நாம் துணை நிற்க வேண்டாமா?

மனிதர்களே மனிதர்களைப் பாகுபடுத்தும் வன்முறையை அறிய வாய்ப்பு பெற்ற மனித உரிமைக் கல்வியை கற்கும் மாணவ, மாணவியராகிய நாங்கள் பாகுபாடற்ற ஒரு சமத்துவ சமுதாயம் உருவாக துணை நிற்போம் என உறுதியேற்கின்றோம். இனி வருங்காலங்களில் ஒரு பாகுபாடற்ற சமூகம் உருவாகும் வகையில் கீழ்க்கண்டவாறு ஒரு சாசனத்தை தமிழக அரசுக்கும், இந்திய அரசுக்கும், அய்க்கிய நாட்டு அவைக்கும் ஒரு வேண்டுகோளாக வைக்கிறோம்.

## சாசன முன்னுரை

### பாகுபாடு

நாகரிகச் சமூகத்திற்கும், மானுட மரியாதைக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும்

எதிரானது.

ஒடுக்கல், ஒதுக்கல், சுரண்டல், அவமானம் எனும் பண்புகளையுடைய சமூகத்தில் சமத்துவம்

இல்லை.

### பாகுபாட்டில்

உறவு இல்லை;

உரையாடல் இல்லை;

ஒருவரோடு ஒருவர்கொள்ளும் நம்பிக்கை இல்லை;

மரியாதை இல்லை;

சுதந்திரம் இல்லை;


எனவே, மனிதம் இல்லை;

மனிதாபிமானமும் இல்லை ;

இவை மட்டுமா?

ஏன்?

**சனநாயகமே** இல்லை.



சனநாயகத்தின் அடிப்படைப் பண்பே சமத்துவம் என்றால்,

சனநாயகம் தரும் அரசியல் சாசனம் இச்சமத்துவத்தைக் காப்பதுதான் என்றால்,

பாகுபாடு நிலவும் சமூகத்தில் சனநாயகம் இல்லை.

சமத்துவமும் இல்லை.

சமத்துவம் காக்கப் பெறா சனநாயகம் பொய்யான சனநாயகம் என்பதால் உண்மையான சனநாயகத்தை, மனித மாண்பையும் உரிமைகளையும் காக்கும் சனநாயகத்தைக் காக்க உறுதியேற்கிறோம்.

## சனநாயகம் என்பது

சமநீதி, சமத்துவம்/ பன்மைச் சமூகப் பங்கேற்பு என்பதன் மறுபெயர் என்பதனையும்

## பாகுபாடு

சனநாயகத்தை
நீதியை
மாண்பை
மனித உரிமைகளை
மானுட மதிப்பீடுகளை

மறுப்பது என்பதனையும் புரிந்து கொண்ட நாங்கள், பாகுபாடற்ற சமுதாயம் காண சூளுரைக்கின்றோம்.

சமத்துவம் இனிமேல்தான் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு மதிப்பீடு என்று நாங்கள் எண்ணவில்லை. சமத்துவம் எனும் உணர்வு ஏற்கனவே மனிதருள், சமூகத்துள் இருப்பது. இது இயற்கையானது.

பாகுபாடு மனிதன் உருவாக்கியது. இது மனிதன் உருவாக்கிய முரண்பட்ட மதிப்பீடு. மானுடம் சிதைக்கும் பாகுபாடுதான் சமத்துவத்தைக் காப்பதற்கான காப்பாளர்களையும் மனித உரிமைச் சட்டங்களையும், சாசனங்களையும், உடன்படிக்கைகளையும் உருவாகக் காரணமாக அமைந்தது. இந்தச் சாசனங்களை நாங்கள் மதிக்கின்றோம். இந்தச் சாசனங்கள் மீண்டும் உயிரூட்டம் பெற கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைக்கிறோம்.

**அரசுகளே !**


- பாகுபடுத்தல் ஒரு வன்முறை என்பதால் இது மனித உரிமை மீறலே. இப்பாகுபாட்டை வெறும் சட்டங்களால் மட்டுமே களைய முடியாது. பாகுபாடற்ற சமத்துவ சமுதாயம், ஒரு கலாச்சாரமாக சமூகத்தில் வளர்க்கப்பட்டாலொழிய பாகுபாட்டைக் களைவது சாத்தியமில்லை. எனவே, மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்க்கும் மனித உரிமைக்

கல்வியைத் தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக அறிமுகப் படுத்த அரசை வேண்டுகிறோம்.




- சாதி ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்துவது, சமத்துவமின்மையை நிலைப்படுத்துவது. சமத்துவமற்ற தன்மை பாகுபாட்டை உருவாக்குகிறது. தீண்டாமை எனும் பாகுபாடு சாதி பெற்றெடுத்த குழந்தை. சாதி ஒழியாவிடில் தீண்டாமை ஒழியாது. எனவே தீண்டாமைக் கெதிரான நடவடிக்கைகளோடு சாதி ஒழிப்புக் கொள்கைக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டுகிறோம். வருங்காலங்களில் மக்களைப் பாகுபடுத்தும் சாதி ஒழிப்புக்கு மாணவர்களாகிய நாங்களும் துணை நிற்போம் என உறுதி கூறுகிறோம்.

- அரசியல் சாசனத்தில் தீண்டாமை ஒழிக்கப்பட்டாலும் நடைமுறையில் தீண்டாமையின் அனைத்துக் கோர வடிவங்களும் இன்னும் ஒழியவில்லை. தீண்டாமை ஒரு வன்முறை, தீண்டாமை ஒரு சித்ரவதை, தீண்டாமை ஒரு மனித உரிமை மீறல் என்பதனால், தீண்டாமையை ஒழிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டவிதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதோடு, இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வைச் சட்ட நடைமுறைப்படுத்துவோரும் பாதிக்கப்படுவோரும் அறியும் வகையில் அரசு பயிற்சிகளைத் தர ஏற்பாடு செய்தல் வேண்டும்.





- நம் சமூகத்தில் தாழ்த்தப்பட்டோர் என்போர் சாதியால் தாழ்ந்தவர்கள். பொருளாதார ரீதியிலும் தாழ்த்தப்பட்டவர்கள். தாழ்த்தப்பட்டோர் பாகுபடுத் தப்படுகின்றனர்; சுரண்டப்படுகின்றனர். தீண்டா மைக்குள்ளாகின்றனர். சமூக, கலாச்சார பொரு ளாதார ரீதியாக இவர்கள் அதிகாரம் பெறும் வகையில் அரசு உரிய முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

- அரசியல் சாசனத்தில், சமத்துவம் கருதி உருவாக்கப்பட்ட இடஒதுக்கீட்டு முறைகள்

தனியார்மயம், தாராளமயம் போன்ற புதிய பொருளாதாரக் கொள்கைகளால் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிடப் பட்டு வருகின்றமையால், தனியார்த் துறைகளிலும் இடஒதுக்கீடு முறையை அரசு நடைமுறைப்படுத்துதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

- கல்வியில் சமத்துவம் வேண்டும். ஏழையர்க்கு வசதியற்ற, தரமற்ற கல்வி, செல்வர்க்கு அனைத்து வசதி களோடும் கொடுக்கப் பெறும் கல்வி. இம்முறை அநீதியானது. கல்வியில் காட்டப் பெறும் பாகுபாட்டை ஒழித்து, கட்டாய, தரமான கல்வியை அனை வர்க்கும் சமமாகத் தர அரசை வேண்டு கிறோம்.




## இந்திய அரசே

- நலிந்த பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட்ட தேசிய மனித உரிமை ஆணையம், சிறுபான்மையினருக்கான ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையம் போன்ற ஆணையங்களை நாங்கள் மதிக்கிறோம். இவ்வாணையங்கள் தேசிய அளவிலும், அகில உலக அளவிலும் உருவாக்கப்பட்டுள்ள பாகுபாட்டிற்கெதிரான மனித உரிமைச் சட்டங்கள், பிரகடனங்கள் முறையாக நடைமுறைப்படுத்துப்படுகின்றனவா என்று உன்னிப்பாகக் கண்காணிக்கின்ற சுதந்திர நிறுவனங்களாகச் செயற்பட வகை செய்யப் பெற வேண்டுகிறோம்.

- மக்களில் பாதிப்பேராம் பெண்களின் மீது காட்டப்பெறும் பாகுபாடு ஒரு பெரிய மனித உரிமை மீறல் என்பதாலேயே நாடாளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சிமன்ற அமைப்புகளில் பெண்களுக்கான 50% இட ஒதுக்கீட்டை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

- மதத்தின் பெயரால் மக்களைப் பிரித்து, பகை வளர்ப்போரை கடுமையான சட்டங்களால் தண்டிக்க வேண்டுகிறோம்.

- மொழி, மதச்சிறுபான்மையினர் இந் நாட்டின் சமவுரிமை பெற்ற குடிமக்கள் என்ற உணர்வை ஊட்டும் வகையில் அரசு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டுகிறோம்.




- சிறுபான்மையினரின் கலாச் சாரம், மொழி, தனித்தன்மை காக்கின்ற வகையில் உருவாக் கப்பட்ட சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

- கனவிலிருந்து கல்லறை வரை பாகுபாட்டிற்குள்ளாகும் பெண் களின் ஒவ்வொரு நிலையிலும் தன்னம்பிக்கையோடு, சொந்தக்காலில் பெண்கள் நிற்கின்ற வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

- இந்தியா சுதந்திரமடைந்த பிறகு பெண்களின் விடுதலைக்காகவும், பெண்களின் பாதுகாப்பிற்கும் அரசுகள் நிறைய சட்டங்களை இயற்றியுள்ளன. இச்சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை பெண்கள் பெறவில்லை என்பதால், இச்சட்டங்கள் பற்றிய அறிவு பெண்களை அடையும் வகையில் பயிற்சி நடத்தப்பெற வேண்டும்

- பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். கல்வியின் அனைத்துக் கட்டங்களிலும் பெண்கள் கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற வேண்டும்

- இந்த நாட்டின் ஒற்றுமையை விரும்புகிற நாங்கள், மக்களை பிறப்பிட அடிப்படையில் பாகுபடுத்துவதை வெறுக்கிறோம். மண்ணின் மைந்தர்கள் என்ற பெயரில் பிற மாநிலத்தவரை வெறுப்பது, வேலை வாய்ப்பை மறுப்பது, ஒடுக்கி ஒதுக்குவது போன்ற செயல்களைத் தடை செய்ய வேண்டும்.

- நாடிழந்து, நம் நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ள அகதிகளைப் பாகுபடுத்தாமல், அகதிக் குழந்தைகளின் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய வேண்டுகிறோம்.

- பூர்வீகக் குடிமக்களின் தனித்தன்மை, பண்பாடு, இவைகளை மதிக்கிறோம். இவர்களின் வாழ்விடங்கள் பறிபோகாமலிருக்கவும், நாட்டின் வளர்ச்சித் திட்ட பயன்களில் இவர்களுக்குரிய பங்கினை இவர்கள் பெறவும் வழிவகை செய்யப்பெற

வேண்டும். இவர்கள் கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளைப் பாகுபாடு இல்லாமற் பெறவும் வகை செய்யப்பெற வேண்டும்.




**ஐக்கிய நாட்டுச் சபையே!**

- மனித உரிமைகளைக் குறிப்பாக நலிந்த பிரிவினரின் உரிமைகளைக் காக்கும் வகையில் உறுப்பு நாடுகளின் ஒப்புதலோடு உருவாக்கப் பட்ட உடன்படிக்கைகளை, உறுப்புநாடுகள் முறையாக நடைமுறைப்படுத்துகின்றனவா என்பதனைக் கண்காணிக்க வேண்டுகிறோம்.
- மனித உரிமைச் சட்டமும், சாசனமும் மட்டும் பாகுபாடுகளைக் களைய உதவாது என்பதனால் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகளை உருவாக்கிய அய்க்கிய நாட்டவை, இப்பத்தாண்டுகளை மேலும் 10 ஆண்டுகள் நீடிக்க கேட்டுக்கொள்கிறோம்.
- மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகளை ஏற்றுக்கொண்ட உறுப்பு நாடுகள் மனித உரிமைக் கல்வியைக் கட்டாயப் பாடமாக்க அறிமுகப்படுத்திட வேண்டுகிறோம்.

**உலகச் சமூகத்திற்கு!**

- ஏற்றத்தாழ்வை உருவாக்கும் பாகுபாட்டை நாங்கள் வெறுக்கிறோம். நாளைய உலகம் எங்களது: போர், ஆக்கிரமிப்பு, பாகுபாடு, ஆதிக்கம், அநீதி ஒழிந்து, அன்பு, சமத்துவம், அமைதி நிறைந்த உலகமே எங்கள் உலகாய் இருக்க விரும்பு கிறோம். எங்களின் இவ்வினிய கனவைப் பொய்யாக்க முனையும் சக்திகளை அனுமதியோம். நாங்கள் பன்மையை மதிக்கிறோம்: வேறுபாட்டை ஏற்றுக் கொள்கிறோம்: ஆனால் வேறுபாட்டின் பெயரால் பாகுபடுத்துதலை அனுமதியோம். இச்சூழலை உருவாக்கிட உலகச் சமூகம் தோள்கொடுக்க வேண்டுகிறோம்.
- அமைதிக்கான உரிமை, அடிப்படை உரிமை என்கிறோம். அமைதியைக் குலைக்கும் அனைத்துப் போர் நடவடிக்கைகளையும் வெறுக்கிறோம். வலிந்து திணிக்கப் பெறும் போர், யதேச்சதிகாரத்தின் அடையாளம் என்பதால், மக்கள் மீது திணிக்கப்பெறும் போரினை நிறுத்தும் முயற்சியினை ஐக்கிய நாட்டு சபை எடுத்திட வேண்டுகிறோம்.

